திருவண்ணாமலை.மெ.க.அன்னசத்திரம்.

125ஆவது ஆண்டு நிறைவு விழா மலர்



6-12-1997

திருவண்ணாமலை. மெ. க. அன்னசத்திரம்

1872 — 1997



6-12-1997

125 ஆவது ஆண்டு நிறைவு விழா மலர்

உ

சிவமயம்

125 ஆண்டுகள் ஒரு நிறுவனம் தொடங்கிய காலத்திலிருந்து, நிலைத்து நின்று, தன் பணியை ஓய்வின்றி, அமைதியாக ஆண்டுதோறும் செய்து வருவது என்பது அவ்வளவு எளிதான செயல் இல்லை. ஆனாலும் மெ. க. அன்னசத்திரத்தினை ஆரம்பித்த நல்ல மனம் படைத்த மூவரின் நல்லாசியினால்தான், இன்று இப்பெரிய விழாவினை, 125ஆம் ஆண்டு நிறைவு விழாவினை நம்மால் கொண்டாடமுடிகின்றது.

ஒரு நிறுவனம் நன்றாக நடக்க வேண்டும் என்றால், அதனை சார்ந்த நல்ல உள்ளங்கள் ஒற்றுமையாக இருந்தால்தான் நல்லமுறையில் நடத்த முடியும். நம்முடைய மெ. க. உள்ளீட்டார்கள் தந்துவரும் நல்ல ஒத்துழைப்பைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

125 ஆண்டுகள் நிறைவை ஒட்டி ஒரு மலர் வெளியிட எண்ணியபோது, அதனைத் தமிழறிந்த பேராசிரியர் ஒருவரிடம் கொடுக்க எண்ணினோம். அழகப்பா பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பணியாற்றியவரும், தமிழ்க்கடல் ராய. சொவின் அணுக்கத் தொண்டராகவும் இருந்த நண்பர் இராம. இராமநாதன் அவர்களிடம் இப்பணியை முடித்துத்தர கேட்டோம். மறுப்பேதும் கூறாது அவருடைய கணிப்பொறியைப் பயன்படுத்தி, நமக்கு மலர் தொடர்பாக எல்லாப் பணிகளையும் செம்மையுறச் செய்து, இன்று அழகிய மலரினை நமக்கு தந்துள்ளார்கள். அவர்களுக்கு நம் மெ.க. மடத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மெ.க. அன்னசத்திரத்தின் நடவடிக்கைகளில் எங்களோடு உடனிருந்து எல்லா வகையிலும் ஏற்றம்பெற உதவிசெய்த என்னருமை மெ.க. உள்ளீட்டார்களுக்கும், எங்கள் பணிவார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.


மலருக்கு மணமும் சிறப்பும் தருபவர்கள் மதிப்புமிக்க விளம்பரதாரர்களே அவர்களின் ஒத்துழைப்பினால்தான் உரிய நேரத்தில் இம் மலர் பொலிவுடன் மலர்ந்து உங்கள் கைகளில் தவழ்கின்றது. விளம்பரம் தந்து உதவிய அன்பு நெஞ்சங்களுக்கு மெ.க. அன்னசத்திரத்தின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இம்மலரை உரிய நேரத்தில் விரைவாக அச்சிட்டு தந்து உதவிய சௌத் இந்தியா பிரஸ் உரிமையாளர்களுக்கும் நன்றி உரித்தாகுக.

இப்படிக்கு,

அ.க.ராம.கரு. ராம. சித. நாராயணன்,
க.வீ.சொ.வீ.அழ.சித. அழகப்பன்,
ராம. அழ. ராம. ராம. முத்தையா.
(நடப்பு விசாரணைதாரர்கள்)

பண் அடுத்த கூடல்
பழம்பதியில், பிட்டமுதை
உண்ண அடுத்து. வைகை
உடையாமல் - மண் எடுத்துப்
போடுமலை சந்ததமும்
பொன்னம் பலத்தில்நடம்
ஆடுமலை, அண்ணா மலை.



SRI ARUNACHALESWARAR

PHOTO OFFSET PRINTED BY

உண்ணா முலையாள்
ஒருபாகம் ஆனமலை
கண்ணார் அமுதாய
காட்சிமலை விண்ணோர்
துதிக்கு மலை அன்பர்
தொழுதுஏத்தி நாளும்
மதிக்குமலை, அண்ணா மலை



SRI ABEETHAKUCHAMBAL

உ

சிவமயம்

பதிப்பாசிரியர் வணக்கம்

அன்னசத்திரம் என்ற ஆருயிர் காக்கும் அருமருந்தாம் உணவளிக்கும் மெ. க. மடத்தினர் இயற்றும் தொண்டு, இடையீடின்றி 125 ஆண்டுகள் தொடர்ந்து நடைபெறுவது ஓர் அரிய முயற்சியாகும். கோட்டையூரின் பெருமைக்குத் திருவண்ணாமலையிலுள்ள மெ. க. அன்னசத்திரமும் அற்புதச் சான்றாக ஒளிர்கின்றது. நாட்டுக்கோட்டை நகரத்தார் தம் அறப்பணிகள் கோயில் கட்டுமானப்பணிகளோடு நின்றுவிடாமல், வழிபடவரும் யாத்ரிகர்களுக்கு வயிற்றுத்தீத்தணிய வழங்கும் அன்னச்சத்திரப்பணி அனைத்திலும் உயர்ந்த தொண்டாகும்.

அண்ணாமலையாரின் பேரருளால் அவரை வழிபடும் மெ.க. குடும்பத்தினர் நாளும் எல்லாச் செல்வமும் பெருகி, வருவோரையும் போவோரையும் வாழவைக்கும் அருள் உள்ளம் மிகப்பெற்ற பெருமக்கள்.

125 ஆண்டுகள் நிறைவுற்றுச் சிறப்புற விழா எடுக்கும் மெ.க. குடும்பத்தினரின் திருப்பணிகள் எழுத்திலடங்கா. அவற்றைப்பற்றிய குறிப்புக்கள் இம்மலருள் இடம் பெற்றுள்ளன.

இவ்விழாவினை ஒட்டி ஒரு மலரினைக் கொணரும் முயற்சியில் அடியேனையும் பங்குபெறச் செய்ய வேண்டும் என்று என் மதிப்பிற்குரிய நண்பர் ராம. முத்தையா அவர்கள் விரும்பினார்கள். 65 ஆண்டுகளைக் கடந்த எனக்கு அண்ணாமலையார் பணி செய்யக் கிடைத்த பெரும்பேறு என்று ஏற்றுக்கொண்டு, இயன்றவரை சிறந்த பேராசிரியப் பெருமக்களின் எழுத்தோவியங்களை உங்களுக்கு வழங்கியுள்ளேன். அண்ணாமலையாரின் அரிய புகழுக்கு அணிசேர்க்கும் வண்ணம் நாளும் மெ.க. மடத்தினர் எல்லா நலங்களும் பெற்றுச் சிறக்கவும், மெ.க. அன்னசத்திரம் மேலும் வளர்ந்து நல்ல தொண்டினை, அப்பகுதி மக்களுக்கு வழங்கவேண்டும் என்று அண்ணாமலையாரைப் பணிந்து வேண்டுகிறேன்.

அன்பன்

இராம. இராமநாதன்

உ

போன் : 22115

ஸ்ரீ சந்த்ரமௌளீச்வராய நம:

ஸ்ரீ சங்கர பகவத் பாதாசார்ய பரம்பராகத

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு

ஸ்ரீ சங்கராச்சாரிய ஸ்வாமிகள் அவர்கள்


ஸ்ரீமடம் ஸம்ஸ்தானம்

நெ.1, சாலை தெரு, காஞ்சிபுரம் – 631502.


தமிழகத்திலுள்ள தேஜஸ்தலமாகி நினைத்த மாத்திரத்திலேயே முக்தியளிக்கும் பெருமை பெற்று லிங்கஸ் வருபமாகிய மலையைப் பெற்று ஸ்ரீபரமேசவரன் அருள் பாலிக்கும் திவ்யஸ்தலமாகும் திருவண்ணாமலை. இவ்வூரும் ஆலயத்திருப்பணிக் கேந்திரமாக விளங்கி அன்னசத்திரமாக மாறி ஆலயநித்திய நைமத்திகக் காரியக்ர மங்களுக்கு உதவியும் பல்வேறு திருப்பணிகளை நிறைவேற்றியும் வேதபாடசாலை நடத்தியும் காலத்திற்கேற்றவாறு இன்று யாத்திரிகர்களுக்குத் தங்கும் வசதியுடன் அன்னதானமும் ஏழை எளிய குடும்பச் சிறுவர்களுக்குப் படிப்பிற்கு ஏற்ற வகையில் அன்னதானமும் ஆகிய பல்வேறு பரோபகாரப் பணிகளையும் ஆற்றி வருவதுடன் ஸ்ரீ மடத்தின் அனுக்ரகத்துக்கும் மஹான்களின் ஆசீர்வாதத்துக்கும் பாத்திரமாகிவந்து தனது 125ஆவது ஆண்டு விழாவை வரும் 6.12.97 அன்று நடத்தி மலரும் வெளியிடுகிறது மெ.க. அன்னசத்திரம் என்ற விஷய மறிந்து மிகவும் மகிழ்கிறோம்.

இவர்களது ஆஸ்திகப் பணிகள் காலம் காலமாகத் தொடரவும் இப்பணிகளின் பெருமையை விளக்கி மலர் ஆஸ்திக்யம் மலர வாழ்விற்கு அஸ்திவாரமாக அமைவதை விளக்கி இளைய தலைமுறையினருக்கு நல்ல வழிகாட்டியாக விளங்கித் தங்களது பாரம்பரியத்தைப் பற்றி நிற்க ஊக்க மூட்டவும் உண்ணா முலையானோடுறை அண்ணாமலையானருள்வானாக.


நாரயணஸ்ம்ருதி.




ஐந்தாம் மண்டகப்படி ரிஷப வாகனத்தில் அண்ணாமலையார் உண்ணாமலை



16 கால் மண்டபமும், திருவண்ணாமலை ராஜ கோபுரத்தின் முன் தோற்றம்



மெ.க. அன்னசத்திரத்தின் முன் தோற்றம்



19.5.1967-ம் தேதி நடைபெற்ற அணி அண்ணாமலை மகாகும்பாபிஷேகம்




9.2.1996-ம் தேதி நடைபெற்ற அணி அண்ணாமலை மகாகும்பாபிஷேகம்



மெ.க. அன்னசத்திரத்தில் இலவசமாக படிக்கும் மாணவர்கள்



மாத்தூர் கோயில் முன்தோற்றம்



FATHER BLESSES YOU

ஸ்ரீ ராஜராஜேஸ்வரி துணை

ஜெகத்குரு	ಜಗದ್ಗುರು	Jagathguru
ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ	ಶ್ರೀ ಶ್ರೀ ಶ್ರೀ	Shri Shri Shri
திருச்சிமஹா சுவாமிகள்	**ತಿರುಚಿ ಮಹಾ ಸ್ವಾಮಿಗಳು**	**Thiruchi Maha Swamigal**
"ஸ்ரீ கைலாஸ ஆஸ்ரம மஹாசமஸ்தானம்"	"ಶ್ರೀ ಕೈಲಾಸ ಆಶ್ರಮ ಮಹಾಸಂಸ್ಥಾನ"	**"Sri Kailash Ashram Mahasamasthana"**
கெஞ்சேநஹள்ளி பெங்களூர் – 500 039	ಕೆಂಚೇನಹಳ್ಳಿ, ಬೆಂಗಳೂರು-560 039	Kenchenahally Bangalore - 560 039

24-10-`97

ஸ்ரீ பேரன்பு நிறைந்த திருவண்ணாமலை மெ.க. அன்னசத்திரம் அங்கத்தினர் அனைவருக்கும் சத்குருவின் ஆசீர்வாதம் கொண்டு ஸ்ரீ ஜெயேந்தியபுரி ஸ்வாமி எழுதியது. தாங்கள் எழுதிய 6.10.97 கடிதம் வந்து சேரப் பெற்றோம்.

ஸ்ரீ ஸ்ரீ சத்குரு மஹாசன்னிதானங்கள் அவர்கள் தங்களின் கடிதத்தைக் கண்ணுற்று மெ.க. அன்னசத்திரத்தின் 125 வது ஆண்டு நிறைவு விழா எதிர்வரும் 6.12.97 அன்று நடை பெற இருப்பதறிந்து பேருவகை அடைந்தார்கள். ஷ நிறைவு விழாவும் அதன் நினைவு மலர் வெளியிடும் குறித்த காலத்தே சிறப்புற நடைபெறப் பூரண நல்லாசி வழங்கியுள்ளார்கள்.

மெ.க. குடும்பத்தார்கள் நினைக்க முக்தி தரும் திரு அண்ணாமலைத் திருத்தலத்தில் செயற்கரிய தர்மங்களும், தர்மபரி பாலனங்களும் செய்து வரும் சிறப்புப் பெற்ற திருவாளர்கள். உண்ணாமலை உடனாகிய திரு அண்ணாமலையார் அடிக்கமலம் பணிந்து அவருக்கு பல்வகையாலும் அணிகலன்கள் சேர்த்தவர்கள். தானத்தில் சிறந்த அன்னதானத்தை 1872 ஆம் ஆண்டு முதல் இன்றளவும் இடை விடாது தொடர்ந்து செய்து வருபவர்கள் மெ.க. அன்னச்சத்திரத்தில் ஸ்ரீ அண்ணாமலையார் அக்னி ரூபமாக இருந்து அடியார்களுக்கு அன்னம் பாலித்துவருவது பெரும் பாக்யமாகும்.

மெ.க. குடும்பத்தார்கள் அனைவருக்கும் அருள்மிகு அன்னை ஞானாக்ஷி ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அம்பிகையின் திருவருள் வேண்டி அவள் திருவடிகளைச் சிந்தித்து இத்துடன் திரு அருட் பிரசாதம் அனுப்பியிருக்கிறது எல்லோரும் அணிந்து கொள்ளவும்.

வேணும்

சத்குருநாதன் துணை.

உ
சிவமயம்

திருக்கயிலாய பரம்பரை
சீர் வளர் சீர்
சிவப்பிரகாச பண்டாரச்சந்நிதி அவர்கள்
குரு மகாசந்நிதானம்
திருவாவடுதுறை ஆதினம்

திருவாவடுதுறை – 609803
(நாகை மாவட்டம்)

நாள் 24.10.97

"நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அனேகன் இறைவன் அடிவாழ்க"

வாழ்த்துரை

திருவண்ணாமலை மெ.க. அன்னச்சத்திரம் 125 ஆவது ஆண்டு தொடக்கவிழாச் சிறப்பினைப் பெறுவது அறிய மகிழ்ச்சி.

ஆன்மநேய ஒருமைப்பாடு நிலவி உயர்நலம் விளைய இத்தருமச் சத்திரம் தோற்றுவிக்கப் பெற்று 125ஆவது ஆண்டு தொடக்கவிழா பொருத்தமுறு நிகழ்வுகளைக் கொண்டு நடை பெறுவது பாராட்டுக்குரியது.

விழா நிகழ்ச்சிகள் சிறப்புற நடைபெறவும் மெ.க. தருமச்சாலையின் நல்லறப் பணி நலம் நாளும் வளர்ந்துயர்ந்து உலகில் இன்ப அன்பு பெருக்கவும் அருள அருள்தரு ஞானமா நடராசப் பெருமான் திருவடி மலர்களைச் சிந்திக்கின்றோம்.

பெறுநர்
திரு. சித. நாராயணன் அவர்கள்,
மெ. க. அன்னசத்திரம் 161, தேர் வீதி,
திருவண்ணாமலை - 606 601.

உ
சிவ சிவ

Ph: 56655

கயிலை மாமுனிவர்
திருவளர்திரு காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்
அதிபர், காசித்திருமடம்.

திருப்பனந்தாள் – 612504
(தஞ்சை மாவட்டம்)

தேதி : 1-11-`97

வாழ்த்துரை

திருவண்ணாமலையில் மெ.க. அன்னசத்திரத்தின் 125 வது ஆண்டு விழா எதிர்வரும் 6.12.97 அன்று சிறப்புற நிகழ இருப்பதறிந்து நாம் மகிழ்கிறோம்.

"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தொரே" எனப் புகழப்படும் நிலையில் மெ.க. அன்னசத்திரத்தினைத் தொடங்கி நாளும் அடியார்களும் ஆதரவற்றவர்களுக்கும் உணவளித்து வந்த நிலை போற்றக்குரியது. மேற்படி அன்னசத்திரம் எதிர்காலத்திலும் சிறந்த அன்னம் பாலிப்பினை நடத்தி, அற்றார்க்கும் அலந்தார்க்கும் உறுதுணையாக விளங்கிடவும், 125 ஆம் ஆண்டு விழா சிறப்புற நடைபெற்றிடவும் செந்திற்கந்தன் சேவடிகளைச் சிந்தித்து வாழ்த்துக்கிறோம்.

சுபம்

சிவ சிவ

श्री श्री जगद्गुरु शङ्कराचार्य महासंस्थानम् , दक्षिणाम्नाय श्री शारदापीठम् , श्रृङ्गेरी

Private Secretary
To His Holiness Sri Jagadguru
Shankaracharya, Dakshinamnaya
Sri Sharada Peetham
Sringeri - 577 139 (Karnataka)

Ref.No. : D7/16080
Camp : Sringeri
Date : 27.10.97

Sri AL. CT. Alagappa Chettiar,
K.V.S. House
Kottaiyur - 630 106
P.T.T. Dt. T.N.

திருவண்ணாமலை 161, தேரடி தெரு, மெ.க. அன்னசத்திரம் சார்பாக தாங்கள் 6.10.97 லெட்டர் பெற்று கொள்ளப்பட்டு ஸ்ரீஸ்ரீ ஜகத்குரு சங்கராசாரிய மகா ஸ்வாமிகளின் பாத கமலங்களில் தங்கள் நமஸ்காரத்துடன் சமர்பிக்கபட்டது.

தங்கள் மெ.க.அன்னசத்திரம் 125 ம் நிறைவு ஆண்டு விழா மகோத்ஸவம் நிர்பிக்னமாகவும் சிறப்பாக நடந்து தங்கள் அன்ன சத்திரத்தின் சேவை நன்றாக வளர்ந்து வரவும் இந்த விசேஷ வைபவத்தில் பூர்ண சிரத்தையுடன் நடத்தும் பக்தர்களுக்கும் அவர்களுடன் இந்த மாதிரி பகவத் கைங்கர்யத்தில் ஒத்துழைக்கும் ஆஸ்திக மகா ஜனங்கள் அனைவரும் ஸ்ரேயஸ்ஸீடன் சகல சௌபாக்யங்களுடன் வாழ்ந்து வர ஸ்ரீஸ்ரீ மகா ஸ்வாமிகள் ஆசீர்வதித்து அளித்து அருளிய ஆசீர் மந்திராவுதையும் ஸ்ரீ சாரதா சந்த்ர மௌளீஸ்வரர் ப்ரஸாதமும் அனுப்பி இருக்கிறது.

இப்படிக்கு

உ

சிவமயம் தொலைபேசி : 22646

கோவிலூர் மடம்

கோவிலூர் - 623 319

(காரைக்குடி அருகில்)

தேதி : 9.11.97

ஸ்ரீலஸ்ரீ நாச்சியப்ப ஞானதேசிக சுவாமிகள்
கோவிலூர் ஆதீனகர்த்தர்

அண்ணாமலையான் அடிக்கமலஞ் சென்று வணங்கும் பேறுபெறுதல் புண்ணியமாகக் கருதப்படுகிறது. நினைக்க முத்திதரும் தலம்; தேயு (நெருப்பு) லிங்கமாகச் சிவன் விளங்கும் தலம்; சிவபெருமான், திருமால் நான் முகனுக்கு இடையே, சோதியுருவாய் எழுந்தருளிக் காட்சி தந்தருளிய தலம், திருவண்ணாமலையாகும்.

இத்தகைய பல சிறப்புகள் பெற்ற திருத்தலத்தை மனதில் நுண்ணிதாக எண்ணி மெ.க. அன்னசத்திரம் ஏற்படுத்தி நன்கு நடை பெற்று வருகிறது. 125 ஆண்டுகளாகத் தொடர்ந்து செய்யும் தொண்டு எல்லோருக்கும் மகிழ்ச்சியளிக்கும் என்பது கருதிப் பெருமையடைகிறோம்.

கோவில் திருப்பணி செய்வது நலம் பயக்கும். அத்துடன் கோவிலுக்குத் தினமும் நேரம் தவறாமல் அபிஷேகப் பொருள்கள் கொடுத்து வருவது சாலச் சிறந்த தாகும்.

எம்பிரானுக்குப் பல திருப்பணிகள் செய்தும் ஆபரணங்களை ஆக்கிக் கொடுத்தும் எழில் சேர்த்திருக்கிறீர்கள்.

"அற்றார் அழிபசி தீர்த்தல் அஃது ஒருவன்
பெற்றான் பொருள்வைப் புழி - என

வள்ளுவப் பெருமான் பொருள் பெற்ற பயன் பற்றிக் கூறியுள்ளார். "அற்றார் அழிபசி தீர்த்த பொருள்" பின் தனக்கு வந்து உதவும் என்பது பரிமேலழகர் வாக்கு பசிதீர உணவளித்து, தங்குவதற்கு இடம் அளித்துப் பேணும், அறம் வளர்க்கும் பெரும் தன்மை மெ.க. குடும்பத்தினருக்கு அரிய சொத்தாக விளங்குவது அறிந்து இறும்பூது அடைகிறோம்.

ஏழைக்கு எழுத்தறிவித்தல் புண்ணியங்கோடி என்ற பொருள் உணர்ந்து கல்விப் பணியும் செய்கின்றீர்கள்.

மேன்மையான பல அறங்களை வளரச் செய்கின்ற மெ.க. பரம்பரையினரை வாழ்த்துகிறோம்.

அண்ணாமலையாரின் கோவில் தொண்டும், அன்னசத்திர அறப்பணியும், கல்வி உதவியும் 125 ஆண்டுகளாகச் செய்துவரும் மெ.க. மரபு வழியினரும் இச்சீரிய பணியை முன்னின்று நடத்தும் அன்பர்களும் வளர்செல்வம் பெற்று, உயர் புகழுக்கு உரியராகி, நலமுடன் வளம்பெற எல்லாம் வல்ல கொற்றவாளீஸ்வரர் உடனாய திருநெல்லை அம்மையின் திருவடிகளை வழுத்துகிறோம்.

ஸ்ரீ சற்குருநாதன் துணை.

M. A. M. Ramaswamy B.A., D.Litt.,

CHETTINAD HOUSE
RAJAH ANNAMALAIPURAM
CHENNAI - 600 028

1-11-`97

திருவாளர்கள் விசாரணைதாரர்கள்
மெ. க. அன்னசத்திரம்
நெ. 161, தேரடி வீதி
திருவண்ணாமலை.

பொருள் - 125 ஆவது நிறைவு ஆண்டு விழா மலருக்கு வாழ்த்தும் ஆசியுரைச் செய்திகளும்.

வாழ்த்து

முக்காலும் மெய்யப்பர் மூத்தகுடி முன்னின்று
தக்கார்தன் வாரிசுகள் தானியங்க - பக்குவமாய்
மக்கள் பசிதீர் மெகஅன்ன சத்திரத்தார்
எக்காலும் வாழ்வீர் இனிது.

வாழையடி வாழையாக, மாற்றூர் கோவில் மண்ணூர் பிரிவு, கோட்டையூர், மெய்யப்ப செட்டியார் குடும்பவாரிசுதாரர்கள் கடந்த 125 ஆண்டுகளாக, திருவண்ணாமலையில் அண்ணாமலையார் திருக்கோயில், அன்றைய காலகட்டத்தில் ரூபாய் பதினைந்து இலட்சம் ரூ. 15,00,000/- வரை, கோவிலுக்குள், சிவகெங்கைக்குளம், பிள்ளையார் கோவில் பூசைக்குரிய நெய்வேத்திய கட்டளைகள், துர்க்காம்பாள் கோவில் பல்வேறு தங்கம், வெள்ளி ஆபரணங்கள், கிரீடங்கள், கலசங்கள் ரிஷபவாகனங்கள் செய்தும், கல் திருப்பணி கல்யாண மண்டபம் கட்டியும் திருப்பணிகள் செய்து வருவதுடன் கோவில் திருப்பணிக்காக ஆரம்பிக்கப் பட்ட சத்திரப்பணி, நடப்பு காலத்திலும், அடியவர்களுக்கும், யாத்திரிகர்களுக்கும், மற்றும் ஏழை மாணவர்களுக்குப் படிப்பு நலம் கருதி இலவசமாக 2 வரை படிக்க உணவும் தங்கும் வசதியும் அளித்துத் தெய்வ பணியுடன் கல்வி பணியும் செய்து வருவது கண்டு கண்கண்ட தெய்வம் கலியுகவரதன் ஐயன் ஐயப்பனை வேண்டி எனது வாழ்த்துடன் அருளாசியுரையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புள்ள

(மு.அ.மு. இராமசாமி)

திருவண்ணாமலை மெ.க. அன்னசத்திரம் நீடு வாழ்க!

("பொற்கிழிக் கவிஞர்" "காசி ஸ்ரீ" அரு. சோமசுந்தரன்)

திருவண்ணாமலை தொழுதால் வினைகள் போகும்
தெய்வீகம் மணக்கின்ற மகான்கள் வாழும்
திருவண்ணா மலைமண்ணில் நூற்றாண் டோடு
திகழ் இருபத்தைந்தாண்டு முன்னே நந்தம்
திருஞான நகரத்தார் கோட்டை யூரார்
திருவாளர் மெய்யர்மகன் கருப்பன் செட்டி
வருஞானத் திருமக்கள் மூவர் வந்து
வளர் அன்ன சத்திரத்தைக் கட்டி வைத்தார்!

1. பொய்சொல்லா மெய்யருடன் அழகிய மெய்யன்,
புகழ்வீரன் செட்டியாராம் அந்த மூவர்
தொய்யாமல் செய்த அறம்! அன்ன தானத்
தொல் அடுப்பின் கனல் இன்றும் அணையா வாறு
மெய்யாக அவர்குடும்பம் காக்கின் றார்கள்
மேலான அன்னதானம் செய்கின் றார்கள்
பெய்யாத மழைகூட அவர்க்காய்ப் பெய்யும்!
பேசாத தெய்வமுமே அவர்க்காய்ப் பேசும்!

2. திருவண்ணா மலையாரின் கோயி லுக்குத்
திருப்பணிகள் செய்ததுவோ லட்ச லட்சம்!
உருவான சிவகங்கைக் குளத்தி னோடு
உயர்பிள்ளை யார்கோவில் கட்டி வைத்தார்!
திருவண்ணா மலையாரின் கோவி லுக்குத்
தெய்வீக ரிஷபமுடன் நாகா பரணம்
அருமைமிகும் வெள்ளியிலே செய்து வைத்தார்
ஆவுடைக்கும் வெள்ளி அங்கி அழகாய்ச் செய்தார்!

3. அழகுமிகும் வெள்ளியிலே சோமாஸ் கந்த
மூர்த்திக்கும் அங்கியினைச் செய்து வைத்தார்
நலமான தங்கத்தில் நாகா பரணம்,
நாற்றிசையும் புகழ்கின்ற தங்கக் கிரீடம்,
வளமான குடும்பத்தார் செய்து வைத்தார்
வலம்புரியின் சங்கென்ன! காண்டா மிருகப்

பலமான கொம்பென்ன! பூணூல் என்ன!
பழவயிரப் பட்டையிலே விபூதி என்ன!

4. அத்தனையும் குடும்பத்தார் செய்து தந்தார்
அணி அண்ணா மலைப்பணிகள்! குடமு ழுக்கு!
சித்தத்தில் திருவண்ணா மலையார் வாழச்
செட்டிமார் நாட்டுக்கே பெருமை சேர்த்தார்!
புத்தமுதாம் பெருங்கோயில் வெளியில் கல்லால்
புகழ்மிக்க பதினாறு கால்மண் டபமும்
வித்தார மாய்க் கட்டி வெற்றி கொண்டார்!
வீரமிகு துர்க்காம்பாள் கோவில் செய்தார்!

5. திருவண்ணா மலைமண்ணில் இவர்கள் செய்த
திருப்பணிக்கோ அளவில்லை! அன்ன தானப்
பெருமைமிகு சத்திரத்தில் தினமும் நூறு
பேருக்குக் குறையாமல் உண்ணு கின்றார்
அருமைமிகும் மகாத்மாக்கள் இங்கே வந்தே
ஆசியினைத் தந்ததனால் ஆல்போல் உள்ளார்!
பெருமைமிகும் சேஷாத்திரி, ரமண பகவான்,
பெரும்புகழின் திருச்சிசாமி, கோவி லூரின்

6. ஆதீன கர்த்தருடன், காஞ்சி பீடம்,
அரியசிருங் கேரிபீடம், விசிறி சாமி,
ஜோதி மிகு சத்திரத்தில் பாதம் வைத்துச்
சொர்ணபிட்சா வந்தனத்தை ஏற்றுக் கொண்ட
ராசியினால் திருப்பணிகள் தொடர்கின் றார்கள்!
ராஜஅம்சம் பெற்றவர்கள்! இவர்கள் சேவை
காசியினும் விரிந்ததெனில் ஐய மில்லை!
கங்கையினும் பரந்ததெனில் தோஷ மில்லை!

7. பெருங்கோயில் காக்கின்ற தர்ம கர்த்தாப்
பெரும்பணியில் இவர் குடும்பம் சேவை செய்தார்
ஒருபோதும் தவறாமல் கோவி லுக்கு
உயர்வான அபிஷேகப் பொருள்கள் நித்தம்
தருகின்றார்! இவர்களது பணியைச் சொன்னால்
தருக்களிலே கற்பகமாம்! காம தேனு!

எருக்கம்பூச் சூடுகின்ற சிவனுக் கிந்த
எழிற்குடும்பம் செய்பணிகள் கொஞ்ச மில்லை!

8. "நூற்றாண்டு மலர்" ராய சொக்க லிங்கம்
நுட்பமுடன் படைத்திவரை வாழ்த்தி உள்ளார்!
காற்றாடி யானதொரு வாழ்க்கை என்று
கருதியதால் திருவண்ணா மலையைப் பற்றி
நூற்றாண்டு மேலாகத் தொண்டு செய்து
நோன்பிருக்கும் இக்குடும்பம் நீடு வாழ்க!
ஆற்றாத மக்களுக்குத் தொண்டு செய்யும்
அன்னதானச் சத்திரமும் தொடர்ந்து வாழ்க!

செட்டிநாட்டின் பெருமை

கலைமாமணி டாக்டர் உளுந்தூர்ப்பேட்டை சண்முகம்.

செட்டி நாட்டின் பெருமை
செப்புதற்கோ அருமை
நித்தம் நித்தம் தரும் இனிமை - அது
இத்தரையில் ஒரு புதுமை

(செட்டி நாட்டின் பெருமை)

வடக்கே எல்லை வெள்ளாறு
தெற்கே வைகைத் தேனாறு
கிழக்கே வங்கக் கடல் கூறு
மேற்கே பாரி மலைபாரு

(செட்டிநாட்டின் பெருமை)

ஆயிரத் தெழுநூறு சதுரமைல் - செட்டிமார்
ஆட்சிக்குள்ளே அமைந்ததம்மா
அறுபதினாறு ஊர்களிலே - இவர்
அறப்பணி என்றும் விளங்குதம்மா

ஒன்பது கோயில் உரிமையுண்டு - அதில்
ஒவ்வொருவர்க்கும் பெருமையுண்டு
இங்கிவர் கோத்திரம் எனக்கொண்டு – சொல்ல
இருபத்தி மூன்று துறையுண்டு

விருந்து தருவதற்கு வீடுகளாம் - திரு
விழா காலத்தே சத்திரமாம்
மருந்து பெறுவதற்கு விடுதிகளாம் - பல
மாளிகை தருமச் சாலைகளாம்

அறுபது கோடிக்கு மேலாக - பல
அறப்பணி செய்தவர் தனவணிகர்
வரவுகள் வருவதும் ஏராளம் அதை
வாரி இறைப்பதும் தாராளம்

எட்டுத் திக்கிலும் இவர் சென்று - தொழில்
ஏற்றம் கண்டார் மிக முயன்று
பற்றுக் கணக்கில் பல உண்டு - நாம்
பார்ப்போம் அதிலே ஒன்றிரண்டு!

கடவுட் பற்று கலைப்பற்று - வளர்
கல்விப் பற்று பொருட்பற்று
சடங்குப் பற்று இனப்பற்று - தம்
சமயப் பற்று மொழிப்பற்று

நாட்டுப் பற்று மிக்கவர்கள் - நம்
நாட்டுக் கோட்டை நகர்த்தார்
ஏட்டில் என்றும் இடம் பெற்றார் - நாம்
ஏத்திப் போற்றும் நலம் பெற்றார்.

T.V.S. ராசாராம்,
பேங்கர்

123 சின்னக்கடைத் தெரு,
திருவண்ணாமலை.
போன் – 22285

தேதி 5.11.97

உ

சிவமயம்

வாழ்த்துரை

திருவாரூரில் பிறந்தால் முக்தி. தில்லையில் தரிசித்தால் முக்தி. காசியில் இறந்தால் முக்தி! ஆனால் அண்ணாமலையை நினைத்தாலே முக்தி அளிக்கும் தலம் திருவண்ணாமலை திருத்தலம். "வாக்கிற்கு அருணகிரி" என்று புகழப்பட்டு, கம்பத்தில் கந்தனை வரவழைத்த அருளாளர் அருணகிரிநாதர் அவதரித்த தலம் திருவண்ணாமலை திருத்தலம்.

"ஞானதபோதனரை வாவென்று அழைக்கும் மலை அண்ணாமலை" என்ற சொல்லுக்கேற்ப பல ஞானிகளை வரவேற்ற தலம் திருவண்ணாமலை திருத்தலம்.

குகை நமசிவாயர் - குரு நமசிவாயர் - தெய்வசிகாமணி தேசிகர், சோணாசலத்தேவர் - ஈசான்யஞானதேசிகர் தட்சிணாமூர்த்தி சுவாமிகள், ஸ்ரீ சேஷாத்திரி சுவாமிகள் - பகவான் ரமணர் - ஸ்ரீ ராம்சூரத்குமார் சுவாமிகள் போன்ற மகான்கள் உயர்ந்த நிலையையும், ஆன்மீக வழியையும் காட்டிய தலம் திருவண்ணாமலை திருத்தலம். பிரம்மனும் விஷ்ணுவும் 'யார் பெரியவர்கள்' என்ற போட்டியில் 'படிப்பினாலும், ஆணவத்தினாலும் இறைவனை காணமுடியாது! என்ற தத்துவத்தை உலகத்திற்கு எடுத்து சொன்ன தலம் திருவண்ணாமலை திருத்தலம்!

கார்த்திகை மாதத்தில் கிருத்திகை நட்சத்திரத்தில் மலையில் ஜோதி வடிவமாக தோன்றி, தீப ஒளியை காணும் பக்தர்களுக்கு மூவேழு இருபத்தொரு தலைமுறையில் உள்ளவர்களுக்கும் வீடு பேற்றினை தரும் தலம் திருவண்ணாமலை திருத்தலம்.

இப்படி சிறப்பு வாய்ந்த திருவண்ணாலை மாநகரில் தேரோடும் வீதியில் "மெ.க. அன்னசத்திரம்" என்ற பிரமாண்டமான சத்திரத்திற்கு 100 வருடங்களை கடந்து, அதற்கு மேலும் 25 வருடங்களை முடித்து, காலத்தை வென்று தலை நிமிர்ந்து நிற்கும் அன்னசத்திரத்தின் 125வது ஆண்டு விழா நடைபெறுவது திருவண்ணாமலை நகர மக்களுக்கே பெருமை சேர்ப்பதாகும்.

நகரத்தார்களில் கோட்டையூர் நகரத்தார்கள் பல சிறப்புகளையும், பெருமைகளையும் பெற்றவர்கள். வரலாற்றுச் சிறப்புமிக்க ஊர் கோட்டையூர். அறக்கொடையாளர் வள்ளல் அழகப்ப செட்டியார் பிறந்து பெருமை பெற்ற ஊர் கோட்டையூர். கோட்டையூர் வள்ளல்களின் கோட்டை என்றே சொல்லலாம். தொழில் துறையில் கடல் கடந்து வெளிநாடுகளிலும், உள் நாட்டிலும் கோட்டையூர் நகர்தார்கள் சிறந்து விளங்குகின்றனர். கோட்டையூர் நகரத்தார்கள், கோவிலூர் திருமடத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்டவர்கள். கோட்டையூர் ஐயா என்று அழைக்கும் அருளாளர் திரு. அழகப்பச் செட்டியார் அவர்கள் கோவிலூர் மடத்தில் வேதாந்தப் பாடங்களைச் சீரும் சிறப்புமாக நடத்தியவர்கள். கோவிலூர் ஒன்பதாவது பட்டமாக திகழ்ந்த கோவிலூர் ஆதினகர்த்தர் ஸ்ரீ ராமநாத ஞானதேசிகர் அவர்கள் கோட்டையூர் நகரத்தார்களிடம் மிகுந்த அன்பைப் பெற்றவர்கள். இவருடைய தூய்மையான நட்பால் பெங்களூர் கைலாச ஆசிரமத்தின் ஸ்தாபகர் வணக்கத்திற்குரிய ஸ்ரீ திருச்சி சுவாமிகள் தொடர்பு நமது தமிழக மக்களுக்குக் கிடைத்தது என்றால் மிகையாகாது. கோட்டையூர் நகரத்தார்கள் தேசிய பற்று மிக்கவர்கள். மகாத்மா காந்தி, ஜவஹர்லால் நேரு, ராஜாஜி, போன்ற பெருந்தலைவர்கள் கோட்டையூரில் வருகை தந்துள்ளார்கள். இப்படி கோட்டையூர் நகரத்தார்கள் தொழில் துறையிலும், ஆன்மீகத்திலும், தமிழ்ப் பணியிலும், தேசியத்திலும் ஈடுபாடு கொண்டு சிறந்து விளங்கினார்கள். கோட்டையூர் நகரத்தார்கள் தலைக்காவேரி கேரளா, கர்நாடகா போன்ற வெளிமாநிலத்திலும், தமிழகத்தில் தஞ்சை மாவட்டத்தில் கச்சனம், திருநெல்வாயில், திருநாலையூர், கோவிலூர், ராமேஸ்வரம், சிதம்பரம், திருவெண்காடு போன்ற ஊர்களில் பல திருப்பணிகள் செய்து ஆன்மீகத்திற்கு வழிகாட்டினார்கள். திருவண்ணாமலை அண்ணாமலையாரிடத்தில் அளவு கடந்த பக்தி கொண்டவர்கள். கோட்டையூர் நகர்தார்கள் அண்ணாமலையாருக்குச் செய்தருக்கிற தர்மங்கள் அளவிட முடியாது.

கோட்டையூர் நகரத்தார்கள் திருவண்ணாமலையில் 125 ஆண்டுகளுக்கு முன்பு நகரின் மையப் பகுதியில், தீபதிருவிழாவின் 5ம் நாள் உற்சவத்தை சிறப்பாக நடத்துவதற்காகவே மெ. க. அன்னசத்திரத்தை அந்த காலத்திலேயே ஒன்றரை லட்ச ரூபாயில் செலவில் கட்டி உள்ளார்கள். தீப திருவிழாவில் 5ம் நாள் உற்சவம் மிக சிறப்பு வாய்ந்தது. கோட்டையூர் நகரத்தார்கள் அண்ணாமலையார் வலம் வர, வெள்ளி ரிஷபத்தை 32 அடி உயரத்தில் செய்து உள்ளார்கள். வருடா வருடம் தீப திருவிழாவின் 5ம் நாள் இரவு அண்ணாமலையார் திருக்கோயிலின் ஆஸ்தான மண்டபத்திலிருந்து எழுந்தருளி, உடல் தாளத்தோடு, திருக்கோயில் வெளியே 16 கால் மண்டபத்தில் 32 அடி உயரம் உள்ள வெள்ளி ரிஷபத்தில், மரப்படிக்கட்டில் ஏறுவார்கள். பக்தர்கள் அனைவரும் அண்ணாமலையாருக்கு அரோகரா என்ற மந்திரத்தை சொல்லி கொண்டே இருப்பார்கள். உயரமான அந்த வெள்ளி ரிஷபத்தில் அண்ணமலையார் அமரும் அந்த காட்சி மெய்சிலிர்க வைக்கும். மனிதனாகப் பிறந்தவன் ஒவ்வொருவனும் அந்த காட்சியைப் பார்க்க வேண்டும். பாரத தேசத்தில் இவ்வளவு உயரமான வெள்ளி ரிஷபத்தை எந்த இடத்திலும் பார்க்க முடியாது. திருவண்ணாமலையில் மட்டுமே இந்த அற்புத காட்சியைப் பார்க்க முடியும். நகரத்தார்கள் செய்து வைத்த வெள்ளி ரிஷபம்,

காலங்களை வென்று, தலை நிமிர்ந்து நிற்கின்றது. கோட்டையூர் நகரத்தார்கள் வழிவந்த அறப்பணி செம்மல் உயர்திரு.AK.A.CT. AL. சிதம்பரம் செட்டியார் அவர்கள் 1976ம் ஆண்டு அண்ணாமலையாருக்கு சீரும், சிறப்புமாக கும்பாபிஷேகத்தை நடத்தியவர்கள். அவருக்கு உறுதுணையாக அண்ணாமலையார் திருக்கோயில் அறங்காவலர் குழுத்தலைவராகவும் நகரத்தார்களிடம் மிகுந்த அன்பு கொண்டவரும், எனது தந்தையார் அமரர் திரு. T.V. சுப்ரமணியம் செட்டியார், காரைக்குடி கம்பன் அடிப்பொடி திருப்பணி திலகம் திரு. அ. சொ. அண்ணாமலை செட்டியார், கோட்டையூர் ராம.அழ.ராம.ராமனாதன் செட்டியார் போன்ற சான்றோர்கள் உடனிருந்த மலேஷியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்குச் சென்று வசூல் செய்து அண்ணாமலையார் கும்பாபிஷேகத்தை மிகச் சிறப்பாக நடத்தினார்கள். இப்படி கோட்டையூர் நகரத்தார்கள் திருவண்ணாமலையில் கட்டிய மெ. க. அன்னசத்திரம் 125வது ஆண்டு விழாவைக் காணும் இந்த நல்ல நேரத்தில் இன்னும் பல்லாண்டு, பல்லாண்டு, பல்லாயிரத்தாண்டு, பலகோடி நூறாயிரம் ஆண்டுகள் கண்டு சிறப்புற விளங்க அருள்மிகு அண்ணாமலையார் அருள் புரிய வேண்டுகிறேன்.

அண்ணாமலையெம் அண்ணல் போற்றி
கண்ணாரதமுத கடலே போற்றி!

உ

சிவமயம்

ஸ்ரீ அண்ணாமலையார் துணை

ராம. வள்ளி முத்தையா

வாரி வாரிக் கொடுத்திடுவோம்

1. இதயம் நிறைந்த இள நிலவே
ஈசன் தந்த திருமகனே
உதயமாகும் கவிதையினை
உள்ளிருந்தியக்கும் கணபதியே
முதலே, மூலப் பரம் பொருளே
முன்னின்று காப்பவனே
பதமே பிடித்தேன், பைந்தமிழில்
பாடல் தருவாய் சித்தி விநாயகனே

2. இமவான் ஆளும் கிரிவாசல்
இனிதே அமர்ந்த பசுபதியின்
கமலப் பாதம் சிரம் வைத்து
கண்ணில் அரனின் உருவைத்து
உமையவளோடு உண்ணாமலை
உடன் ஆகிய எங்கள் அண்ணாமலை
நமையே ஆண்ட கதை பாட
நாவில் வருவாய் சரஸ்வதியே

3. ஐநூற்றீசன் அடி பணியும்
அய்யா கருப்பன் செட்டியவர்
மைந்தர் மூவர் திருப்பணியாம்
மகேசன் அடியார் இளைப்பாற
வையம் போற்றும் சத்திரமாம்
வயிறு குளிர அன்னமுண்டாம்
வெய்யில் கதிரோன் ஒளியே போல்
விளங்குது தேரடி வீதியிலே

4. திருவினை அருளிய தெய்வத்துக்கே
தெருவில் உலவிட வாகனமாம்
அருணாசலனும் அவன் துணையும்
அணிந்திட ஆடை அணிகலனாம்
கருணை பொழியும் கண்ணுதற்கு
கனகம் வெள்ளி அங்கிகளாம்
விரும்பித் தந்தார் முந்தையர்கள்
விமலன் தந்தான் நல்வாழ்வே

5. பொன்னாய் விளையும் பசுங்கரையாம்
பாலைப் பொழியும் பசு வகையாம்
பொன்னார் மேனியன் தோள் சூட
பூவாய்ச் சொரியும் மலர் வனமாம்
பெண்ணொரு பாகன் பூசைக்கு
பொலிந்திடும் தூப தீபங்களாம்
அண்ணாமலையான் வாசலிலே

6. தடையே இன்றி அவனருளால்
தருமம் செழித்திட விருப்புற்று
விடையே செய்தார் வெள்ளியிலே
விருப்புடன் அவனும் வீற்றிருக்க
கொடையே குணமாய்க் கொண்டிருக்கும்
கோட்டையூரார் குலம் சிறக்க
மடையே திறந்த வெள்ளமென
மலர்மகள் செல்வம் பொழிகின்றாள்.

7. சோதி வடிவாய் நின்றவனின்
சன்னதி நிழலில் கூடுகிறோம்
ஆதிசிவனின் அருளாலே
அகிலம் போற்ற வாழுகிறோம்
பாதி வருவாய் பசித்தவாக்கே -எனும்
பண்பை ஊட்டிய பாட்டன்மார் - வான
வீதி வந்து வாழ்த்திடவே - என்றும்
வாரி வாரிக் கொடுத்திடுவோம்

சி. தமிழ்மாறன்
முதல்வர், செந்தில் டுடோரியல் கல்லூரி, திருவண்ணாமலை.

வாழ்த்து

இறைவன் தன் தனிப் பெருங் கருணையை ஒளி வடிவாய் காட்டியருளிய இடம் திருவண்ணாமலை அந்த அருள் ஒளி வடிவம் கோட்டையூர் நகரத்தார் அகத்தில் பதிந்து, அகம் மகிழ்ந்து அவர்கள் உணர்ந்து தெளிந்து உருவாக்கியதே அன்ன சத்திரம், முப்பெரும் மூதாதையர்கள் முயற்சியால் 28.11.1872ல் உருவான, முத்தமிழ் ஒலிக்கும் (தேவாரம்) அன்னசத்திரம், கீர்த்தி பெற்றதும், நேர்த்தி வாய்ந்ததும், வார்த்தைகளால் சொல்லொணா கோட்டையூர் வள்ளல்களால் உருவான அன்னசத்திரம்! ஈட்டிய பொருளின் ஒரு பகுதியை இறைவனுக்கேயென கொட்டி வைத்துக் கட்டிய சத்திரம் அன்னசத்திரம்! ஏழைகள் உண்ணும் சத்திரம்! சான்றோர்கள் எண்ணும் சத்திரம், மாணவர்கட்கு கல்வி சத்திரம், பாட்டாளி கட் கோர் ஒய்வு சத்திரம், அம்மை அப்பனுக்கு அணையாத ஒளிச்சுடரிடும் அன்ன சத்திரம் நினைத்தாலே முக்தி தரும் திருவண்ணாமலை வந்தாரை வாழவைக்கும் அண்ணாமலை! என்னை வாழவைத்த அன்னசத்திரம் இது ராஜ கோபுரம் அருகே, ரத வீதியில் அண்ணாமலை, உண்ணாமலையின் ராஜமாளிகை, காலையில் கதிரவனின் ஒளிவீச்சில் அம்மையப்பன் மின்னும் பொன் மாளிகை இதற்கு நேர் எதுவும் இல்லா கோட்டையூர் நகரத்தாரின் கொடை மாளிகை இவ் அன்னசத்திரத்தின் உள் மண்டப கரு வறையில் உள்ள அம்மை அப்பனின் சக்தி வியக்கத்தக்கது, விவரிக்க முடியாதது, இதற்கு நிகர் இதுவே! இதை எண்ண, எழுத, சொல்ல நாட்களே போதாது! இச்சத்திரத்தின் 125ஆவது ஆண்டு விழா கண்டு அகம் மகிழ்ந்தேன் வணங்குகிறேன்! வாழ்த்துகிறேன்! கேட்கும், கேட்காமலும் இறைவன் அருள் பெற்று இறைவனுக்கே ஆயுள் முழுவதும் தொண்டாற்றும் கோட்டையூர், நகரத்தார், சான்றோர், இளையோர் அனைவரும் சிறக்க, பல்லாண்டு வாழ்க எல்லாம் வல்ல இறைவன் அருள் பெற்று இறைத் தொண்டு புரிய ஓங்கு புகழ் பெறுக அன்னசத்திரம்.

N. சுந்தரம் B.A., M.L.A.,
காரைக்குடி சட்டமன்றதொகுதி

இல்லம் :
கோட்டையூர் – 630 106
✆ 04565–83405

அலுவலகம் :
8, சுப்பிரமணியபுரம் முதல் வீதி,
காரைக்குடி–630 002
✆ 23227
சென்னை சட்டமன்ற உறுப்பினர்
விடுதி அறை எண் : 404
✆ 564404

18.11.97

மெ.க. அன்னசத்திரம் மேன்மேலும் வளர்க

மாத்தூர்க் கோவில் மண்ணூர்ப் பிரிவைச் சேர்ந்த கோட்டையூர் மெய்யப்ப செட்டியார் குமாரர் கருப்பன்செட்டியார் மக்கள் மூவரால் நிறுவப்பெற்ற மெ.க. அன்னசத்திரம் 125ஆம் ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடும் சிறப்பினைக் கண்டு பெரிதும் மகிழ்ச்சியும், பெருமையும் அடைகின்றேன்.

திரைகடலோடியும் திரவியம் தேடிச் சேர்த்த பொருளைத் தான தர்மங்களில் செலவிடும் நகரத்தார்தம் நற்பண்புக்கு மற்றொரு எடுத்துக் காட்டாய்த்திகழும் மெ.க.அன்னசத்திரம், இன்னும் பல நூற்றாண்டுகள் நிலமுள்ளளவும், நீர்உள்ளளவும், வான் உள்ளளவும் நிலைத்துநிற்கும் என்பதில் அய்யமில்லை.

"பசிப்பிணியென்னும் பாவியது தீர்த்தோர்
இசைச்சொல் அளவைக்கு என்நா நிகராது.."

என்று பாராட்டினார் மணிமேகலைச்சாத்தனார்.

"அன்னசத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்..."

எனப் பாரதி பாடிய ஆன்மீக அறங்கள் பலவற்றை நிறைவேற்றியிருப்பதோடு, அவற்றையெல்லாம் விட ஆயிரம்கோடி மடங்குத் தர்மமான ஏழையர்க்குக் கல்வியளிப்பதிலும் மெ.க. அன்னசத்திரம் அளப்பரிய பங்காற்றிவருவது எனக்கு மேலும் மகிழ்ச்சியளிக்கிறது.

தங்கள் சத்திரத்திற்குப் பகவான் ரமணர் முதலாய ஆன்மீகப்பெரியவர்கள் வருகை தந்திருப்பது மிகவும் பொருத்தமே..

அன்னதானமும், கல்விதானமும் வழங்கும் தங்கள் அன்னசத்திரம் மேன்மேலும் வளர்ந்து சமுதாயப்பணி ஆற்ற வாழ்த்துகின்றேன்.

தங்கள் 125ஆம் ஆண்டு நிறைவுவிழா மலர், அழகும், பொலிவும் பெற்று மணக்க வாழ்த்தி மகிழ்கின்றேன்.

அன்புடன்

(ந. சுந்தரம்)
காரைக்குடி சட்டப்பேரவை உறுப்பினர்.

திருமுக கிருபானந்தவாரியார் அவர்கள்

வாழ்த்துப்பா

நேரிசை வெண்பா

வாழி திருவருணை!
வாழி நகரத்தார் !
வாழி வளமிகுந்து
மாண்புடனே;-வாழி
புகழன்ன சத்திரம்
பூவுலகில் ஓங்கித்
தகவுடனே வாழி
தழைத்து.

யோகி சுத்தானந்த பாரதியார் அவர்கள்

வாழ்த்துப்பா

அணியண்ணா மாமலையில்
அன்னசத்தி ரத்தைத்
துணிவுறவே நூறாண்டு
தூய-பணிபொலிய
நாட்டி நடத்துகின்ற
நல்லறச் செம்மல்களாம்
நாட்டார்கள் வாழியவே நன்று.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

திருவண்ணாமலைத் தல விளக்கம்

உண்ணாமுலை உமையாளொடும்
உடன் ஆகிய ஒருவன்
பெண் ஆகிய பெருமான்மலை
திருமாமணி திகழ
மண் ஆர்ந்தன அருவித்திரள்
மழலைம் முழவு அதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை
வழுவாவண்ணம் அறுமே.
-திருஞான சம்பந்தர்.

1. தலத் திருநாமங்கள்

இப் பிரசித்தித் தலம், முத்திபுரி, தலேச்சுரம், சிவலோகம், சுத்த நகரம், கௌரி நகரம், சோணாசலம், சோணகிரி, சோணாத்ரி, அருணாசலம், அருணகிரி, அருணத்ரி, அனற்கிரி, திருவருணை, திருவண்ணாமலை என்னும் பல திருநாமங்களைத் தாங்கி விளங்குகின்றது.

இதற்கு ஞான நகரம் என்ற விசேடமான பெயரும் உண்டு.

2. தலச் சிறப்பு

இத்தலம், ஆறு ஆதாரத் தலங்களுள் மணிபூரகத் தலமாகவும், பஞ்சபூதத் தலங்களுள் நடு நாயகமான அக்நித் தலமாகவும், முத்தித் தலங்கள் நான்கனுள் நினைத்த மாத்திரத்தில் முத்தி நல்க வல்லதாகவும், நடு நாட்டுச் சிவத் தலங்கள் இருபத்திரண்டனுள் சிறப்புடைய ஒன்றாகவும், மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாகப் பொருந்தியதாகவும், ஞானத் தபோதனர்க்கு உறைவிடமாகவும் அமைந்துள்ளது.

மஹா சிவராத்திரியின் தோற்றுவாய் கொண்டதும், தேவிக்கு இடப்பாகம் அளித்ததும் இத்தலத்தின் தனிப்பெருஞ் சிறப்புக்களாகும்.

"ஆதி நெடுமால் அயன்காண அன்றுபரஞ்
சோதிச் செழுஞ்சுடராய்த் தோன்றுமலை - வேதம்
முழங்குமலை சிந்திப்பார் முன்னின்று முத்தி
வழங்குமலை அண்ணா மலை."
"சத்திக்கு ஒருபாகம் தான் கொடுத்து நின்றமலை
முத்திக்கு வித்தாய் முளைத்தமலை-எத்திசையும்
போற்றுமலை போற்றிப் புகழ்வார் எழுபிறப்பை
மாற்றுமலை அண்ணா மலை."
-குரு நமசிவாயர்.

இன்னும் இருக் வேதம், அதர்வண வேதம், சரப உபநிடதம், சூத சங்கிதை, உருத்திர சங்கிதை, பாஸ்கர சங்கிதை, சிவ மஹா புராணம், சிவ ரஹஸ்யம், கந்த புராணம், பெரிய புராணம், அருணாசல புராணம், தேவாரம், திருவாசகம், திருப்புகழ் முதலிய அரிய நூல்கள் இத்தலத்தின் வியத்தகு மாண்பினை விரித்துரைக்கும்.

3. மூர்த்தி திருநாமங்கள்

இங்குக் கோயில் கொண்டருளும் மூர்த்தியின் திருப்பெயர்கள் புராணங்களில் பலவாகக் கூறப்பெற்றுள்ளன. அவை: திருவண்ணாமலை ஆண்டார், திருவண்ணாமலை மகா தேவர், திருவண்ணாமலை ஆழ்வார், அண்ணா நாட்டு உடையார், திருவண்ணாமலை உடையார், அபிநயபுசங்கராசர், பரிமள வசந்தராயர், புழுகணி இறைவர். பிரசித்தமாக விளங்குவது:- "ஸ்ரீ அருணாசலேசுவரர்", "ஸ்ரீ அண்ணாமலையார்."

தேவியின் திருநாமம்:- "ஸ்ரீ அபீத குசநாயகி", "ஸ்ரீ உண்ணாமுலையம்மை","உண்ணாமுலை நாச்சியார்", "திருக் காமகோட்டமுடைய தம்பிராட்டியார்", "உலகுடைய பெருமாள் நம்பிராட்டியார்".

தல விருட்சம்:- வகுளம் (மகிழ மரம்); ஆலமரம் எனவும் உரைப்பர்.

4. இலிங்கோற்பவம்

படைத்தற் கடவுளாகிய பிரமனும், காத்தற் கடவுளாகிய திருமாலும் தாந் தாமே பெரியரென்று அகங்காரங்கொண்டு தம்முட் பிணக்குற்ற காலை, முழுமுதற்பொருளாகிய சிவபெருமான், அவர்கள் முன்பாக "ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் ஜோதிப்" பிழம்பாகத் தோன்றி, தமது அடியையேனும் முடியையேனும் கண்டு வந்தவர் பெரியராவார்

எனத் திருவாய் மலர்ந்தருளலும், திருமகள் மார்பன் வராக வடிவங்கொண்டு ஆழ்ந்து ஆழ்ந்து குடைந்து சென்றும், "பாதாளம் ஏழினும் கீழ் சொற்கழிவு பாதமலர்" காண இயலாது சோர்ந்து திரும்பினார். அன்ன உருத்தாங்கி ஆகாயத்தே உயர உயரப் பறந்தும்,"வேதப் பொருள் முடிவாம் போதார் புனை முடியை" நண்ணுதற்கியலா நான்முகன் தயங்கி நிற்கையில், ஆங்குற்ற தாழம்பூ ஒன்றினைக் கண்டு அதன்பால் தனது விருத்தாந்தத்தை விளம்பினர்.

கங்கைநீர் மல்கும் திங்களார் சடையினின்றும் நழுவிய தான் நாற்பது ஆயிரம் ஆண்டுகளாகக் கீழ் நோக்கி வந்துகொண்டிருப்பதும், "பிறையணி முடியைக் காண்டல் பிரமனே எவர்க்கும் ஆகா" எனவும் தாழம்பூவால் கூறக் கேட்ட பிரமன் தனது முயற்சி விடுத்துத் தனக்காகப் பொய்யுரை யொன்று புகல வேண்டித் தாழை மலரைச் சம்மதிக்கச் செய்து, திருமாலிடம் சென்று தாம் சோதி மணி முடி கண்டதாக உரை செயலும், முற்றுணர்ந்த சிவபெருமான் பொய்யுரை செய்த பிரமனுக்குப் பூலோகத்தில் ஆலயம் அமையாதாவதென்றும், கரவுரை செய்த கைதை (தாழம்பூ) தமக்கு ஆகாதாவதென்றும் சாபமிட்டனர். பங்கயத்தானும் பாம்பணையானும் தங்கள் அகங்கார இருள் அகலப் பெற்றவராய், தன்னிகர் இல்லாத் தனிப்பெருஞ் சோதியைப் பரவிப் பணிந்து பிரார்த்திக்க, அவர்களின் பிரார்த்தனைக்கு இரங்கிய பெருமானார் சிவலிங்கத் திருவுருக் கொண்டு அமர்ந்தனர் என்ப. இதனை,

"என்னிகர் எவரும் இல்லென்று இருவரும் இகலும் எல்லை
அன்னவர் நடுவு தோன்றி அடிமுடி தெரியா தாகி
உன்னினர் தங்கட்கு எல்லாம் ஒல்லையில் முத்தி நல்கித்
தன்னிகர் இன்றி நின்ற தழற்பெருஞ் சைலம் கண்டார்".

(-உற்பத்தி காண்டம்-வழிநடைப் படலம்-11)

"அரியும் யானும்முன் தேடும்அவ் அனற்கிரி அனல
கிரியெனும்படி நின்றதால் அவ்வொளி கிளர்ந்த
இரவதே சிவ ராத்திரி யாயினது இறைவற்
பரவி உய்ந்தனர் அன்னதோர் வைகலில் பலரும்".

(-தக்ஷ காண்டம்-அடிமுடி தேடு படலம்-96)

என, கந்த புராணம் முழங்கும்.

இவ் வரலாறே இலிங்கோற்பவத்தின் தோற்றமாகும். கிருதயுகத்தில் அக்நி மலையாகவும், திரேதாயுகத்தில் மாணிக்க மலையாகவும், துவாபர யுகத்தில் பொன் மலையாகவும், கலியுகத்தில் கல் மலையாகவும் மாறிற்று என்பர். மலைகளை நான்கு வகையாகப் பிரித்துப் பேசும் ஜியாலஜி என்னும் நில நூல், இம்மலையை, 'நெருப்பினால் வந்த குன்று'(Igneous Rock) என்று குறிப்பிடுகிறது.

5. தேவி இடப் பாகம் பெற்றது

ஓர் கால் உமா தேவியார் விளையாட்டாக எம்பெருமானுடைய திருக் கண்களைப் புதைக்கவே, அக்கணம் பிரபஞ்ச மெங்கணும் பேரிருள் சூழலாயிற்று. அப் பேரிருள் வசப் பட்ட ஜீவகோடிகளின் துன்பத்துக்கு ஆற்றாராய், அப் பாபந் தீர்க்க வேண்டித் தேவியார் காஞ்சிமா நகரம் சேர்ந்து பிருத்வியால் இலிங்கம் அமைத்துப் பூசனை புரிந்துவரும் நாளில், பத்தராய்ப் பணிவார்க்குப் பதம் அளிக்கும் பரமன் தோன்றி, "திரு வருணையை அடைந்து தவமியற்றித் தமது இடப்பாகம் பெறு" மாறு அருளிச் செய்தனர்.

அவ் வண்ணமே பார்வதி தேவியார் அருணாசலத்தை அடைந்து, பவழக் குன்று மலையில் பர்ண சாலை அமைத்து, கௌதம முனிவரின் உதவியால் கடுந்தவம் புரிந்து வருகையில், ஆசையால் அறிவு அழிந்து அட்டகாசம் புரிந்து நின்ற அசுரர் தலைவனான மகிடாசுரன் என்பானை மர்த்தனம் செய்து, மன்பதை உய்யக் கார்த்திகைத் திங்களில் பெருவிழா நடத்திப் பௌர்ணமியோடு கூடிய கிருத்திகைப் பிரதோஷ காலத்தில் மலைமேல் ஜோதி ஸ்வரூப தரிசனம் கண்டு எல்லையிலாக் களிப்பெய்தி எம்பெருமானாரின் இடப் பாகம் பெற்று அமர்ந்தனர்.

6. தீப தரிசனம்

வருடந்தோறும் இங்கு நடைபெற்றுவரும் திருக் கார்த்திகை தீபப் பெருவிழாவின் பத்தாம் நாளாகிய தீப தரிசன தினத்தன்று, பிரதோஷ காலத்தில், அர்த்த நாரீஸ்வர மூர்த்தி எழுந்தருளிக் காட்சி கொடுத்து, அவ்வேளையில் மலையின் உச்சியில் ஜோதி ஸ்வரூபம் காட்டலும், அதே சமயத்தில் ஆலயத்துள் பஞ்சமூர்த்திகளுக்குத் தீபாராதனை செய்தலும் வழக்கமாக நடைபெற்று வருகின்றன.

"கார்த்திகைக்குக் கார்த்திகைநாள் ஒருசோதி
மலைநுனியிற்காட்டா நிற்போம்
வாய்த்த அந்தச் சுடர்காணில் பசிபிணியில்
லாது உலகின் மன்னி வாழ்வார்
பார்த்திவர்க்கும் அருந்தவர்க்கும் இடையூறு
தவிரும் அது பணிந்தோர் கண்டோர்
கோத்திரத்தில் இருபத்தோர் தலைமுறைக்கு
முத்திவரம் கொடுப்போம்"என்றார்.

-அருணாசல புராணம்.

7. அருணையைத் தரிசித்த அருந்தவத்தோர்

குமரவேள் தாருகாசுரனை வதம்செய்து தெற்கு நோக்கி எழுந்தருளிய காலத்து, திருவண்ணாமலையைத் தரிசித்த வரலாறு, கந்தபுராணத்துள் காணக்கிடக்கின்றது.

திருஞான சம்பந்தப் பெருமான் இப்பதி அடைந்து, இரு திருப்பதிகங்கள் பாடித் "தங்கு விருப்பில் வீற்றிருந்தார்" என்பது பெரிய புராணத்தால் அறியாலாம்.

திருநாவுக்கரசு ஸ்வாமிகள் இங்கு எழுந்தருளி மூன்று திருப்பதிகங்கள் இயற்றினர். இதனை "பண்ணார் பதிகத் தமிழ் பாடிப் பணிந்து பரவிப் பணி செய்தார்" என்னும் சேக்கிழார் பெருமானின் திருவாக்கால் அறியலாம்.

மாணிக்க வாசகப் பெருந்தகை இத் தலத்தில் பல காலம் தங்கினார் என்பதை"திருவெம்பாவை" "திருவம்மானை ஆகிய பாமாலைகளும் திருவாசகத்துள் காணப்பெறும் திருவண்ணாமலை பற்றிய ஏராளமான குறிப்புகளும் நன்கு உணர்த்துவதாகும்.

சுந்தரமூர்த்தி ஸ்வாமிகள், நக்கீரர், கபிலர், பரணர், பட்டினத்தார் ஆகியவர்களும் திருவண்ணாமலையைத் தரிசித்திருத்தல் கூடுமென்று கருதலாம். அவர்களுடைய பாடல்களில் இத்தலம் பற்றிய குறிப்புகள் நிறையக் காணக் கிடக்கின்றன.

8. வச்சிராங்கத பாண்டியன்

இவர் புரவி மீதமர்ந்து வேட்டையாடி வருங்கால் ஒரு புழுகு (புனுகு) பூனையைக் கண்டு அதனைத் துரத்த, அப்பூனை அண்ணாமலையினை அடைந்து வலம் வந்து விழுந்து இறந்தது. பாண்டியன் ஏறிவந்த குதிரையும் கூடவே விழுந்து பட்டது. இரண்டும் உடனே இரு வித்தியாதரர்களாக மாறித் தாங்கள் இருவரும் துர்வாச முனிவரின் சாபத்தால் புழுகு பூனையாகவும் குதிரையாகவும் பிறக்க நேர்ந்ததும், திருவண்ணாமலையினை வலம் வந்த விசேடத்தால் சாபம் நீங்கப் பெற்றதும் கூறினர். இது கேட்ட பாண்டியன் அரசுரிமையைத் தமது புதல்வனான இரத்தினாங்கதனிடம் ஒப்புவித்துத் தான் அண்ணாமலை நாதருக்கு அழகிய திருப்பணிகள் ஆற்றியும் வலம் வந்தும் தேவேந்திர பதவி பெற்றான் என்று புராணம் கூறும்.

9. வல்லாள மஹாராஜன்

இரப்போர்க்கு இல்லை யென்னாது வாரி வழங்கும் வள்ளற் கொடியுடைய *வல்லாள மஹாராஜன் என்னும் மன்னன் திருவண்ணாமலையைத் தலைநகராகக் கொண்டு அறநெறி வழாது ஆட்சி

* இவர் பதினான்காம் நூற்றாண்டினர் என்ப.

செலுத்தி வரும் நாளில், மன்னனது நீதி வழுவா நெறிமுறையின் உறுதியினைச் சோதிக்கத் திருவுளம் கொண்ட அண்ணாமலை யண்ணல், அடியவர் வடிவந் தாங்கி அரசவைக்கு எழுந்தருளினார். அடியவர் விஜயத்தால் ஆனந்தப் பெருக்கடைந்த அரசன், அடியார் பாதம் பணிந்து வந்த காரியத்தை உரைத்தருள வேண்டலும்,

"....................
உன்னையாம் கருதிவந்தது ஒதுவம்
உருஇல் மாறன்
பன்னும்ஐங் கணையால் இன்று படுத்திடும்
துயரை மாற்றக்
கன்னியை நல்கில்கீர்த்தி கடல்ஏழும்
வழங்கும்" என்றார்

-அருணாசல புராணம்.

அரசன் ஏவலாளர்களை அனுப்பி அன்றிரவு அடியவருடன் இருக்கத் தக்க ஓர் கணிகை மாதை அழைத்து வருமாறு பணித்தனன். மங்கையோர் பாகம் கொண்ட மாதேவரின் லீலா விலாசத்தால் அன்றைய தினம் அருணையம்பதியிலுள்ள பரத்தையர் அனைவரும் பிறர் வயப்பட்டிருந்தமையால் அரசன் அழைப்புக்கு இயைந்திலர். அடியவரின் விருப்பம் நிறைவேற்ற இயலாது அரசன் அடைந்துள்ள அளவிலாத் துயரங்கண்ட இளைய ராணி சல்லமாதேவி என்பவர், அரசன் திருவுளம் கொண்டால் அரசனின் அடைக்கலமான தன்னுடைய சரீரத்தைக் கொண்டு அடியவர்க்களித்த வாக்கை நிலைநிறுத்தலாமென்றனள். "இல்லை யென்பது இல்லை" என்னும் தமது எழிற் கொடி தாழாது வழி காட்டிய தன் அருந் துணைவியின் மாண்பினை வியந்து மன்னன் அகமிக மகிழ்ந்து அனுமதி யளித்தனன்.

இரவு பஞ்சணை சேர்ந்த சங்கமர், தூங்காமல் தூங்கும் துயிலில் ஆழ்ந்தவராய் இராப் பொழுதின் பெரும் பகுதி கழியவே "வேந்தனா ருரைத்த வாய்மை வீண்பட லாகா" தென்றஞ்சிய அரசியார், அடியவர்துயில் நீக்கும் பொருட்டாக அவரது திருவடிகளைத் தீண்டலும், அக்கணம் அடியவரின் திருமேனி உருக்கரந்து பச்சைப் பசுங் குழவியாகிப் பால சூரியன் என விளங்கியது.

அரசனும் அரசியும் ஆனந்தப் பெருக்குடைய வராய்ப் பிள்ளைக் கலி தீர்க்கப் பெருமானே எழுந்தருளிவந்த தங்கள் பாக்கியத்தை வியந்து குழந்தையை வாரி அணைத்த வேளையில், மார்புறத் தழுவிய மதலை மார்பகத்தே காணாது மாயமாய் மறைந்தது. சதிபதிகள் இரு வரும் தங்கள் துர்ப்பாக்கியத்தை நினைந்து வருந்தலும் ஸ்ரீ அண்ணாமலைப் பெருமான் ஆகாய வீதியில் வெள்விடைமேல் தோன்றி, அரசே!" உமது பற்றற்ற பக்தி நிலையினை உலகுக்கு உணர்த்தும் பொருட்டாகவே யாம் அடியவர் வேடந்தாங்கி வந்தோம்.

"நற்புதல்வன் வேண்டும் என நாடியிருந் தாய் உனக்குப்
பொற்புதல்வன் என்னநாம் போந்தனமே;- சொற் பயன் ஈது
என்ன இனிதே அறம் இயற்றி இப்புவியில்
மன்ன! இனிவாழ்வாய் மகிழ்ந்து"
"மைந்தன் இலை என்ற மனக்கவலை தீர்த்திடுவாய்;
அந்தம்உறில் என்தன் அடி அடைவாய்;-வந்து உனக்கு
நாம்உத் தரகிரியை நன்கு இயற்றுவோம் என்றான்;
மாமுத்தர் அன்பில் வருவான்"

-துரைவடிவேலனார்

இதற்கிணங்க வருடந்தோறும் வல்லாள மஹாராஜனுக்கு ஈமக்கடன் செய்யும் பொருட்டாக, ஸ்ரீ அண்ணாமலையண்ணல் மாசி மாத மக நட்சத்திரத்தில் பள்ளிகொண்டா பட்டுக்கு எழுந்தருளி உத்தரகிரியை நடாத்தும் உற்சவம் இன்றும் நடைபெற்று வருகின்றது.

10. ஸ்ரீ அருணகிரிநாதர்

திருப்புகழ், கந்தரனுபூதி, கந்தரலங்காரம், கந்தரந்தாதி, திருவகுப்பு முதலியன அருளிச் செய்த செந்தமிழ்ச் சந்தக் கவிராஜரான அருணகிரிநாதர் சரித்திரம் பலவாராக வழங்கப் பட்டு வருகின்றது. இவருடைய முற்பிறப்பு, தாய் தந்தையர், பருவகால நிகழ்ச்சிகள் குறித்துக் கருத்து மாறுபாடுகள் உள்ளன. எனினும் இம் மஹான் திருவருணையில் அவதரித்தவ ரென்பதும், முருகப் பெருமானுடைய திருவருட் கடாட்சம் பெற்றுப் பல பாடல்களை இயற்றின ரென்பதும் யாவரும் ஒப்ப முடிந்த ஒன்றாகும்.

இவருடைய காலம் பதினைந்தாவது நூற்றாண்டின் மத்திய பகுதி என்பது, திருவண்ணாமலையில் அரசு புரிந்த பிரபுடதேவமாராயர் காலத்தில் ஆஸ்தான கவிஞரா யிருந்த சம்பந்தாண்டான் என்னும் தேவி உபாசகருடன் வாதிட்டு வென்ற நிகழ்ச்சியைக் கொண்டு அறியலாம்.

வாழ்க்கையில் சலிப்பெய்தி அறுமுகப் பெருமானின் அருட்பேற்றை நாடித் தவங்கிடந்தும் அவனருள் பெறாமையால், அருணகிரிநாதர் இவ்வாலயத்தின் ஓங்கிவளர்ந்த கோபுரங்களுள் ஒன்றாகிய வல்லாள மஹாராஜன் கோபுரத்தின் மீதேறித் தன்னை அர்ப்பணித்துக் கொள்ளும் வேளையில், முருகவேள் தோன்றி அருணகிரிநாதரை ஆட்கொண்டருளித் தம்மைப் "பாடும் பணியே பணியா"கச் செய்துவரக் கட்டளை யிட்டனர் என்ப.

வேலவர் தாமே"முத்தைத் தரு" என அடியெடுத்துக் கொடுத்து தீட்சை செய்த வரலாறும், தலங்கள் தோறும் யாத்திரை சென்று அற்புதத் திருப்பாடல்கள் இயற்றிய வரலாறும்,

பிரபுடதேவமாராயருக்குக் கம்பத்தில் கந்தவேளின் காட்சி காட்டிய வரலாறும் இவருடைய தனிச் சரித்திர வரலாறுகளில் விரிவாகக் காணத் தகும்.

11. குகை நமசிவாயர்–குரு நமசிவாயர்

சில நூற்றாண்டுகட்கு முன் இப் பதியில் குகை நமசிவாயர் என்ற திருநாமம் பெற்ற சைவப் பெரியார் அற்புதமான சித்திகள் பெற்று விளங்கினார்.

இவருடைய சீடர், குரு நமசிவாயர். இவர் தாம் இருந்தவிடத்திருந்தே ஞானக்கண்ணால் பல காட்சிகள் காணும் திறமை மிக்கவராயிருந்தார். தமது குருதேவரின் ஆக்ஞையைச் சிரமேற்கொண்டு தில்லைத் தலம் சேர்ந்து, ஆனந்தக் கூத்தருக்கு அழகிய திருப்பணிகள் ஆற்றிக் கட்டளைகள் பலவும் ஏற்படுத்தினர்.

12. திருவண்ணாமலை நகரம்

இந்நகர், வடாற்காடு ஜில்லா, திருவண்ணாமலை தாலூகாவின் தலை நகராகும். (இத் தாலூகா 1911-ஆம் வருடம் வரையில் தென்னாற்காடு ஜில்லாவில் சேர்ந்திருந்தது.) விழுப்புரம், காட்டுப்பாடி இருப்புப் பாதை மார்க்கத்தில், விழுப்புரத்திலிருந்து 42-வது மைலிலும், காட்டுப்பாடியிலிருந்து 58-வது மைலிலும் உள்ளது. சென்னை, பெங்களூர், சிதம்பரம், சேலம், பாண்டிச்சேரி, வேலூர், காஞ்சீபுரம் திருச்சிராப்பள்ளி, கடலூர் முதலான நகரங்களிலிருந்து நேரான பஸ் மார்க்கங்களும் உள்ளன.

13. தங்குமிடங்கள்

இந் நகரில் விசேட காலங்களில் வெளியூர்களிலிருந்து வரும் மக்கள் தங்குவதற்கான விடுதிகளும், மடங்களும் நிறைய உள்ளன.

முனிஸிபல் நிர்வாகத்தின்கீழ் பிரயாணிகள் விடுதி (Travellers Banglow) ஒன்றும் உளது.

14. முற்கால ஆட்சி

இத் தலம் முன்னாளில் சோழ மன்னர்களால் ஆளப்பட்டு வந்ததெனவும், கி.பி. பதினான்காம் நூற்றாண்டில் ஹோய்சள வமிசத்தினர் இந்நகரையே தலைநகராகக் கொண்டு

அரசு செலுத்தி வந்தனர் எனவும், பின்னர் விஜயநகர மன்னர்களும், தஞ்சாவூர்நாய்க்க மன்னர்களும் ஆண்டு வந்தனர் எனவும் கூறப்படுகின்றது.

பதினேழாம் நூற்றூண்டில் இப் பிரதேசம் கர்நாடக நவாப்பின் ஆளுகைக்கு உட்பட்டது. கி.பி. 1753 முதல் கி.பி. 1760 வரை மிகுந்த குழப்பத்திற்குள்ளாகி, முராரிராயர், கிருஷ்ணராயர், மிருத்திஸ் அலிகான், பர்க்கத் உல்லாகான், (பிரெஞ்சு) சுப்பிரே (Soupires), சாபினே (Soubinet), (ஆங்கில காப்டன்) ஸ்டீபன் ஸ்மித் (Captain Stephen Smith) முதலியோர் இந் நகரினை முற்றுகையிட்டு மாறி மாறி வெற்றியும் தோல்வியும் அடைந்தனர். கி.பி. 1790இல் திப்பு சுல்தான் கைக்கு வரலாயிற்று.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் இந்நகர் ஆங்கிலேயரின் கைக்கு மாறியது.

15. மலை, குகைகள், தீர்த்தங்கள்

இங்கு வானுற ஓங்கி வளம் பெற விளங்கும் மலையினை ஸ்ரீ அண்ணாமலையண்ணலின் புனிதத் திருவடியாகவே மக்கள் போற்றி வணங்குவர்.

இதன் உச்சி, கடல் மட்டத்திற்கு மேல், 2,668 அடி உயரமுள்ளதெனக் கணிக்கப்பெற்றுள்ளது. இதன் நாற்புறமும் நன்கு செப்பனிடப்பெற்ற கப்பி ரோடு அமைந்து கிரிவலம் வருவோர் சிரமமில்லாது இராப் பகல் எந்நேரத்திலும் எளிதில் வரக்கூடியதாக உள்ளது. இதன் சுற்று எட்டு மைல்கள் ஆகும்.

இம் மகிமை மிகு மலையை வலம் வரும் பக்தர்கள், ஆதி வாரத்தில் சிவபதமும், சோம வாரத்தில் தேவேந்திர வாழ்வும், மங்கள வாரத்தில் பிறவிப் பிணி நீங்கியப் பெரு வாழ்வும், புத வாரத்தில் தேவராகும் தகுதியும், குரு வாரத்தில் முனிவர்க்கும் மேலான பதவியும், சுக்கிர வாரத்தில் விஷ்ணு பதமும், சனி வாரத்தில் நவக்கிரகப் பலனும் பெறுவர். மேலும், சிவராத்திரி, வருடப் பிறப்பு, ஐப்பசி-மிக விசேடம்.

மலையைச் சுற்றி எண் திசைகளிலும் அஷ்டலிங்கங்கள், அஷ்டநந்திகள் ஆகியனவும், முன்னூற்றுபதுக்கு மேலான தீர்த்தங்களும், பல மண்டபங்களும், ஆச்ரமங்களும் உள்ளன.

மலைப் பிரகாரத்தில், சக்கரதீர்த்தம், அக்நிதீர்த்தம், பாண்டவதீர்த்தம், ஸ்ரீ சேஷாத்திரி ஸ்வாமிகள் சமாதி நிலையம், ஸ்ரீ ரமணாச்ரமம், பாலிதீர்த்தம், சிம்மதீர்த்தம், யமதீர்த்தம், சோணநதி, உண்ணாமுலைதீர்த்தம், வருண தீர்த்தம், கௌதமர் ஆச்ரமம், அடி அண்ணாமலை என வழங்கும் அணி அண்ணாமலை ஆலயம், மாணிக்கவாசகர் ஆலயம், அசுவினிதீர்த்தம், ஸ்ரீ ஈசான்ய ஞான தேசிகர் சமாதி நிலையம், ஸ்ரீ துர்க்கையம்மன் ஆலயம், அதனுள் கட்க தீர்த்தம், பவளக் குன்று ஆகியவை உள்ளன.

மலையின் மத்திய பாகத்தில் ஸ்ரீ கந்தாச்ரமம், விருபாக்ஷகுகை, குகை நமசிவாயர் ஆலயம், மாமரத்துக் குகை, சடைச்சாமிகுகை அருட்பால்குகை முதலியனவும், பாததீர்த்தம், முலைப்பால் தீர்த்தம் முதலிய தீர்த்தங்களும் உள்ளன.

வருடத்தில் இருமுறை (கார்த்திகை, தை மாதங்களில்) ஸ்ரீ அண்ணாமலைப் பெருமான் கிரி வலம் எழுந்தருள்வார்.

அண்ணாமலையை நாடி வந்து தன்னிகரில் சித்தி பெற்ற தவ சிரேஷ்டர்களுக்கு அளவில்லை, அவர்களில் விருபாக்ஷ தேவர், ஈசான்ய ஞானதேசிகர், சேஷாத்திரி ஸ்வாமிகள், ரமணமகர்க்ஷிகள் ஆகியோர் குறிப்பிடத் தக்கோராவர்.

மலையின் மத்திய பாகத்திலும், அடிவாரத்திலும் குகைகள், ஆச்ரமங்கள் தீர்த்தங்கள் நிறைய உள்ளன. அவைகளில் இன்றும் சாதுக்கள் வாசம் செய்து வருகின்றனர்.

16. மலையின் மகிமைகள்

திருவண்ணாமலையின் தன்னிகரற்றத் தனிச் சிறப்புக்குக் காரணம், இங்கு ஸ்ரீ அருணாசலப் பெருமான் எழுந்தருளி கடாட்சித்து வருவதுதான். இதனை நம் சமயச் சான்றோர்கள் பெரிதும் புகழ்ந்தேத்திக் கூறியுள்ளனர். பிறக்க முக்தி திருவாரூர்; தரிசிக்க முக்தி சிதம்பரம்; இறக்க முக்தி காசி; ஆனால் நினைத்த அளவிலேயே முக்திச் செல்வத்தை முந்தித் தருவது எம் பெருமான் எழுந்தருளிய திருவண்ணாமலைத் திருத்தலமேயாகும்.

ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் அருளிய சோணசைல மாலையிருந்து சில தருகிறோம்.

அருளே உருவாய் அமர்ந்த அண்ணாமலைப் பெருமான், காலம் தவறாது உரிய நேரத்தில் கோயிலுட்சென்று நம்மை தரிசித்தல் அரிது என்று கொண்டு, அவரவர் இருந்த இடத்திலிருந்தே தரிசித்து உய்ந்திட மாமலையாய்த் திகழ்கிறார்.

'காலம் நன்குணர்ந்து சினகரம் புகுந்து
காண்பரிது எனாது உலகனைத்தும்
சாலநின் றுழியே கண்டிடும் சோண
சயிலனே! கயிலை நாயகனே!'

பிற மலைகள்யாவும் உடற்பிணி போக்கும் மூலிகைகளைத் தான் தரும். ஆனால் இத்திருவண்ணாமலையோ, நினைப்போர் தம் பிறவிப் பிணியையே தீர்த்திடும் மாமருந்து மலை ஆகும்.

'சினவும் நோய் மருந்து வேறு கொண்டிருக்கும்
சிலம்புகள் நாண, உட் கொள்வோர்
சனனநோய் மருந்தாய் எழுந்திடும் சோண
சயிலனே! கயிலை நாயகனே!'

மற்ற மலைகள் வீடு கட்ட மரங்களைத்தான் தரும்; இத்திருவண்ணாமலையோ தன்னை நினைப்பவர்களுக்கு பேரின்ப வீட்டையே நல்கும்.

'ஓவுறும் மனைசெய் பவர்கொள மரம்தாங்கு
ஓங்கல்கள் நாண, உன்னினர்க்குத்
தாவுலும் உயர்வீடு அளித்தருள் சோண
சயிலனே! கயிலை நாயகனே!'

அண்டமே ஊர்; அண்டத்தின் சுவர்களே கோயில் மதில்கள்; அண்டத்தின் வெளிப்பரப்பே கோயில் பரப்பு; திருவண்ணாமலைத் தலமே கோயிற் கருவறை; மலையே கோயிற் கருவறையிலுள்ள சிவலிங்கம் ஆகும்.

"ஏருலாம் அண்டச் சுவர்மதில் மிசைப்பால்
இலங்குறும் அண்ட கோளகையாச்
சாரும் ஆலயத்தில் இலிங்கமாம் சோண
சயிலனே! கயிலை நாயகனே!"

17. மலையில் மகோன்னத தீபம்

"புத்தி தரும் தீபம்; நல்ல புத்திர சம்பத்து முதல்
சித்தி தரும் தீபம்; சிவதீபம்;- சத்திக்கு
உயிராகும் சோணமலை ஓங்கிவளர் ஞானப்
பயிராகும் கார்த்திகை தீபம்" -கார்த்திகை தீபவெண்பா.

ஸ்ரீ அருணகிரிப் பெருமான் உருவமாகவே விளங்கிக் கருணை பாலித்து வரும் இத்தெய்வத் திருமலையின் உச்சியில், கார்த்திகை மாதம் கார்த்திகை தினம் அருட் சோதி தரிசனம் காட்டப் பெறும். பெரிய செப்புக் கொப்பரை ஒன்றில் நெய், துணி, கற்பூரம் ஆகியவற்றைக் கொண்டு மலை உச்சியில் தீபம் ஏற்றப்பெறும்.

கார்த்திகை தீபத்திற்கு வேண்டிய நெய் முதலியவைகளைத் தேவஸ்தான கண்காணிப்பில் சுத்தமாகச் சேமித்து வைத்து இருப்பர். பிரார்த்தனையாளர்களும், பக்த கோடிகளும் உரிய

தொகை செலுத்தினால், அவர்கள் பங்கை சிப்பந்திகள் மூலம் பாதுகாப்போடு மலையில் சேர்க்க வகை செய்வர். நெய், துணி, கற்பூரம் ஆகியவைகளை மட்பாத்திரத்தில் கொண்டு சாரி சாரியாகச் செல்லும் ஊழியர்களும், தீப மேற்றிட 'துரு துரு' என்று நடக்கும் அவர்களின் விரைவு நடைகளும் பக்தர்களின் பேராவலை மேலும் மிகுவிக்கும் என்பதில் ஐயமில்லை.

கார்த்திகை தீபத் திரு நாளன்று மாலை, அலை மோதும் பக்தர்கள் கூட்டம், 'அண்ணாமலைக்கு அரோகரா! அண்ணாமலைக்கு அரோகரா!' என்று கோஷம் எழுப்பும். நாதஸ்வர இசையும், பஜனை கோஷ்டிகளின் பக்திப் பாடலும் நிறைந்து, எத்தகு கடின சித்தமுடையாரையும் மெய்சிலிர்க்கச் செய்து விடும்.

ஸ்ரீ அருணாசலேஸ்வரர் திருக்கோயிலின் எல்லாச் சந்நிதிகளும், கோபுர உச்சிகளும் ஒரே ஒளிமயம் தான்! பரணி தீபத்தின் ஒளி பகலவனையும் மிஞ்சி விடும். ஒளிமயமாய் ஒளிரும் இவ்வுன்னதமான வேளையிலே, கிளிக் கோபுரத்தின் உட்புறமுள்ள பதினாறு கால் தீப தரிசன காட்சி மண்டபத்திலே, பஞ்ச மூர்த்திகள் பெரு மிதத்தோடு எழுந்தருளி மலையை நோக்கி நிற்க அதே சமயம் ஏக காலத்தில் கோயிலிலும், மலை மீதும் நடை பெறும் தீப தரிசனக் காட்சி-காண்டற்கரிய கண் கொள்ளாக் காட்சி ஆகும்.

இலக்கியங்களில்..........

கார்த்திகை மாதத்துக் கார்த்திகை நாளில் மலை மீது விளக்கேற்றி வழிபடும் இவ்வழக்கம், பன்னெடுங்காலமாக நம் நாட்டில் நடந்து வருவதை, 'குன்றத்து உச்சிச் சுடர்' என்று சீவகசிந்தாமணியும், 'நல மிகு கார்த்திகை நாட்டவரிட்ட தலை நாள் விளக்கு' என்று கார் நாற்பதும், `மதி நிறைந்து அறுமீன் சேரும் அகல் இருள் நடுநாள் மறுகு விளக்கு உறுத்து மாலை தூக்கிய பழவிறல் மூதூர் பலருடன் துவன்றிய விழவு' என்று அக நாநூறும் அழகு படக் கூறுகின்றன. மேலும் ஒல்காப் பெரும் புகழ் தொல்காப்பியனாரும், 'வேலி நோக்கிய விளக்கு நிலையும்' (தொல், பொருள் புறத்திணை இயல் 35) என்று குறிப்பிடுகிறார். அதற்கு மெச்சு புகழ் நச்சினார்க் கினியர், 'கார்த்திகைத் திங்கள் கார்த்திகை நாளில் ஏற்றிய விளக்கு' என்று உரை வகுப்பதைக் காணலாம். கி.பி. ஏழாம் நுற்றாண்டில் வாழ்ந்த திருஞான சம்பந்தர்,'...........தொல் கார்த்திகைநாள் தளத்தேந்து இளமுலையார் தையலார் கொண்டாடும் விளக்கீடு ....' என்றருளி, கார்த்திகை விழாவின் மேன்மையோடு அது பெண்டிர்க்கே உரிய பெற்றிமையையும் தொன்மையும் எடுத்துக் காட்டுவதை உணரலாம்.

இத்தகு புராதனமும் புனிதமும் நிறைந்த திருவண்ணாமலைக் கார்த்திகைத் தீபத்தைக் காண்ணாரக் கண்டு களித்திடுவோம். ஒரு சமயம் திருக்கயிலாயத்தில் உமையாளொடு எம்பெருமான் எழுந்தருளிய ஞான்று, அங்குள்ள நெய்த்தீபங்களுள் ஒன்று அணையும் தருவாயில் இருக்க, நெய்யை உண்ண வந்த ஓர் எலி எதிர்பாராத நிலையில் தீபத்தைத் தூண்டி பரமனின் பேரருளுக்கு ஆளாகி, மகாபலி சக்கரவர்த்தியாய் மண்ணகத்தே பிறக்கிறது.

அம்மட்டோ! இந் நிலவுலகத்துச் சிவாலயங்களிலும் நெய்த் தீப மேற்றி கார்த்திகை மாதக் கார்த்திகை நட்சத்திரத்தில் பெரும் பேறு எய்திய அவர் வரலாறு நம் நினைவில் நிழலாடிட, சிவகங்கைத் தீர்த்தத்தில் புற அழுக்குப் போக புனித நீராடி, ஆத்மார்த்தமாக பிரம தீர்த்தத்தில் மூழ்கி அகத் தழுக் கொழிந்து பிரமஞானம் பெற்றிடுவோம்! உடலே குன்று; உள்ளமே கொப்பரை; நேயமேவர்த்தி; இடையறா தியானமே நெய்; பிராணனே கற்பூரம்; ஞானமே அக்னி; அஞ்ஞான இருள் கெட இவைகளைப் பொருத்தி, மெய்ஞானச்சுடர் மேலோங்க தீபதரிசனம் கண்டு எல்லாப் பேறுகளும் பெற்றுய்வோமாக!

சிவப்பிரகாசர் போற்றிய தீப விழா

'மனத்திற்கும் எட்டாத நுண்ணியன்' என்று வேத ஆகமங்கள் கூறி குறை இரக்கின்றன. இக்குறை நீங்க, உயிர்கள் கண்டு மகிழும் வண்ணம், பெரிய மலை உருவில் -அதிஸ்தூல வடிவில் இறைவன் எழுந்தருளி இருப்பதை,

'கருத்தினும் கருத அரிய நுண்ணியன் எண்
கடனற உலகெலாம் காண்பான்
தரித்து அதிதூல வடிவுறும் சோண
சயிலனே! கயிலை நாயகனே!

என்று துறை மங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் தாம் பாடியருளிய சோணசயில மாலையின்கண் தெரிவிக்கிறார். மேலும் அவர், பிறவிக் கடலைக் கடந்து முக்தியாகிய கரையில் சேர விரும்புவோர், வழி தெரியாமையால் ஏற்படும் திகைப்பு நீங்கித் தமது தவ ஒழுக்கமாகிய கப்பலை மேற் கொண்டு செலுத்தி உய்யும் பொருட்டு, கலங்கரை விளக்கம் போன்று உயர்ந்தெழுந்து ஒளிதந்து விளங்குவது, 'திருவண்ணாமலை கார்த்திகை தீபம்' என்னும் கருத்து அமையப் பாடுகிறார். அது வருமாறு:

`பவக்கடல் கடந்து முத்தியங் கரையில்
படர்பவர் திகைப்பற நோக்கித்
தவக்கலம் நடத்த உயர்ந்தெழும் சோண
சயிலனே! கயிலை நாயகனே!'

திருவண்ணாமலை மீது கருமேகங்கள் தவழ்ந்து படர்வது புகை சூழ்ந்தது போன்று காணப்படுகிறது. புகை இருந்தால் நெருப்பு இருக்கு மன்றோ! இதனால் இம்மலை அழலுருவாய் அமைந்ததை நினைவில் எடுத்துக் காட்டுகிறதன்றோ!

மழைமுகில் வந்துதவழ்ந்து விண்படரும்
மலிதரு புகையென எழுந்து
தழலுரு உண்மை விளக்குறும் சோண
சயிலனே! கயிலை நாயகனே!'

திருவண்ணாமலை உச்சியில் கார்த்திகை மாதத்தில் ஏற்றப்படும் விளக்கானது, புற இருளையும் அக இருளாம் அறியாமையையும் ஓட்டி மெய்ஞான ஒளியை ஏற்றி விளக்கு கிறது.

`கார்த்திகை விளக்கு மணிமுடி சுமந்து
கண்டவர் அகத்திருள் அனைத்தும்
சாய்த்துநின் றெழுந்து விளங்குறும் சோண
சயிலனே! கயிலை நாயகனே!'

திருவண்ணாமலைக் குன்றின் மீது ஏற்றப்பெறும் விளக்கானது, அவரவர் இல்லங்களில் ஏற்றப்படும் சிறு சிறு விளக்கு அன்று. உலகுக்கே இடப் பெற்ற ஒளி விளக்கு ஆகும்.

`சீர்தரும் மணியின் அணிந்தன எனகட்
செவியும், ஒண்கேழலின் மருப்பும்,
கார்தரும் உலகவிளக்கு எனும் சோண
சயிலனே! கயிலை நாயகனே!'

திருவண்ணாமலை உச்சியில் கார்த்திகை தீபக் காட்சி எங்ஙனம் இருக்கிறது? மலை உச்சியில் பனிமதி தோன்றித் திகழ, அருகே பேரோளிப் பிழம்பு சுடர் விட்டெரிய காணும் கவின் காட்சி, செந்தாமரை மலரை அணையும் வெள்ளை அன்னம் போல் அல்லவோ காட்சியளிக்கிறது.

'மடலவிழ் மரைமாட் டெகின்என அருகு
மதியுறக் கார்த்திகை விளக்குத்
தடமுடி யிலங்க வளர்ந்தெழும் சோண
சயிலனே! கயிலை நாயகனே!'

18. ஆலய அமைப்பு

இங்குள்ள திருக்கோயில் நமது நாட்டின் மிகப் பெரிய திருப்பணிகள் சிலவற்றுள் குறிப்பிடத் தக்க ஒன்றாகும். பழமையின் அடிப்படையில் புதுமையின் ஒளி வீசுவதை இவ்வாலயத்தின் சிற்ப ஓவியங்கள் நன்கு புலப்படுத்தும். இக்கோவில் சுமார் 24 ஏக்கர் விஸ்தீரணமுள்ள நிலத்தில் அமைந்துள்ளது.

ஆறாம் பிராகாரம் என்று கூறப்படும் வெளிப் பிராகாரத்தில் உள்ள திருமதில் மிக உயரமாகவும், கனமாகவும், உறுதியாகவும், கருங்கல்லினால் கட்டப்பெற்றுள்ளது. திருமதிலின் மத்தியில் நான்கு பக்கங்களிலும் நான்கு உயரமான கோபுரங்கள் வானோங்கி விளங்குகின்றன. கீழ்த் திசையிலுள்ள பெரிய கோபுரம் (ராஜ கோபுரம்) 11 நிலைகளுடன் 217 அடி உயரம் உள்ளது. இதன் அடி நிலை 135 அடி நீளமும், 98 அடி அகலமும் கொண்டதாகும். தெற்குத் திசையிலுள்ள பெரிய கோபுரத்தைத் திருமஞ்சனக் கோபுரம் என்றும், மேற்குத் திசையிலுள்ள பெரிய கோபுரத்தைப் பேய்க் கோபுரம் என்றும், வடக்குத் திசையிலுள்ளதை அம்மணி அம்மாள் கோபுரம் என்றும் வழங்குவர்.

இராஜ கோபுரத்தின் உள் பாகத்தில் வலப்புறமாக அமைந்திருப்பது ஆயிரக்கால் மண்டபம். இடதுபுறம் காணப்படுவது கம்பத்து இளையனார் திருச்சந்நிதி. இதன் மூலத்தானம், வளைகாப்பு மண்டபத்தின் வடகீழ்ப் பாரிசக் கம்பத்தில் அமைந்துள்ளது. இஃது ஸ்ரீ அருண கிரிநாதரின் பிரார்த்தனைக்கு இரங்கிப் பிரபுடதேவமாராயருக்குக் கருணைக் கடவுள் கந்தப் பெருமான் கம்பத்தில் காட்சியருளிய இடமாகும்.

இச் சந்நிதியின் தென்புறமாக நாற்புறமும் திருமாளப் பத்தி மண்டபத்துடன் அமைந்திருப்பது 'சிவ கங்கை' என்னும் புண்ணிய தீர்த்தம். இதன் வட மேல் திசையில் காணப் பெறுவது 'சர்வ சித்தி விநாயகர்' சந்நிதி. சிவகங்கையின் கீழ்ப்புறமாகவும் தென்புறமாகவும் காணப் பெறுவது ஐந்தாம் பிராகாரம்.

சர்வ சித்தி விநாயகர் சந்நிதியின் வடபால் ஆயிரக்கால் மாண்டபத்தின் தென்மேற்குத் திசையில் இருப்பது 'பாதாள லிங்கேசுவரர்' சந்நிதி. இங்கு ஸ்ரீ ரமண மஹர்ஷிகள் பலகாலம் தங்கித் தவமியற்றினர். இச் சந்நிதி திருவண்ணாமலை ஸ்ரீமதி பெரோசா தலையார்கான் அம்மையாராலும், சென்னை ஸ்ரீ ஜே. ஹெச். தாராபூர் அவர்களாலும் புனர் நிர்மாணம் செய்யப்பெற்று 14.5.1949இல் முன்னாள் இந்திய கவர்னர்-ஜெனரல் ஸ்ரீ சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் அவர்களால் திறந்து வைக்கப் பெற்றது.

பெரிய நந்தியின் எதிரில் காணப்பெறுவது 'வல்லாள மஹாராஜன்' கோபுரம். ஸ்ரீ அருணகிரிநாதர் இக் கோபுரத்தின் மீதேறித் தமது ஊனுடலை நீக்கிக் கொள்ள எத்தனித்த காலையில் ஸ்ரீ முருகப் பெருமான் அவர் முன் தோன்றிக் காப்பாற்றி யருளினர். இதன் வடபால் இருப்பது ஸ்ரீ கோபுரத்து இளையனார் சந்நிதி.

"அடல் அருணைத் திருக்கோபுரத்தே
அந்த வாயிலுக்கு
வடஅருகிற் சென்று
கண்டு கொண்டேன்".

என்று அருணகிரிநாதர் ஆனந்தக் களிப்பெய்தியது இவ்விடமே. இங்கு ஸ்ரீ அருணகிரிநாதருடைய மூல விக்கிரஹமும் உத்ஸவமூர்த்தியும் உள்ளன. கோபுரத்தின் தென்பாரிசத்தில் தோற்றுவது ஸ்ரீ கல்யாண சுந்தரேசுவரர் சந்நிதி.

வல்லாள மஹாராஜன் கோபுரத்தின் உள்பகுதியில் வலது புறமாக வனப்புடன் திகழ்வது "சத்திவிலாச சபா மண்டபம்". இங்கு சமய சம்பந்தமான சொற்பொழிவுகள் நடைபெறும். இதன் மேல்புறம் உள்ளது புரவிமண்டபம். கோபுரத்தின் தென்பால் உள் மதிலைச் சார்ந்திருப்பது காலபைரவர் சந்நிதி. இங்குள்ள மூர்த்தி இணையற்ற வீராவேசத்துடன் ஜ்வலிப்பது காணத் தக்கதாகும். அருகில் அமைந்திருப்பதுவே "பிரம தீர்த்தம்" என்னும் புண்ணியத் தடாகம். இதன் மேல்பாரிசத்தில் தொடங்குவது நான்காம் பிராகாரமாகும். இப்பிராகாரத்தின் கீழ்த் திசையில் காணப்படும் பிரதான கோபுரம் "கிளிக் கோபுரம்" என்று வழங்கப்பெறும். இக் கோபுரத்தின் மீதும் கோபுரத்தின் முதல் நிலையிலும் கிளியின் உருவம் அமைந்துள்ளது. இஃது ஸ்ரீ அருணகிரி நாதர் கிளி வடிவந்தாங்கிப் பாரிஜாத மலர் கொண்டு வந்த காலத்துத் தாம் விட்டுச் சென்ற தமது திருமேனியைக் காணாது கிளி உருவாகவேயிருந்து "அநுபூதி"பாடி யருளிய வரலாற்றை நினைவுறுத்துவதாகும்.

கிளிக் கோபுரத்தில் உட்புறம் எதிரில் தோற்றும் 16 கால் மண்டபம் எனப்படும் காட்சி மண்டபத்தில், கார்த்திகை தீபத் திருநாள் மாலையில் பஞ்சமூர்த்திகள் எழுந்தருளி மலையை நோக்கி நிற்க, ஏககாலத்தில் தீப தரிசனக் காட்சி நடைபெறும். இம் மண்டபத்தின் எதிரில் மேல் புறமாக துவஜஸ்தம்பமும், பரணி தீபம் வைக்கும் அகண்ட தீப ஸ்தம்பமும் காணலாம்.

இது மூன்றாம் பிராகாரமாகும். இப் பிராகாரத்தில், ஸ்ரீ சம்பந்த விநாயகர் சந்நிதி, மகிழ மரம், திருக்கல்யாண மண்டபம். ஸ்ரீ அருணகிரி யோகீசுவரர் சந்நிதி, தேவி உண்ணாமுலையின் திருச்சந்நிதி, யாகசாலை, காளத்தி லிங்கேசுவரர் சந்நிதி, தேவஸ்தான காரியாலயம், பழநியாண்டவர் சந்நிதி, ஏகாம்பரேசுவரர் சந்நிதி, ஜம்பு லிங்கேசுவரர் சந்நிதி, பிடாரி-சப்த கன்னிமார் சந்நிதி, சிதம்பர லிங்கேசுவரர் சந்நிதி ஆகியவற்றைக் காணலாம்.

இப் பிராகாரத்தின் உள் மதிற் சுவர்களில் ஏராளமான பழமையான கல்வெட்டுகள் காணப்பெறும்.

ஸ்ரீ அண்ணாமலைப் பெருமான் திருச் சந்நிதியின் பிரதான வாயிலில் உள்ள ஸ்ரீ அதிகார நந்தீஸ்வரரைத் தரிசித்து உள்ளே சென்றால், ஆங்கு இரண்டாம் பிராகாரத்தில்

சிவக்ஷேத்திரத்துக்குரிய சகல மூலவர்களும், உத்ஸவமூர்த்திகளும், சமயாசாரியர்களும், நாயன்மார்களும், ஸ்ரீ ருக்மிணி சத்யபாமா சமேத ஸ்ரீ வேணுகோபால ஸ்வாமியும் காட்சியளிப்பர்.

இதன் மேல்பத்தியான முதற் பிராகாரத்தில் ஸ்ரீ தெட்சணாமூர்த்தியும், சண்டி கேசுவரரும் விளங்குவர்.

இருதய ஸ்தானமாக விளங்கும் கர்ப்பக்கிருஹத்தில் ஸ்ரீ அண்ணாமலைப் பெருமான் லிங்காகார வடிவத்தில் அருட்காட்சி யளிக்கின்றார்.

இரண்டாம் பிராகாரத்தில் வடதிசையில் உள்ள வைகுண்ட வாயில் வழியாகத் தேவியின் திருச்சந்நிதி சேரலாம். சந்நிதி முன்னுள்ள துவஜஸ்தம்ப மண்டபத்தில் நவக்கிரக மூர்த்திகள் விளங்குவர்.

தேவி சந்நிதியில் உள்ள மஹா மண்டபத் தூண்களில் அஷ்ட லட்சுமிகள், ருத்ர தூர்க்கை, மஹா சக்தி, மஹா சரஸ்வதி, சித்தி விநாயகர், கார்த்திகேயர், காலாந்தகர், வீணரதார், வீரபத்திரர் ஆகியோர் கண் கொள்ளாக் கலைத் திறனுடன் காணப் பெறுவர்.

கர்ப்பக் கிருஹத்தைச் சுற்றிய பிராகாரத்தில், ஸ்ரீ பராசத்தியம்மன், பரிவார மூர்த்திகள், சண்ட சத்தி ஆகியவர் காட்சி யளிப்பர்.

ஸ்ரீ பராசத்தியம்மன் சந்நிதியின் வடபுறத்தில், திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்தாரால், ஸ்ரீ மாணிக்கவாசகஸ்வாமிகள் அருளிய "திருவெம்பாவை"ப் பாடல்கள் சலவைக் கல்லில் பொறிக்கப் பெற்றுப் பதிக்கப் பெற்றுள்ளன்

கர்ப்பக் கிருஹத்தில் திரிபுவனேச்வரியான தேவி உண்ணாமுலை, திவ்ய மங்கள ஸ்வரூபியாகப் பேரெழிலுடன் பிரகாசிக்கின்றாள்.

19. தனவணிகர் தருமங்கள்

இக் கோவில் மிகவும் சிதலமாகி இருந்ததை, சுமார் 50 வருடங்கட்கு முன் நாட்டுக்கோட்டை நகரத்தார்களாகிய தனவணிகப் பிரமுகர்கள் முன்வந்து, சுமார் முப்பத்தைந்து லட்சம் ரூபாய் செலவு செய்து ஆலயத்தைப் புதுப்பித்தும், திருவாபரணங்கள்-வாகனங்கள் முதலியன செய்து வைத்தும், 12.6.1903இல் மஹா கும்பாபிஷேகம் நடாத்தினர்.

மீண்டும் நகரத்தார்களின் பேருதவி கொண்டு சுமார் ரூபாய் நாற்பது ஆயிரம் செலவில், தாரண ஆண்டு வைகாசித் திங்கள் 22ம் நாள் (4.6.1944) பானுவாரம், திரயோதசி திதி,

சுவாதி நட்சத்திரம், சித்தயோகம் கூடிய சுபதினத்தில் உதயாதி நாழிகை 12.30க்கு மேல் 16.15 நாழிகை அளவில் ஸிம்மலக்கினத்தில் அஷ்ட பந்தன மஹா கும்பாபிஷேகம் செய்விக்கப்பெற்றது.

காரைக்குடி, சா. நா. சா. குடும்பத்தினரால் "சாதுக்கள் சத்திரம்" ஒன்றும், கோட்டையூர், மெ. க. குடும்பத்தினரால் "அன்ன சத்திரம்" ஒன்றும், காரைக்குடி, முத்து. அரு. குடும்பத்தினரால் "வேத பாடசாலை" ஒன்றும், அவரவர் சொந்தப் பொருள் கொண்டு சொந்த நிர்வாகத்தில் நடைபெற்று வருகின்றன.

நகரத்தார்கள் பொதுவில் அமைத்துள்ள "ஒயாமடம்" என்ற மடம் ஒன்றும் நகரை அணி செய்கின்றது.

ஸ்ரீ அம்பிகையின் திருத்தேர் பழுதுபட்டிருந்ததை, தர்மகர்த்தாக்களின் பிரயத்தனத்தின் பேரில் நாட்டுக் கோட்டை நகரத்தார்களால் இருபத்தையாயிர ரூபாய் செலவில் புதிய முறையில் புதுப்பிக்கப் பெற்று, 29.6.1956இல் மிக விமரிசையாக வெள்ளோட்டம் செய்விக்கப் பெற்றது.

காரைக்குடி, சா. நா. சா. குடும்பத்தினரால் கலையழகுடன் காட்சி தரும் ஸ்ரீ பித்ஷாண்டவருக்குத் தங்கக் கவசம் செய்து வைக்கப் பெற்றுள்ளது.

20. திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடம் தருமங்கள்

1. ஸ்ரீ அண்ணாமலைப் பெருமான் திருச்சந்நிதி முன்பாக 'சிவ சிவ' ஒளிவிளக்கு (Neon Sign) பொருத்தப் பெற்றுக் காண்போர் கண்ணுக்கும் கருத்துக்கும் 'சிவ சிவ' ஒளி பரப்பி விளங்குகின்றது.

2. ஸ்ரீ மாணிக்கவாசகப் பெருமான் இத்தலத்தில் சிறப்பித்து அருளிச் செய்த திருவெம்பாவைப் பாசுரங்கள் இருபதும் வெண் நிற சலவைக் கற்களில் உலோக எழுத்துக்களில் உறுதியான முறையில் பொறிக்கப் பெற்று ஸ்ரீ உண்ணாமுலையம்மன் ஆலயத்தில் ஸ்ரீ பராசக்தி அம்பிகை சந்நிதியின் வடபால் பதிக்கப் பெற்றுள்ளது.

3. தேவி உண்ணாமுலையின் திருச்சந்நிதியில் மின்சார விளக்குகள் பழுதடைந்திருந்ததை முற்றிலும் புதுப்பிக்கும் பொருட்டாக ரூ. 5,000 நன்கொடை வழங்கியுள்ளார்கள்.

4. ஸ்ரீ அண்ணாமலை யண்ணலுக்கு நாள் தோறும் பால் அபிஷேகம் செய்து அதனைப் பள்ளிக் குழந்தைகளுக்கு விநியோகம் செய்யும்படியாகத் திட்டம் செய்து அதற்கென ரூ.30,000 மூலதனம் ஏற்படுத்தியுள்ளார்கள்.

5. ஸ்ரீ அண்ணாமலையார் சந்நிதி முன்பாக நாள் தோறும் காலை, மாலை இரு காலங்களிலும் இதற்கென நியமிக்கப்பெற்ற ஓதுவார் ஒருவரால் திருமுறை ஓதப்பெற்று, அதனை ஒலிபரப்பி மூலம் நகர் எங்கணும் ஒலிக்கும்படி செய்துள்ளார்கள். இதற்கென ரூ.24,000 சேமநிதியும் அமைந்துள்ளார்கள்.

6. ஸ்ரீ குமர குருபர மூர்த்திகளின் நினைவு நாளான திருக்கார்த்திகை தீப தினத்தன்று, அந்தணர், அருந்தவர், ஆதரவற்றோர்க்கு அன்னம் பாலித்தல் நடாத்தி வருகிறார்கள். இக் கைங்கர்யத்திற்கென அமைத்துள்ள சேமநிதி ரூ.12,000.

7. திருவண்ணாமலையில் படிக்காசு நிதி.-ஸ்ரீ அண்ணாமலைப் பெருமான், ஸ்ரீ உண்ணாமுலையம்மை திருச் சந்நிதிகளில் முப்போதும் திருமேனி தீண்டிப் பூசனை புரியும் ஆதி சைவ அந்தணர்களுக்குப் பிரதி தினமும் படிக்காசு அளித்தற் பொருட்டாக ரூ. 13,000 சேமநிதி ஏற்படுத்தியுள்ளார்கள்.

21. சீரமைப்பு

இவ் வாலயத்தில் முன்னாள் தர்மகர்த்தர்களான ஆற்காடு, ராவ்பஹதூர் தனகோட்டி முதலியார் அவர்களும், இராமச்சந்திரபுரம், தீ. சொ. முருகப்ப செட்டியார் அவர்களும், கோட் டையூர், பெ. க. அ.சித. வீரப்ப செட்டியார் அவர்களும், ஸ்ரீ அண்ணாமலையார் திருப்பணியில் பேரார்வங்கொண்டு சிறிதும் சலிப்பின்றித் திறம்படச் செயலாற்றியதன் காரணமாக, ஆலயத்தின் புணரமைப்பும், பெருவிழாக்களும், காட்சிக்கும் கருத்துக்கும் பெரு விருந்தாக விளங்குகின்றன. அவர்களுடைய அரும் பெரும் கைங்கர்யங்கள் என்றும் மறக்க இயலாதவையாகும்.

பெரிய (ராஜா) கோபுரத்தின் வடபால் இருக்கும் திட்டுவாசல் முன்புள்ள "சித்திர மண்டபம்" திரு வண்ணாமலை ஸ்ரீமான் ராமு முதலியார் வகையினரால் நிர்மாணிக்கப் பெற்றது.

சில ஆண்டுகட்டு முன்பாக, திருப்பத்தூர் ஸ்ரீமான் சூரிய நாராயண செட்டியார் அவர்களால், திருமஞ்சனக் கோபுரம் பழுது பார்த்துச் சீரமைக்கப் பெற்றது.

அன்னவரால் ஸ்ரீ அண்ணாமலையார் ஆலயத்தில் தினந்தோறும் திருமுறை ஓதும் பொருட்டாக, தேவார பாடசாலை அமைக்கப் பெற்று நடந்து வருகின்றது.

ஸ்ரீ அருணசலேஸ்வரர் தேவஸ்தானத்தின் தர்மகர்த்தர்களில் ஒருவரும், 'மாடர்ன் கபே' உரிமையாளருமான ஸ்ரீமான்R.நாராயணசாமி ரெட்டியார் அவர்கள், ஸ்ரீ கம்பத்திளையனார் சந்நிதியில் கருங்கல் தளவரிசை முதலான பணிகள் செய்து புதுப்பித்தும் மேற்படி சந்நிதி முன் மண்டபத்தில், கந்தப்பெருமான் காட்சி தரும் விசேடத் தலங்களான திருப்பரங்குன்றம்,

திருச்செந்தூர், திருவாவினன்குடி, திருவேரகம், திருத்தணி (குன்று தோறாடல்), பழமுதிர் சோலை ஆகிய தலங்களின் காட்சிகளையும், ஸ்ரீ கோபுரத்திளையனார், ஸ்ரீ கம்பத்திளையனார் ஆகிய மூர்த்திகளின் வரலாற்றுக் காட்சிகளையும், கந்தர் அனுபூதிப் பாடல்களையும் பெரிய உருவில் காண்போர் உள்ளம் கவரும் வண்ணம் திட்டச் செய்து அமைத்துள்ளார்கள்.

சமயப் பேரவை நடைபெறுதற் பொருட்டு அமைந்துள்ள சத்தி விலாச சபா மண்டபம் சீர்திருத்தப் பணிக்கென சென்னை, மணலி லெட்சுமணசாமி முதலியார் தர்ம ஸ்தாபனத்திலிருந்து ரூ.5,000 நன்கொடை வழங்கியுள்ளார்கள்.

22. திருவிளக்குப் பணி

கோட்டையூர், அ.க.அ.மெ. குடும்பத்தினர் சுமார் 35 ஆண்டுகட்கு முன்பாக, ஆலயத்தில் மின்சார விளக்குகள் அமைத்து அதற்கெனத் தனியாக எலெக்டிரிக் எஞ்சின் வாங்கி வைத்துள்ளனர்.

மின்சார விளக்குகள் அமைத்து நீண்ட காலம் ஆனமையால், அவைகள் ஆங்காங்கு துண்டிக்கப் பெற்றுப் பழுதடைந்துள்ளன. மீண்டும் புதிதாக (Rewiring) நிர்மாணிக்க வேண்டிய நிலையில் இருக்கின்றது. இக் கைங்கர்யத்திற்குச் சுமார் முப்பதாயிரம் ரூபாய் வரையில் செலவாகலாம் என்று மதிப்பிடப் பெறுகிறது. ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெரும் சோதியாக விளங்கும் ஸ்ரீ அண்ணாமலையார் ஆலயத்தில் திருவிளக்குப் பணி சிறப்புறச் செய்விப்பவர், அவர் அருட்கடாட்சத்தால் அக இருள் அகலப்பெற்று ஆன்மீக ஒளி பெறுவது உறுதியாகும். புண்ணியவான்களான தனவந்தர்கள் மனங்கொள்ள வேணுமாய் ஸ்ரீ அண்ணா மலை யண்ணலின் திருவளைப் பிராத்திகின்றோம்.

தேவி உண்ணாமுலையின் திருச்சந்நிதி மின் விளக்குகள், திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடம் அதிபர் அவர்கள் அளித்த நன்கொடை ரூ.5,000த்தில் முற்றும் புதுப்பிக்கப் பெற்று நிலவொளி வீசி நிலவுகின்றது.

ஸ்ரீ அண்ணாமலைப் பெருமான் திருச்சந்நிதி மின் விளக்குகள் புதுப்பிக்கும் கைங்கர்யத்திற்காக, திருப்புகலூர் ஸ்ரீ அக்னீஸ்வர ஸ்வாமி தேவஸ்தானத்திலிருந்து ரூ.10,000 நன்கொடையளித்துள்ளார்கள்.

23. நித்திய பூஜா காலங்கள்

1. உஷத் காலம்	காலை	மணி	7.30
2. கால சந்தி	காலை	மணி	9.30
3. உச்சிக் காலம்	பகல்	மணி	11.30
4. சாயரக்ஷை	மாலை	மணி	5.30
5. இரண்டாங் காலம்	இரவு	மணி	8.30
6. அர்த்த ஜாமம்	இரவு	மணி	9.30

24. பஞ்சப் பருவ விசேடங்கள்

பிரதி	மாதப் பிறப்பு	பிரதி	சோம வாரம்
பிரதி	அமாவாசை	பிரதி	சனிக்கிழமை
பிரதி	பௌர்ணமி	பிரதி	பிரதோஷம்
பிரதி	சுக்ல சதுர்த்தி	பிரதி	சுக்ல சஷ்டி

25. உத்ஸவங்கள்

சித்திரை	மாதம்	வசந்த உத்ஸவம் (மிருகசீர்ஷ நட்சத்திரம் தொடங்கி 10 நாட்கள் நடைபெறும்).
ஆனி	மாதம்	தெட்சணாயன பிரம்மோத்ஸவம் (10 நாட்கள் நடைபெறும்).
ஆடி	மாதம்	ஆடிப்பூர உத்ஸவம், கடைசி நாள் தீ மிதி விழா (10 நாட்கள் நடைபெறும்).
புரட்டாசி	மாதம்	நவராத்திரி உத்ஸவம் (10 நாட்கள் நடைபெறும்).
ஐப்பசி	மாதம்	ஸ்கந்த சஷ்டி உத்ஸவம் (6 நாட்கள் நடைபெறும்)

உத்ஸவங்கள்

கார்த்திகை	மாதம்	பிரம்மோத்ஸவம்-தீபத் திருவிழா (10 நாட்கள் நடைபெறும்).
மார்கழி	மாதம்	மாணிக்கவாசகர் உத்ஸவம் (10 நாட்கள் நடைபெறும்).
தை	மாதம்	சங்கராந்தி உத்ஸவம் (10 நாட்கள் நடைபெறும்).

பங்குனி	மாதம்	உத்திரத் திருவிழா (ஆறு நாட்கள் நடைபெறும்).

26. விசேட உத்ஸவங்கள்

சித்திரை	மாதம்	ஸ்ரீ நடராஜர் அபிஷேகம் (திருவோண நட்சத்திரம்).
சித்திரை	மாதம்	ஸ்ரீ திருநாவுக்கரசர் உத்ஸவம் (சதயநட்சத்திரம்).
வைகாசி	மாதம்	அபிஷேகம் (விசாக நட்சத்திரம்)
வைகாசி	மாதம்	ஸ்ரீ திருஞானசம்பந்தர் உத்ஸவம் (மூல நட்சத்திரம்).
ஆனி	மாதம்	ஸ்ரீ மாணிக்கவாசகர் உத்ஸவம் (மக நட்சத்திரம்)
ஆனி	மாதம்	ஸ்ரீ நடராஜர் திருமஞ்சனம் (உத்திர நட்சத்திரம்).
ஆடி	மாதம்	அம்பாள் நிறையணி (வரலட்சுமி நோன்பு).
ஆடி	மாதம்	ஸ்ரீ சுந்தரமூர்த்தி ஸ்வாமிகள் உத்ஸவம் (சுவாதி நட்சத்திரம்).
ஆடி	மாதம்	ஆகஸ்ட் மாதம் 15-ம் தேதி ஸ்ரீ அருணகிரிநாதர் விழா (சுதந்திர தினம்).
ஆவணி	மாதம்	விநாயக சதுர்த்தி
ஆவணி	மாதம்	ஸ்ரீ கிருஸ்ண ஜயந்தி
ஆவணி	மாதம்	பிட்டுத் திருவிழா (மூல நட்சத்திரம்)
ஆவணி	மாதம்	ஸ்ரீ நடராஜர் அபிஷேகம் (சுக்ல சதுர்த்தசி).
புரட்டாசி	மாதம்	சரஸ்வதி பூஜை, அம்பாள் நிறையணி (சுக்ல-நவமி).
புரட்டாசி	மாதம்	ஸ்ரீ நடராஜர் அபிஷேகம் (சுக்ல-சதுர்த்தசி).
(15, ஆகஸ்டு)	மாதம்	ஸ்ரீ அருணகிரிநாதர் விழா.
புரட்டாசி	மாதம்	ஸ்ரீ அருணகிரிநாதர் (மூலம்) திரு நட்சத்திரம்.
ஐப்பசி	மாதம்	அன்னாபிஷேகம் (அசுவினி நட்சத்திரம்).
கார்த்திகை	மாதம்	1,008 சங்காபிஷேகம் (சோம வாரம்).
மார்கழி	மாதம்	வைகுண்ட ஏகாதசி
மார்கழி	மாதம்	திருவாதிரை விழா (ஆருத்ரா தரிசனம்)
தை	மாதம்	திருவூடல் உத்ஸவம் (2-ம் தேதி).

தை	மாதம்	மணலூர்ப்பேட்டை தீர்த்தவாரி (5ம் தேதி).
தை	மாதம்	கலசபாக்கம் தீர்த்தவாரி (ரதஸப்தமி).
தை	மாதம்	தைப்பூசம் (தீர்த்தவாரி).
மாசி	மாதம்	பள்ளிகொண்டா பட்டு தீர்த்தவாரி. வல்லாள மஹாராஜன் உத்தரகிரியை (மக நட்சத்திரம்)
மாசி	மாதம்	மஹா சிவராத்திரி (அமர-சதுர்த்தசி).
மாசி	மாதம்	ஸ்ரீ நடராஜர் அபிஷேகம் (சுக்ல சதுர்த்தசி).

27. கார்த்திகை தீப தரிசன பிரம்மோத்ஸவம்

இவ்விழா, கார்த்திகை மாதம் உத்தராட நட்சத்திரத்தில் துவங்கப்பெற்றுப் பத்தாவது நாளாகிய திருக்கார்த்திகை தினத்தன்று மஹா தீப தரிசனமும் பின்னர், தெப்பத் திருவிழாவும் கிரிப் பிரதட்சிணமும் நடை பெறும்.

திருநாள்முக்கிய வாகனங்கள், விபரங்கள்

முதல்	நாள்	மூஷிகம், மயில், அதிகாரநந்தி, அன்னம் சின்ன ரிஷபம்.
2-வது	நாள்	வெள்ளி இந்திர விமானங்கள் முதலியன.
3-வது	நாள்	சிம்மம், வெள்ளி அன்னம் முதலியன.
4-வது	நாள்	வெள்ளிக் கற்பக விருக்ஷம், வெள்ளிக் காமதேனு, இதர வெள்ளி வாகனங்கள்.
5-வது	நாள்	வெள்ளி மூஷிகம், வெள்ளி மயில், வெள்ளிப் பெரிய ரிஷபம் ஆகியன.
6-வது	நாள்	காலை, அறுபத்து மூவர் திருவீதி எழுந்தருளல்; இரவு, வெள்ளி ரதம், வெள்ளி இந்திர விமானம் ஆகியன.
7-வது	நாள்	பஞ்சமூர்த்திகள், திருத்தேர்.
8-வது	நாள்	மாலை, தங்கவண்ண மேரு, பிக்ஷாண்டவர் உத்ஸவம். இரவு, பஞ்சமூர்த்திகள், குதிரை வாகனம் ஆகியன.
9-வது	நாள்	கைலாச வாகனம், காமதேனு வாகனம் ஆகியன.
10-வது	நாள்	உதயாத் பூர்வம், 4 மணிக்குப் பரணி தீபம். பகல், பிரமதீர்த்தம்-தீர்த்தவாரி. மாலை 6 மணிக்கு பஞ்சமூர்த்திகள் தங்கவண்ண விமானங்களில் எழுந்தருளி, ஜ்யோதி ஸ்வரூப மஹா தீபதரிசனம். இரவு, தங்க வண்ண ரிஷபம் முதலியன.

11-வது நாள்	அய்யன் குளம் என்னும் இந்திர தீர்த்தத்தில் தெப்பத் திருவிழா.
12-வது நாள்	ஸ்ரீ அபீதகுசாம்பாள் சமேத ஸ்ரீ அருணசலேசுவரர் கிரிப் பிரதட்சிணம்.
13-வது நாள்	சண்டிகேசுவரர் உத்஼வம்.

கல்வெட்டுகள்

இங்கு நூற்றுக்கணக்கான கல்வெட்டுகள் உள்ளன. இவற்றுள் பலவற்றை, அரசாங்கத்துத் தென்னிந்திய கல்வெட்டுப் பதிவு நிலையத்தினர் பதிவுசெய்துள்ளனர். இவற்றை A.R.Nos.419 to428 of1929, 469 to1952 என்று எண்ணிட்டுள்ளனர். இவற்றுள் 469to 574 of 1952 எண்ணுள்ள கல்வெட்டுகள், தென்னிந்தியக் கல்வெட்டுகளின் எட்டாவது தொகுதியில் 57 முதல் 165 வரையுள்ள எண்ணுடன் (South Indian Inscription, Vol. VIII, Nos. 57 to 165) வெளியாகியுள்ளன.

28. கல்வெட்டு செய்திகள்

இக் கோயிலில் முதற் பராந்தகன் காலம் (கி.பி. 907-953) முதல் சதாசிவராயர் காலம் (கி.பி. 1543-1564) வரையில் பொறிக்கப் பெற்ற கல்வெட்டுகள் 125 உள்ளன. அக் கல்வெட்டுக்களில் காணப்பெறும் அரசர்கள் பெயர் வருமாறு:

கோப்பரகேசரி வர்மன் (பராந்தகன் I)	கி.பி. 907-953
கன்னர தேவர்	கி.பி. 949-967
இராசகேசரி பன்மர் (பராந்தகன் II)	கி.பி. 956-973
வீரபாண்டியன் தலைகொண்ட கரிகாலன்	கி.பி. 956-969
இராஜேந்திரன் I	கி.பி. 1012-1044
இராசாதிராசன் I	கி.பி. 1018-1054
இராசேந்திரன் II	கி.பி. 1052-1064
குலோத்துங்கன் I	கி.பி. 1070-1120
இராஜாராஜன் II	கி.பி. 1146-1173
இராஜராஜன் III	கி.பி. 1216-1241
கோப்பெருஞ் சிங்கன்	கி.பி. 1216-1246

இராஜேந்திரன் III	கி.பி. 1246-1279
விக்கிரம பாண்டியன் I	கி.பி. 1268-1281
குலசேகர பாண்டியன் I	கி.பி. 1268-1311
வீரவல்லாள தேவர் III	கி.பி. 1291-1342
அரியண்ண உடையார் (ராசப் பிரதிநிதி)	கி.பி. 1377
வீர விருப்பண்ண உடையார் (அரியண்ண உடையார் மகன்)	கி.பி. 1379
தேவராயர் II	கி.பி. 1423-1446
வீர விஜயராயர் (தேவராயர் குமாரர்)	கி.பி. 1422-1424
மல்லிகார்ச்சுனராயர்	கி.பி. 1447-1465
கிருஷ்ண தேவராயர்	கி.பி. 1509-1529
சதாசிவராயர்	கி.பி. 1543-1565

மேற்கண்ட அரசர்கள் காலத்தில் ஏற்பட்ட மெய்க் கீர்த்திகளும், அக்கால ஆட்சியின் அமைப்பு முறைகளும், கோயிலுக்கு மனமுவந்து செய்த சாதாரண விளக்கு, சந்தி விளக்கு, நந்தா விளக்கு, அரை விளக்கு, கால் விளக்கு என்று சொல்லப் பெறும் பல்வேறு வகைப் பட்ட விளக்கு தானங்களும், ஆடு, மாடு, நிலம், அணிகலன் முதலிய தானங்களும் பேசப் பெறுகின்றன.

மாணிக்கவாசகர் கோயில்

திருவண்ணாமலையை வலம் வரும் வழியில் தேவாரம் போற்றும் அணி அண்ணாமலைத் தலம் உள்ளது. அதற்கு அருகில் மாணிக்கவாசகருக்கு தனிச் சிறு கோயில் அமைந்து விளங்குகிறது. இங்கிருந்துன் மாணிக்கவாசகர் சுவாமிகள் இயற்கையில் இனிய அழகில் தோய்ந்த நிலையில், 'திருவெம்பாவை' (அருளியதாகக் கருதுகிறார்கள்) அருளியுள்ளார்.

திருப்பணியாளர்கள்	திருப்பணிகள்	செலவு மதிப்பு
கோட்டையூர், அ. க. வகையறா குடும்பத்தினர் சொந்தமாகவும், பிற நகரத்தார்களின் உதவி பெற்றும்.	ஸ்வாமி கோவில், அம்மன் கோவில், அணியொட்டிக் கால் மண்டபம் முதலான திருப்பணிகள்.	ரூ. 12,00,000
கோட்டையூர், அ. க. அ.மெ. குடும்பத்தினரும், ராம. பெ. குடும்பத்தினரும். கோட்டையூர், க. வீ. அள. குடும்பத்தினர்.	அணி அண்ணாமலைக் கோவில் திருப்பணி, அக்ரஹார விடுதி, கும்பாபிஷேகம் (27.1.1918) நிலம்.	3,50,000 50,000
செட்டி நாடு, ராஜா ஸர். அண்ணாமலை செட்டியார் அவர்கள்.	சிவகங்கைத் தீர்த்தம், திருமாளப்பத்தி மண்டபம், படி, சர்வ சித்தி விநாயகர் ஆலயம், வளைகாப்பு மண்டபம்.	1,75,000
இராமச்சந்திரபுரம், தீ. சொ- தீ. நா-தீ. அ. குடும்பத்தினர்.	பிரமதீர்த்தம் கருங்கல் திருப்பணி.	75,000
கோட்டையூர், அ. க. குடும்பத்தினர். கோட்டையூர், ராம. பெ. குடும்பத்திநர். கோட்டையூர், அ. க. அ. மெ. குடும்பத்தினரும், அ. க. அ. சித. வெ. ந. அவர்களும்.	திருக்கல்யாண மண்டபம். துர்க்காம்பாள் ஆலயத் திருப்பணி. 16 கால் மண்டபத்தைக் சேர்ந்த கச்சு சாத்து மண்டபம் திருப்பணி. பெரிய ராஜகோபுரம் தொடங்கி பிரம்ம தீர்த்தம் வரை கருங்கல் தளவரிசை.	50,000 35,000 35,000 25,000

நன்கொடையாளர்கள்	ஆபரணங்கள்	செலவு மதிப்பு
அரிமளம், செ. சித.சிதம்பரம் செட்டியார் அவர்கள்.	இரத்தின கிரீடம்	ரூ. 45,000
கானாடுகாத்தான், வெ. வீர. வெ. அரு. நாகப்ப செட்டியார் வகையறா	தனி அம்மன் இரத்தின கிரீடம்.	30,000
கோட்டையூர், அ. க. அ. மெ. வெ. குடும்பத்தினர்.	தங்க நாகாபரணம்	25,000
கொத்தமங்கலம், ராம. அரு. வெ. பெத்தாச்சி செட்டியார் அவர்கள்.	வைர நெற்றிப் பட்டம் இரண்டு.	21,000
கோட்டையூர், பெ. க. அ. சித. வீரப்ப செட்டியார் அவர்கள்.	சோமாஸ்கந்த மூர்த்திக்கு வைர அபயஹஸ்தம்.	15,000
கானாடுகாத்தான், சா. அ. அண்ணாமலை செட்டியார் அவர்கள்.	மூலஸ்தான அம்மனுக்கு தங்க கவசம்	8,000
கோட்டையூர், அ. க. ராம. மெ. சித. சிதம்பரம் செட்டியார் அவர்கள்.	ஸ்ரீ அண்ணாமலையார் மூலஸ்தான வைர நெற்றிப்பட்டம்.	8,000
கொத்தமங்கலம், சி. அ. சி. ராம. ராமன் செட்டியார் அவர்கள்.	உத்ஸவ விநாயகர் தங்க கவசம்.	7,000
தேவகோட்டை, எ. பெரி. கரு. சித சிதம்பரம் செட்டியார் அவர்கள் குமாரர்.	கம்பத்திளையனார் தங்க கவசம்.	5,000

நன்கொடையாளர்கள்	வாகனங்கள்	செலவு மதிப்பு
		ரு.
இராமச்சந்திரபுரம், தீ.சொ-தீ. நா-தீ. அ. குடும்பத்தினர்.	வெள்ளி ரதம், கட்டிடம்.	1,40,000
கோட்டையூர், பெ. க. அ. சித. வீரப்ப செட்டியார் அவர்களும் நகரத்தார்களும்.	ஸ்வாமி தேர்	55,000
கோட்டையூர், அ. க. அ. மெ. குடும்பத்தினர்.	பெரிய வெள்ளி ரிஷபம், கட்டிடம்.	45,000
கோட்டையூர், பெ. க. அ. சித. வீரப்ப செட்டியார் அவர்கள்.	வெள்ளி பெரிய இந்திர விமானம்.	40,000
மேற்படி	வெள்ளி சின்ன இந்திர விமானம்.	18,000
காரைக்குடி, முத்து. அரு. குடும்பத்தினர்.	வெள்ளி கற்பக விருக்ஷம், வெள்ளி காமதேனு, கட்டிடம்.	35,000 35,000
கானாடுகாத்தான், சா. ராம. மு. ராம. ராமசாமி செட்டியார் அவர்கள்.	அம்மன் தேர்	20,000
திருவண்ணாமலை கோவிந்தசாமி செட்டியார்.	சுவாமி அம்மன் சந்நிதிகளில் ரத விளக்குகள்.	
தேவஸ்தானம்.	மர ரிஷபவாகனம்	

29. திரு அண்ணாமலையார் புகழ்பாடும் நூல்கள்

1. தேவாரம்
2. திருவாசகம்
3. பதினொராந் திருமுறை
4. பெரிய புராணம்
5. கந்த புராணம்
6. திருப்புகழ்
7. சோண சைல மாலை
8. திருவருணைக் கலம்பகம்
9. அருணாசல புராணம்
10. அருணாசல மஹாத்மிய வசனம்
11. திருவருணை அந்தாதி
12. அருணகிரி அந்தாதி
13. அண்ணாமலை வெண்பா
14. அண்ணாமலை சதகம்
15. கார்த்திகை தீப வெண்பா
17. சோணாசல வெண்பா
18. சோணாசல சதகம்
19. திருவருணைக் கலி வெண்பா
20. திருவண்ணாமலைத் திருவருட் பதிகம்
21. அருணாசலீசர் பதிகம்
22. அருணாசலேசுவரர் பதிகம் 2
23. உண்ணாமுலையம்மன் சதகம்
24. அருணாசலேசர் நவகாரிகை மாலை
25. உண்ணாமுலையம்மன் வருகைப் பதிகம்
26. அருணாசல சதகம்
27. அருணாசல அட்சர மாலை
28. அண்ணாமலையார் வண்ணம்

29. திருவண்ணாமலைப் பதிகங்கள்
30. அண்ணாமலைப் பஞ்ச ரத்னம்
31. திருவருணைத் தனி வெண்பா
32. அட்சரப் பாமாலை
33. ஸ்ரீ அருணாசலேசுவரர் உயிர் வருக்கம் படைத்தற் பாமாலை
34. அருணாசல அக்ஷர மண மாலை
35. அருணாசல நவமணி மாலை
36. அருணாசல பதிகம்
37. அருணாசல அஷ்டகம்
38. அருணாசல பஞ்ச ரத்னம்

உ

சிவமயம்

அண்ணாமலையார் துணை

மெ. க. அன்ன சத்திரம்
திருவண்ணாமலை

125 ஆவது நிறைவு நுற்றாண்டு விழா மலர்

1872-1997

நினைக்க முத்திதரும் திருவண்ணாமலைத் தலத்தில் கேரள சிங்கவள நாடாகிய பெரம்பூர் நாட்டில் மாற்றூரான வீரபாண்டிய புரத்தைச் சேர்ந்த கோட்டையூர் மண்ணூருடையார் பிரிவினரான எங்கள் முன்னோர் மெய்யப்ப செட்டியார் மைந்தர் கருப்பன் செட்டியாரின் மக்கள் 1. பொய்சொல்லா மெய்யன் செட்டியார் 2. அழகிய மெய்யன் செட்டியார் 3. வீரன் செட்டியார் ஆகிய மூவராலும் மெ. க. அன்னச் சத்திரம் என்ற பெயரால் திருவண்ணா மலையில் ஆங்கிரச கார்த்திகை கரு 28.11.1872 வியாழக்கிழமை நிறுவப்பெற்ற அன்ன சத்திரத்திற்கு 125 ஆண்டுகள் நிறைவுபெறுவதை மகிழ்ச்சியோடு கொண்டாடுகின்றோம்.

அவர்களின் வழித்தோன்றல்கள் தொடர்ந்து இச் சத்திரத்தை நல்ல முறையில் நடத்தி வந்தனர். இன்றைய தலை முறையினராகிய நாங்களும் சிறப்பாக நடத்தி வருவதோடு 125ஆவது ஆண்டு விழாவைக் காண்பதில் பெருமை அடைகின்றோம்.

எங்கள் சத்திரத்தைச் சேர்ந்த திருவாளர்கள் 1. அ. க. அ. சித. வெ. வேங்கடாசலம் செட்டியார், 2. அ. க. ராம. மெ. கி. மெய்யப்ப செட்டியார், 3. க. வீ. சொஅழ. அழகப்ப செட் டியார், 4. அ. க. அ. சித. வெ. சிதம்பரம் செட்டியார் ஆகிய நால்வரும் அண்ணா மலையார் கோயில் டிரஸ்டிகளாக இருந்திருக்கின்றனர்.

திருவண்ணாமலையில் மெ. க. குடும்பத்தார் செய்த அறங்கள்

1. கோட்டையூர் திரு. அ. க. குடும்பத்தினர் சொந்தப் பொருளைக் கொண்டும் நகரத்தார்களிடம் நன்கொடை பெற்றும் ஸ்ரீ அருணாசலேசுவர சுவாமி தேவஸ்தானத்தில் சுவாமி கோவில் அம்மன்கோவில் ஆகிய பழைய கோவில்களைப் பிரித்துப் புதிய நாகரிகத்துக்குத் தக்கபடி அணி ஒட்டிக்கால் மண்டபங்கள்போட்டு ஆலயத்திற்குள் வலம் வரும்படியாகப் பிரகாரங்கள் வைத்து, திருப்பணி செய்து பரிவாரதேவதைகள் வைக்கும்படியாகக் கட்டிடங்கள் கட்டியுள்ளனர்; விநாயகர் பழநி ஆண்டவர் கோவில்களையும் புதியதாய்க் கட்டியும் தளவரிசை செய்துள்ளனர்; அம்மன் கோவிலையும் பழைய கோவிலைவிட அதிகப் பெரியதாயும் வலம் வருதற்குத் தகுந்தாற்போல் அணி ஒட்டிக்கால் மண்டபங்கள் போட்டும், சுவாமி கோவில் அம்மன் கோவில் கொடிமரத்தருகில் பெரிய மண்டபங்கள் போட்டும் பணி செய்தனர்.

   இவற்றின் செலவு ரூ.12,00,000-0-0

   மேற்படி திருப்பணி விசுவாவசி-வைகாசி 30, (12.6.1905) திங்கட்கிழமை கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

   இரண்டாவது கும்பாபிஷேகம் தாரண-வைகாசி 22, (4.6.1944) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

2. கோவிலுக்குள்ளிருக்கும் சிவகங்கைத் தீர்த்தக் குளத்தைக் கோட்டையூர் திரு. க. வீ. அழ. வகையார் பழைய குளத்தைப் பிரித்து அகலப்படுத்தியும், ஆழப்படுத்தி வெட்டியும், கருங்கல்லினால் நாலு பக்கமும் படித்துறைகள் கட்டியும் திருமாளிகைப்பத்தி மண்டபம் நாலுபக்கமும் கட்டியும் விநாயகர் கோவில் மிக அழகாய்க் கட்டியும் வளைகாப்பு மண்டபத்தைப் புதிதாகக் கட்டியும் இரும்புக் கிராதிகள் போட்டும் நந்தவனம் வைத்தும் மேற்படி பிள்ளையாருக்கு நாடோறும் இரண்டுகால பூஜை அபிஷேக நைவேத்தியங்கள் மாதம் 1க்கு ரூ.75 திட்டத்தில் 4 பணி ஆட்கள் வைத்து நிரந்தரமாய் நடந்து வரும்படிக்கு ஏற்பாடு செய்துள்ளனர்.

   திருப்பணிச் செலவு ரூ.1,75,000-0-0

3. திரு. க. வீ. அழ. குடும்பத்தார் மேற்படி விநாயகருக்கு வெள்ளிக் கவசங்கள், வெள்ளிக் குத்துவிளக்கு, பித்தளைத் திருவாட்சி, பித்தளைப் பீடம், படி முதலிய செய்து வைத்துள்ளனர். இவற்றுக்குச் செலவு ரூ.5000-0-0

4. சுவாமி அம்பாள் பரிவாரங்களுக்குத் தினந்தோறும் (ஆச்சி அம்மாள் மூலமாக) க. வீ. அழ. குடும்பத்தாரால் கற்பூரம் 7 கிளை வெள்ளித் தீபாராதனைத் தட்டில் இரண்டு

காலத்திற்கும் தீபாராதனைக்கு ரூபா 25 திட்டத்தில் கொடுத்து நட்ததி வரும் வகையில் மாதம் 1க்கு ரூ.25-0-0

தளவரிசை செய்தது.

5. கோட்டையூர் திரு. அ. க. அ. மெ. வேங்கடாசலம் செட்டியார் வகையினர் சிவகங்கைத் தீர்த்தத்திற்கும் ஆயிரக்கால் மண்டபத்திற்கும் இடையில் கருங்கல் பலகையினால் பெரிய கோபுரம் முதல் வல்லாள மகாராஜா கோபுரம் வரையில் தளவரிசை போட்டுச் செய்த திருப்பணிச் செலவு ரூ.20000-0-0

6. கோட்டையூர் திரு. அ. க. அ. சித. வெ. நடேசன் செட்டியார் அவர்கள் சத்தி விலாசத்திற்கும், பிரும தீர்த்தத்திற்கும் இடையில் கருங்கல் தளவரிசை போட்டதற்கும் ஆயிரக்கால் மண்டபத்திற்குத் தெற்கில் படி கட்டியதற்கும் பெரிய கோபுரத்திற்குள் கருங்கல் தளவரிசை போட்டதற்கும் திருப்பணிச் செலவு ரூ.5000-0-0

துர்க்காம்பாள் கோவில் திருப்பணி

7. கோட்டையூர் திரு. அ. க. குடும்பத்தார் தங்கள் சொந்தப் பொருளைக் கொண்டும் நகரத்தார்களிடம் நன்கொடை பெற்றும் மூலஸ்தானம் முதல் கருப்பக்கிரகம் அந்திராளம் மகா மண்டபம், அலங்கார மண்டபம், நவராத்திரிக் கொலுஅலங்கார மண்டபங்களும் கட்டித் திருப்பணி செய்தவகையில் ரூ.35000-0-0

சங்காபிஷேகம்

8. கார்த்திகைச் சோமவாரத்தில் கோட்டையூர் திரு. அ. க. அ. மெ. வகையார் சங்கு 1008 வாங்கி வைத்தும், வலம்புரிச்சங்கு 1-க்கு ரூ.500 ல் தங்கக் குவளை கட்டியும், வெள்ளிக் குத்து விளக்கு 2-ம் ஒற்றைமுகக் கற்பூரத் தட்டு 1ம் செய்து வைத்தும் ரூ.800 செலவு செய்து பல ஆண்டுகளாக நடத்திவரும் சங்காபிஷேகத்தை, இப்போது கோட்டையூர் திரு. வெ. சித. அழகப்பசெட்டியார் அவர்கள் பிரதிவருடமும் கார்த்திகை உற்சவத்தில் 3ஆம் திருநாள் அன்று உச்சிக்காலத்தில் 1008 சங்காபிஷேகம் செய்ய ஸ்ரீ அருணசலேசுவரர் தேவஸ்தானத்தில் ரூ.15000 கொடுத்துக் கட்டளை ஏற்படுத்திச் சங்காபிஷேகம் நடத்தி வருகிறார்கள்.

காலைசந்தியில் பால் கொழுக்கட்டை நைவேத்தியம்.

9. கோட்டையூர் திரு. அ. க. ராம. மெ. சித. சிதம்பரம் செட்டியார் அவர்கள் ஸ்ரீ சம்பந்த விநாயகருக்குச் சொந்தத்தில் சாமான்கள் விட்டு, பால் கொழுக்கட்டை நைவேத்தியம் செய்து சுவாமிக்கு ஆராதனை செய்து தேசாந்திரிகளுக்கு விநியோகம் செய்து வந்தார்கள். செலவு ரூ.30-0-0.

10. திருவண்ணாமலை ஸ்ரீ அருணாசலேசுவர சுவாமி தேவஸ்தானத்தில் தினந்தோறும் காலையிலும் மாலையிலும் திரு. மெ. க. அன்னச் சத்திரத்திலிருந்து பால் கொடுத்து வருகிறார்கள்.

11. கோட்டையூர். திரு. க. வீ. மு. ப. பசுமடத்திலிருந்து தினந்தோறும் காலையிலும் மாலையிலும் சந்தனம் சேர் 1-ம், பன்னீர் சிறியபாட்டில் 1-ம் விபூதிபடி 1/2-ம், கற்பூரம் பலம் 5-ம் பால்படி 2-ம் கொடுத்து வந்தார்கள்.

12. கோட்டையூர். திரு. மெ. க. அன்னச் சத்திரம் வகையார் திருவண்ணாமலையில் ரூ. 150000-த்தில் கட்டிடங்கள் கட்டியும் ரூ.1,50,000-க்குப் பசுங்கரை கிராமம் வாங்கி வைத்தும் வைப்பு நிதி ஏற்படுத்தி, வேத பாடசாலைகள் வைத்து 16 பிள்ளைகளுக்கு இனாம் சாப்பாடு போட்டு இனாமாகச்சொல்லிக் கொடுத்ததுடன், மேற்படி பிள்ளைகள் தேவஸ்தானத்தில் காலையிலும் மாலையிலும் வேதப்பாராயணம் சொல்லிக்கொண்டு வந்தார்கள். இப்போது போதிய பிள்ளைகள் வராததால் நிறையப் பள்ளிப்பிள்ளைகட்குத் தங்க இடம் கொடுத்து உணவு, உடைகள் வழங்கி, புத்தகங்கள் தந்து சிறப்பாக ஆதரிக்கப்பெறுகிறார்கள்.

13. மேற்படியார்கள் சுவாமி அபிஷேகத்திற்குப் பிரதி தினமும் காலையிலும் மாலையிலும் நகரத்தார்கள் நிதியிலிருந்து திரு. மெ. க. அன்னச்சத்திரம் மூலமாக (பால் படி 14-ம்) ஒவ்வொரு காலத்திற்கும் அபிஷேகத்திற்கு அனுப்பி வருகிறார்கள். பிரதி தினம் இரண்டு வேளையிலும் உற்சவக்காலங்களிலும் வந்த பிராமணர்களுக்கும், மற்றவர்களுக்கும் அன்னதானம் போட்டும் ரூ.15,000-ம் செலவு செய்து 100 வருடங்களாக நடத்தி வருகிறார்கள்.

14. திரு. அ. க. அ. மெ. குடும்பத்தார் கார்த்திகை 5-வது உற்சவத்திற்கு ரூ.35000-த்தில் வெள்ளி ரிஷப வாகனம் சொந்தத்தில் செய்து மேற்படி வாகனம் வைப்பதற்கு ரூ.7500-ல் கட்டிடங்கள் கட்டியும் மேற்படி வாகனத்துடன் வரும் எலக்ட்ரிக் இஞ்சின் ரூ.2000த்தில் வாங்கியும் எலக்ட்ரிக் விளக்குகளும் கியாஸ் லைட்டுகளும் எண்ணெய்த் தீவட்டிகளும் வாண வேடிக்கைகளும் ரூ. 400 செலவிட்டு உற்சவத்தைச் சிறப்பாய் நடத்துகிறார்கள். மேற்படியார்கள் ரூ.90,000-செலவு செய்து எலக்ட்ரிக் இஞ்சின் 2. நித்தியப்படி உபயோகத்திற்கும் உற்சவ காலங்களுக்கும் உபயோகப்படுத்தி வரும்படி

இஞ்சின் ஏற்பாடு செய்தும் மேற்படிக்குக் கட்டிடம்கட்டியும் மாதம் 1-க்கு ரூ.600 வீதம் எலக்ட்ரிக் தீபமும் சுவாமி அம்பாள் திருவாட்சி எண்ணெய்த் தீபங்களும் சுற்றுக் கோவிலுக்குச் சில்லறை எண்ணெய்த் தீபங்களும் கொடுத்து நடத்தி வந்தார்கள்.

15. கோட்டையூர். திரு. அ. க. ராம. மெ. சித. சிதம்பரம் செட்டியார் அவர்கள் மூலஸ்தானம் சுவாமிக்கு அளித்த விபூதிப்பட்டம் 1-ல் சீமைக்கமலம் 1-க்கு ரூ.2550. பலசவயிரம் 74-க்கு ரூ.4318. தங்கம் ரூ.587. கூலி ரூ.200. ஆக மொத்த வராகனிடை 86-க்கு ரூ. 7655-0-0

16. மேற்படியூர் திரு. அ. க. அ. மெ. வேங்கடாசலம் செட்டியார் அவர்கள் வகையார் மூலஸ்தானம் சுவாமிக்கு அளித்த தங்க நாகாபரணம் 1-க்குக் கீழ்ச்சுருள் 1. மேல்படம் 1 ஆக உருப்படி 2-க்கு வராகனிடை 3080-க்கு ரூ.25000-0-0.

17. மேற்படியூர் திரு. அ. க. அ. மெ. வகையாருக்காக மெய்யப்ப செட்டியார் அவர்கள் முயற்சியின் பேரில் கோயில் முழுவதற்கும் எலக்ட்ரிக் தீபம்போட இஞ்சின் 2. மேற்படி கட்டிடம் உள்பட ரூ.90000-0-0

18. மேற்படி அ. க. அ. மெ. குடும்பத்தார் அளித்த வெள்ளி ரிஷபம் சகடை உள்பட மதிப்பு ரூ. 35000-0-0

19. மேற்படி கட்டிடம் ரூ.7500-0-0

20. திரு. அ. க. ராம. அரு. அருணாசலம் செட்டியார் அவர்கள் வழங்கிய பிரதோஷ வெள்ளிச் சின்ன ரிஷபம் 1-க்கு மதிப்பு ரூ.3000-0-0

21. மேற்படியூர் திரு. க. வீ. அழ இராமனாதன் செட்டியார் அவர்கள் மூலஸ்தான சுவாமிக்கு அளித்த வெள்ளிக் குத்துவிளக்கு 2-க்கு எடை 3458-8-0-க்கு ரூ.3458-8-0

22. மேற்படியார் அவர்கள் அம்மன் மூலஸ்தானத்திற்குக் கொடுத்த வெள்ளிக் குத்துவிளக்கு எடை ரூ.2010க்கு ரூ.2010-0-0

23. கோட்டையூர். திரு. ராம. அழ. சிதம்பரம் செட்டியார் அவர்கள் மூலஸ்தானம் ரூபா எடை 1800-க்கு மதிப்பு ரூ. 1350-க்குச் சேதாரம் ரூ.50 போக ரூ.1300-0-0

24. கோட்டையூர் திரு. அ. க. அ. சித. வெ. நடேசன் செட்டியார் சோமவாரச் சங்கு அபிஷேகத்திற்காகச் செய்து வைத்த வெள்ளிக் குத்துவிளக்கு 2- ஒற்றைக் கற்பூரத் தட்டுக்கும் கூலி உள்பட விலை மதிப்பு ரூ.500-0-0

25. கோட்டையூர். திரு. அ. க. அ. சிதம்பரம் செட்டியார் அவர்கள் சுவாமிக்குப் பொன்முடி 1-ம் பொன் முப்பட்டை 1ம்-பொட்டு உள்பட காசிக் கமலம் 1-ம் தங்கம் ஆறு பட்டைப் பூணூல் உள்பட வராகனிடை 414.5க்கு ரூ. 2745-0-0

26. மேற்படியார் அளித்த தங்கக் குவளை கட்டிய வலம்புரிச்சங்கு 1-க்கு ரூ.750-0-0

27. மேற்படியார் வழங்கிய காண்டாமிருகக் கொம்பு 1-க்கு மதிப்பு ரூ.100-0-0

28. கோட்டையூர் திரு. வெ. சித. அழகப்ப செட்டியார் அவர்கள் ஸ்ரீ சோமாஸ்கந்தருக்கு வெள்ளிக்கவசம் சுமார் 8.5 கிலோவில் செய்து வைத்திருக்கிறார்கள்.

29. திரு. அ. க. அ. சித. அழ. சிதம்பரம் செட்டியார் அவர்கள் மாறலில் அண்ணாமலையாரின் ஆவுடையாருக்கு ரூ.5,000 செலவில் வெள்ளிக்கவசம் செய்து வைக்கப்பெற்றது.



திருவண்ணாமலைத் தேவஸ்தானத்தைச் சேர்ந்த ஆதி அருணாசலம் என்கிற

அணி அண்ணாமலைத் திருப்பணி

1. கோட்டையூர் திரு. அ. க. அ. மெ. வகையார்களும் திரு. ராம. பெ. அவர்களும் சேர்ந்து பழைய கோவிலை முழுதும் பிரித்துப் புதியதாக நல்லவிதமாக, சுவாமி அம்மன் கோவில் உள்பட கருப்பக்கிரகம் அந்திராளம் மகாமண்டபம் முதலிய வைகளும் கட்டி, பரிவாரங்களுக்கும் கட்டிடம் கட்டி, சுவாமி அம்பாளையும் வலம் செய்யும்படியாக உள் பிரகாரத்தில் மண்டபம் முழுதும் கட்டி, கோபுரமும் கட்டி, திருமதிகளும் கட்டி, அக்கிரகாரம் விடுதி கட்டி, திருப்பணி செய்த வகையில் ரூ.3,50,000-0-0

   மேற்படி கும்பாபிஷேகம் பிங்கள தை. கா. ஞாயிற்றுக்கிழமை 27.1.1918 இல் நடைபெற்றது.

2. மறுபடி திரு. அ. க. அ. சித. அழ. சிதம்பரம் செட்டியார் அவர்களால் ரூபாய் நாற்பதாயிரம் செலவிட்டுக் கோயிலைப் பழுது பார்த்து, வன்னம் வைத்து பிலவங்க வைகாசி ரூ.19-5-1967 வெள்ளிக்கிழமை கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

3. திரு. அ. க. அ. மெ. வகையார் அணி அண்ணாமலை சுவாமி அம்பாளுக்கு நாகாபரணமும் வெள்ளிக் கவசங்களும் பரிவாரங்களுக்கு வெள்ளிக் கவசங்களும் செய்து வைத்திருப்பதற்கு ரூ.5,000-0-0

4. திரு. அ.க.அ.மெ. வகையார் மேற்படி கோவிலுக்கு இரண்டு கால பூஜைக்குக் கட்டளை வைத்து அபிஷேகம் நைவேத்தியம் வகைகளும், சிப்பந்திகளுக்கு, பிரசாதப் பட்டு வாடாக்களும் செய்து வருவதுடன், நந்தவனமும் வைத்துப் பூஜைக்கு மலர் கொடுத்து வரும்படி ஏற்பாடு செய்து வேலைக்காரர்களுக்குச் சம்பளமும் கொடுத்து நடத்திவருவதற்கு மாதம் 1-க்குச் செலவு ரூ. 200-0-0

5. மேற்படி அறங்கள் நிரந்தரமாய் நடந்துவரும் பொருட்டு ரூ. 50,000-க்கு அணி அண்ணாமலையில் நிலம் வாங்கிவைத்தும் அபிஷேகத்திற்குக் காலம் 1-க்கு 2படி பால் கொடுத்தும் நடத்தி வருகிறார்கள்.

6. அணி அண்ணாமலையில் திருப்பணிக்கு விடுதி கட்டியும் 10-வீடு அக்கிரகாரம் கட்டியும் வேலைக்காரர்களுக்குக் குடியிருக்க வீடுகட்டியும் செலவு செய்த வகையில் ரூ.10000-0-0

திருவண்ணாமலையில் ஏனைய நகரத்தார் செய்த அறங்கள்

1. ராஜா மண்டபம் என்கிற கலியாண மண்டபம், இராமச்சந்திரபுரம். திரு. தீ. சொ. நா. தீ. அ. வகையார் மிக அழகாக மர வேலைகள் செய்தும், கருங்கல் தூண்களெல்லாம் சலவைக்கல் மாதிரி பளபளப்பு வேலைகள் செய்தும், தாம்பரத் தகட்டினால் கொட்டகை போட்டும், லஸ்தர் குளோப்பர்களினால் அலங்கரித்தும், 4மர பீரோவுக்குள் பெரிய கண்ணாடிகள் வைத்தும், வர்ண வேலைகள் மிகவும் அழகாய்ச் செய்தும் மேற்படி மண்டபத் திருப்பணிசெய்ய ரூ.50000-0-0

2. கோவிலுக்குள்ளிருக்கும் பிருமதீர்த்தக் குளத்தைக் கானாடுகாத்தான். திரு. வெ. சா. குடும்பத்தார். மேற்படி பழைய குளத்தைப் பிரித்து அகலப்படுத்தியும் ஆழப்படுத்தியும் உள்ளிருந்த கருங்கல் பாறையை ஜம்பர் போட்டு உடைத்தெறிந்தும் அழகாய் நாலு பக்கமும் கருங்கல்லினால் படிகள் கட்டியும் திருப்பணி செய்ய ரூ.75000-0-0

3. கோட்டையூர் திரு. ராம. பெ. நாராயணன் செட்டியார் அவர்கள் பெரிய கோபுரத்திற்கு வெளியில் 16-கால் மண்டபத்தைச் சேர்ந்தாற்போல் கீழ்புறம் உற்சவகாலங்களில் வாகனங்களில் சுவாமியை எழச்செய்து கச்சு சாத்தும் மண்டபம், கருங்கல் தூண் நிறுத்தி இரு பக்கங்களில் பாவுக்கல்லினால் மண்டபம் போட்டும், கல்யாணக்கொட்டகை மாதிரி மரத்தினால் மிக அழகாய்ச் சித்திர வேலைகள் செய்தும் தாம்பரத் தகட்டினால் கொட்டகைபோட்டுச் செய்திருக்கும் திருப்பணிச் செலவு ரூ.35000-0-0

4. காரைக்குடி திரு. ஆ. வி. ப. முரு. முருகப்ப செட்டியார் அவர்கள் சுவாமி சந்நிதி அக்கிரகாரத்தில் ரூ. 20000 செலவு செய்து கட்டிடம் கட்டியும், கார்த்திகைப் பிருமோற்சவகாலத்தில் பரதேசிகளுக்கும் ஏழைகளுக்கும் சாப்பாடு போட்டும், தேர்முட்டித் தெருவில் தண்ணீர்ப்பந்தல் வைப்பதற்கு ரூ.5000த்தில் கட்டிடம் கட்டியும், வேலைக்காரர்கள் குடியிருக்க ரூ.5000த்தில் வீடு வாங்கியும் மாதம் 1-க்கு ரூ.120 செலவுசெய்து ஏழைகளுக்குக் நீர்மோரும் கம்பங்கஞ்சியும் நல்ல தண்ணீரும் வருஷம் முழுதும் கொடுத்து 6-வருஷ காலமாய் நடத்திவந்தார்கள்.

5. நகரத்தார் ஒயா மடம் திருஊடல் தெருவில் இடம்வாங்கி (ரூ.1500000) பதினைந்து லட்சம் ரூபாய் செலவு செய்து கல் மண்டபம் கட்டி, கார்த்திகைப் பெருவிழாக்களிலும் சாதாரணமான நாட்களிலும் வருகிற நகரத்தார்களிடம் மகமை வசூல் செய்து, வைப்பு நிதி ஏற்படுத்தி, இருக்கிற நிதியிலிருந்து தொகைகள் எடுத்தும் கார்த்திகைப் பெருவிழாவில் 7-வது திருநாள் முதல் பூஜை ஆரம்பித்து 11-வது திருநாள் வரையில் நாள் 5-க்கு பூஜை நடத்தியும் நாள் 1-க்குச் சுமார் 6000 மக்களுக்கு மேல் 7000 மக்கள் வரையில் வந்தவர்களுக்கு இல்லையென்று சொல்லாமல் அன்னதானம் நடத்தி வருகிறார்கள். மேற்படி பூஜையும் மேற்படி மடமும் ஏற்படுத்தி 200-வருஷ காலமாய்

நடந்து வருகிறது. மேற்படி பூஜைக்கும் வருஷம் 1-க்கு ரூ. 6000 வரையில் செலவு ஆகிறது.

6. மேற்படி தர்மத்தில் மேற்படி மடத்திலிருந்து கார்த்திகை விழாவில் பெரிய கோபுர தீபத்திற்காக ரூ.35-ம் கிரி நெய் தீபத்திற்காக ரூ.50-ம் பிரார்த்தனைக் காணிக்கைக்காக ரூ.50-ம் தேவஸ்தானத்தில் தவறாமல் செலுத்தி நடத்தி வருகிறார்கள்.

2-ஆவது திருநாள் மண்டபப்படி.

7. கோட்டையூர் திரு. ராவ்பஹதூர் பெ. க. அ. சித. வீரப்ப செட்டியார் M.B.E. அவர்கள் மேற்படியார்கள் தம்பி அ. சி. அ. வீரப்ப செட்டியார் அவர்கள் ரூ.35000-த்தில் சுவாமிக்கு வெள்ளி இந்திரவிமானம் செய்தும் மேற்படியார் தமக்கை திருமதி வள்ளியம்மை ஆச்சி அவர்கள் ரூ.15000-த்தில் அம்மனுக்கு வெள்ளிச் சின்ன இந்திர விமானம் செய்தும் மேற்படி விமானங்கள் வைப்பதற்கு ரூ.7000-த்தில் கட்டிடம் கட்டியும் மேற்படி விழாவை மேற்படி விமானங்களில் செய்வித்தும் கியாஸ் லைட்டுகளும் எண்ணெய்த் தீவட்டிகளும் வாண வேடிக்கைகளும் இரண்டு வருஷத்திற்கு முன் ரூ.500-ல் செலவு செய்து நடத்தி வந்ததை இப்போது இரண்டு வருஷகாலமாய் ரூ.250-ல் செலவிட்டு உற்சவத்தை நடத்தி வந்தார்கள்.

4-ஆவது திருநாள் மண்டபப்படி.

8. காரைக்குடி திரு. முத்து. அரு. வகையார் திருவண்ணாமலையில் ரூ.75000-த்தில் இரண்டு கட்டிடங்கள்கட்டி வேதம், சாஸ்திரம் இரண்டு பாடசாலைகள் வைத்து 30 பிள்ளைகளுக்கு இனாம் சாப்பாடுபோட்டு இனாமாகச் சொல்லிக் கொடுக்கிறார்கள் மேற்படி பிள்ளைகள் தேவஸ்தானத்தில் காலையிலும் மாலையிலும் வேதப்பாராயணம் சொல்லிக்கொண்டு வருகிறார்கள்.

8-ஆவது திருநாள் மண்டபப்படி

9. காரைக்குடி திரு. சா. நா. சாத்தப்ப செட்டியார் குடும்பத்தார் சாதுக்கள் மடத்திலிருந்து 8-வது திருநாள் பிட்சாண்டவருக்கு அபிஷேக ஆராதனை அலங்காரம்செய்து, தங்கரேக்குப் போட்ட கிரி வாகனத்தில் நடத்திவருகிறார்கள்.

10. மேற்படியார்கள் ரூ.100000-த்தில் கட்டிடங்கள் 2-கட்டியும் சாதுக்களுக்கும் ஏழை மக்களுக்கும் வந்தவர்களுக்கும் இல்லையென்று சொல்லாமல் அன்னதானம் அளித்தும் 63-நாயன்மார்கள் குருபூஜை அந்தந்த நட்சத்திரங்களில் நடத்தியும் மார்கழி ஆருத்திரா தரிசனத்தில் கூத்தப்பெருமானுக்கு ரூ.500 வரை செலவு செய்து அபிஷேக அலங்காரம் செய்து விழா நடத்தியும் வருகிறார்கள். மேற்படி சாதுக்கள் மடத்திற்காக ஆடையூர்

கிராமத்தில் ரூ.100000-த்துக்கு நிலம் வாங்கியும் வைப்புநிதி வைத்தும் ரூ. 10000-ம் வருஷம் 1-க்குச் செலவு செய்தும் நிரந்தரமாய்ப் பல காலமாய் நடத்தி வருகிறார்கள்.

9.ஆவது திருநாள் மண்டபப்படி.

12. கானாடுகாத்தான் திரு. வெ. சா. வகையார் காலைசந்தியில் மாதம் 1-க்கு ரூ.200 செலவுசெய்து கட்டளை நடத்தியும், ரூ.75000-ம் செலவு செய்து பிருமதீர்த்தக் குளம் திருப்பணி செய்தும், அம்பாளுக்கு மகாரதம் என்கிற தேரை ரூ.20000-த்தில் செய்து வைத்தும், மூலஸ்தானம் அம்பாளுக்கு ரூ.7500-ல் தங்கக் கவசம் செய்து வைத்தும், உற்சவத் தனி அம்பாளுக்கு ரத்தினக் கிரீடம் ரூ.30000-த்தில் செய்து வைத்தும் கார்த்திகைப் பிரும உற்சவத்தில் ரூ.700 வரையில் செலவு செய்து அபிஷேகம் அலங்காரம் கியாஸ் லைட்டுகளும் எண்ணெய்த் தீவட்டிகளும் வாண வேடிக்கைகளும் ஏற்பாடு செய்து நடத்தி வருகிறார்கள்.

13. காரைக்குடி திரு. சா. மெ. அரு. அருணாசலம் செட்டியார் அவர்கள் மார்கழி மாதத்தில் மாணிக்கவாசகர் விழா நடத்தியும், நடராசாவுக்கு ஆருத்திரா தரிசனத்திற்கு அபிஷேகம் செய்தும், அறைக்கட்டு உற்சவமும் வீதி உற்சவமும் ரூ.500 வரையில் செலவு செய்து நடத்தி வருகிறார்கள்.

14. பள்ளத்தூர் திரு. சு. சித. சிதம்பரம் செட்டியார் வகையார் ரூ.2600 தேவஸ்தானத்தில் நிதி கொடுத்து வருஷம் 1-க்கு ரூ.150 திட்டத்தில் மாதம் தோறும் எல்லா சுக்கிர வாரங்களிலும் அபிஷேக அலங்காரம் ஸ்ரீ பாராசக்தி அம்பாளுக்குச் செய்து நைவேத்தியம் தீபாராதனை சுண்டல் விநியோகம் ஊஞ்சல் உற்சவம் நடத்தி வருகிறார்கள்.

15. தர்மகர்த்தாவாக இருந்த திரு. தீ. சொ. முருகப்ப செட்டியார் அவர்கள் முயற்சியினால் புதுக்கோட்டைச் சிங்க முத்துப்பிள்ளை இடம் ரூ.1500 தேவஸ்தானத்தில் நிதிபெற்று வருஷம் 1-க்கு ரூ.120 திட்டத்தில் மாதா மாதம் எல்லாச் சோமவாரங்களிலும் அபிஷேக அலங்கார தீபாராதனை உள்பட உற்சவம் நடத்திவருகிறார்கள்.

16. கார்த்திகைப் பெருவிழா, மார்கழி விழா ஆனித் திருவிழா, ஆடி விழா, நவராத்திரி விழாக்களில் காரைக்குடி திரு. சா. நா. வகையார் ஒவ்வொரு விழாவிற்கும் 10 பேர் பேதபாராயணம் வைத்து அதிக விமரிசையுடன் சாப்பாடு செய்துவைத்து தட்சணையும் கொடுத்து ஒவ்வொரு விழாவிற்கும் ரூ.250 செலவு செய்து நடத்தி வருகிறார்கள்.

17. கொத்தமங்கலம் திரு. ராம. அரு. வெ. பெத்தாச்சி செட்டியார் அவர்கள் கொடுத்த 7-வில்லையுள்ள வைர நெற்றிப் பட்டம் 1 இல் மொத்தம் வைரம் 296, சிகப்பு 110, பச்சை-7 தொங்கட்டம் 3-வரிசையுள்ள விபூதிப்பட்டையில் வயிரம் 36, தொங்கட்டம் 26-க்கு

வயிரம் 26. தங்கம் கூலி உள்பட மேற்படி வயிர நெற்றிப்பட்டம் 1-க்கு மதிப்பு ரூ.12000-0-0

18. மேற்படியார் அம்மனுக்குச் செய்த 7-வில்லையுள்ள வைர நெற்றிப்பட்டம் 1இல் மொத்தம் வைரம் 220-க்கு ரூ.7000. 6-பச்சைக்கு ரூ.300-ம் சிகப்பு1-க்கு ரூ.150-ம் தங்கம் கூலி ரூ.600. தொங்கட்டம் வயிரப் பொட்டு 1இல் வயிரம் 12. நடுநாயகப் பச்சை 1, ஆக மதிப்பு ரூ.8550-0-0

19. மேற்படியார் வழங்கிய வயிரப் புலாக்கு 1இல் வயிரம் 3-தொங்கட்டத்தில் சன்ன வயிரம் 3-சின்ன வயிரம் I ஆக 7 வயிரம் உள்ள புலாக்கு 1-க்கு வராகனிடை 0-13-6க்கு ரூ.1200-0-0

20. கானாடுகாத்தான். திரு. சா. அ. அண்ணாமலை செட்டியார் அவர்கள் மூலஸ்தானம் அம்பாளுக்குச் செய்து வைத்த தங்கக் கவசம் பொன்கிரீட்தில் பதித்திருக்கும் சீமைக்கமலம் 1. உள்பட வராகனிடை 215-4-0 கர்னப்பத்திரம் ஜதை 1-க்கு 35-0-0 மார்புக்கவசம் 1-க்கு வராகனிடை 299-0-0 அரைக் கவசம் 1-க்கு வராகனிடை 266-8-0 அஸ்தம் ஜதை 1-க்கு வராகனிடை 191-12-0 பாதம் ஜதை 1-க்கு வராகனிடை 147-0-0 ஆக உருப்படி 9-க்கு வராகனிடை 1154-8-0க்கு ரூ. 7648-10-0

21. மேற்படியூர் திரு. வெ. வீர. வெ. அரு. நாகப்பசெட்டியார் வகையார் உற்சவத் தனி அம்மனுக்குச் செய்த கல்லிழைத்த ரத்தினக் கிரீடம் 1இல் கெம்புக்கல் 2420. உலாந்தாக் கமலம் 116. பெரிய பச்சை 4. சின்னப் பச்சை 1. பலிசவயிரம் பொன் வராகனிடை 250. இடி தங்கம் வராகனிடை 150. அக மொத்தம் வராகனிடை 400-க்கு ரூ.30000-0-0

22. மேற்படியூர் திரு. திவான்பஹதூர். சா. ராம. மு. ராம. இராமசாமி செட்டியார் அவர்கள் செய்துவைத்த அம்மன் தேர், தகடு உள்பட ரூ.20000-0-0

23. ராவ்பகதூர். பெ. க. அ. சித. வீரப்ப செட்டியார் M.B.E. அவர்கள் தொகை கொடுத்தும் நகரத்தார்கள் உதவியாலும் செய்துவைத்த சுவாமி மரத்தேர், தகடு உள்பட மதிப்பு. ரூ.55000-0-0

24. அரிமளம். திரு. செ. சித. முத்து. செல்லப்ப செட்டியார் அவர்கள் சோமாஸ்கந்தருக்குச் ரசெய்தளித்த வயிரம்கெம்பு பச்சை வைத்து இழைத்த கிரீடம் 1-க்கு மதிப்பு. ரூ. 44000-0-0

25. கொத்தமங்கலம். திரு. சி. அ. சி ராம. இராமன்செட்டியார் அவர்கள் உற்சவ விநாயகருக்குச் செய்த சொர்ணக் கவசம் உருப்படி 11-க்குத் தங்கம் வராகனிடை 848-க்கு ரூ.7000-0-0

26. மேற்படியூர் சி.அ.சி. அரு. அவர்கள் மனைவி வள்ளியம்மை ஆச்சி அவர்கள் பரிவார தெட்சணாமூர்த்திக்குச் செய்த வெள்ளிக் கவசங்கள் உருப்படி 8-க்கு எடை 285-க்கு ரூ 285-0-0

27. ஸ்ரீ வேணுகோபால சுவாமி 1. மேற்படி அம்மன் 2. ஆஞ்சனேயர் 1. கருடன் 1. இவைகளுக்குச் செய்த கவசங்கள் உருப்படி 12-க்கு எடை 1680-க்கு வெள்ளி கூலி உள்பட ரூ. 1680-0-0

28. ஸ்ரீ கஜலட்சுமிக்குச் செய்த வெள்ளிக் கவசம் உருப்படி 10-க்கு எடை 705-க்குக் கூலி உள்பட ரூ. 705-0-0

29. ஸ்ரீ ஆறுமுக சுப்பிரமண்ணிய சுவாமி 1. மேற்படி அம்மன் 2. இவைகளுக்குச் செய்த வெள்ளிக் கவசம் உருப்படி 27-க்கு எடை 1842-க்குக் கூலி உள்பட ரூ.1842-0-0

30. ஸ்ரீ சண்டீசுவரருக்குச் செய்த வெள்ளிக் கவசம் உருப்படி 8-க்கு எடை 255-க்குக் கூலி உள்பட ரூ. 255-0-0

31. வைரவருக்குச் செய்த வெள்ளிக் கவசங்கள் உருப்படி 14-க்கு எடை 608-க்குக் கூலி உள்பட ரூ.608-0-0

32. சனீசுவரருக்குச் செய்த வெள்ளிக் கவசம் 1-க்கு எடை 135-க்குக் கூலி உள்பட ரூ.135-0-0

33. வள்ளியம்மை ஆச்சி அவர்களால் ஸ்ரீ வேணுகோபால சுவாமி சுப்பிரமணிய சுவாமி இரண்டிற்கும் செய்துவைக்கப்பெற்ற வெள்ளித்திருவாசி ரூ.2700-0-0

34. வேத சாத்திர பாடசாலை உரிமையாளர் காரைக்குடி. திரு.முத்து. அரு. சாமிநாதன் செட்டியார் வகையார் செய்து வைத்த வெள்ளிக் காமதேனு வாகனம் சகடை உள்பட ரூ. 30000-0-0

35. வெள்ளிக் கற்பக விருட்சம் வாகனம் சகடை உள்பட ரூ.30000-0-0

36. மேற்படிக்குக் கட்டிடம் ரூ.10000-0-0

37. பள்ளத்தூர். திரு. நா. பெ. பெத்தபெருமாள் செட்டியார் அவர்கள் அம்மனுக்குச் செய்த தங்கக் கிளி1-க்கு ரூ.150-0-0

38. தேவகோட்டை. திரு. எ. பெரி. கரு. சித. சிதம்பரம் செட்டியார் அவர்கள் குமாரர், கம்பத்திளையனார் என்கிற சுப்பிரமணிய சுவாமிக்குத் தங்கக் கவசம் பவுன் 230-க்கு வெள்ளித் திருவாசி வெள்ளிப்பீடம் தங்கவேல் ஆக உருப்படி 4-க்குக் கூலி உள்பட ரூ.5000-0-0

39. மேற்படியூர். திரு. நா. க. அ. நா. பழநியப்ப செட்டியார் வழங்கிய பொன் சலங்கைமாலையில் முகப்பு உள்படச் சலங்கை 44, மாங்காய் 2, பாதாம்காய் 2, மணி 2, அனாசிக்காய் 2, சுரைக்காய் 1, அரிநெல்லிக்காய்க் குண்டு 112. தங்கம் கூலிஉள்பட, பொன் சலங்கை மாலை 1-க்கு வராகனிடை 67-க்கு ரூ. 500-0-0

40. மேற்படியார் அளித்த தங்கச் சங்கிலியில் கோத்த வயிர டாலரில் வயிரம் 51. சிகப்பு 9. நடுநாயகம் நீலம் 1, தொங்கட்டம் 1-ல் நடுநாயகம் பச்சை 1, வயிரம் 16. ஆகக் கோவை 1-க்கு ரூ. 1000-0-0

41. மேற்படியார் தந்த பொன்சங்கிலியில் கோத்த வைர டாலர் 1.க்கு மதிப்பு ரூ. 1000-0-0

42. மேற்படியார் கொடுத்த வயிர நத்து 1-ல் வயிரம் 30 வைத்து இழைத்த உருப்படி 1-க்கு ரூ. 500-0-0

43. மேற்படியார் வழங்கிய இரட்டைப்பட்டைப் பொன் கெடியாரச் சங்கிலியில் கோத்த கெம்புப் பதக்கம் 1-ல் கெம்பு 80, பச்சை 6, புஷ்பராகம் 10. வைத்து இழைத்த கொடிப்பதக்கம் முத்துக் கட்டியது உருப்படி 1-க்குத் தங்கம் கூலி உள்பட ரூ.300-0-0

44. மேற்படியார் குமாரர் திரு. கண்ணப்ப செட்டியார் அவர்கள் அளித்த ஒற்றைப்பட்டைச் சங்கிலியில் கோத்த கெம்புக் கொடிப்பதக்கம் 1-ல் கெம்பு 79, பச்சை 5, புஷ்பராகம் 7, வைத்து இழைத்த பதக்கம் 1-க்குத் தங்கம் கூலி உள்பட ரூ. 350-0-0.

45. திரு. நா. க. அ. பழ. அவர்கள் மூலஸ்தானம் அம்மனுக்கு அளித்த உருப்படி ர11-க்கு விபரம்.

மார்புக்கவசம் 1-க்கு எடை	93.5
அரைக்கவசம் 1க்கு எடை	106
அஸ்தம்-2க்கு எடை	65.5
கர்னப்பத்திரம் 2-க்கு எடை	14
கிரீடம் 1-க்கு எடை	59.5

பாதம் 2-க்கு எடை	33	
வெள்ளிப்பீடம் 1-க்கு எடை	456	
பத்மம் 1-க்கு எடை	110	
ஆகமொத்தம் வெள்ளி எடை	937.5-க்கு	ரூ. 1000-0-0

46. திவான்பகதூர். திரு. தீ. நா. முத்தய்யா செட்டியார் அவர்கள் பிரதோஷ நாயகருக்கு அளித்த கவசம் வெள்ளிக்கிரீடம் 1, மார்பு 1, புயம் 2, அஸ்தம் 4, இரட்டைப் பாதம் 1, ஆக உருப்படி 10க்கு வெள்ளி எடை 129.5க்கு ரூ. 129-8-0

47. மேற்படியார் கொடுத்த மேற்படி அம்மன் கிரீடம் 1 மார்புக்கவசம் 1. உடைதாரம் 1, அஸ்தம் 2, புஜம் 1, கர்னபத்திரம் 2, இரட்டைப் பாதம் 1, ஆக உருப்படி 9-க்கு வெள்ளி எடை 81க்கு ரூ.81-0-0

48. மேற்படியார் தந்த மேற்படி சுவாமி அம்மனுக்கு முன்பக்கம் வெள்ளி போட்ட பிரபை 1-க்கு எடை 346 3/8 ரூ. 346-6-0

49. ராஜாமண்டபம் என்கிற கல்யாண மண்டபத்தில் பிரும உற்சவங்களில் நகைகளைப் பாதுகாப்பாய் வைத்துக் கொள்வதற்காக மேற்படியார் வாங்கிக் கொடுத்த 6-அடி இரும்புப் பெட்டி 1, பீரோ 1 இவற்றிற்கு விலை. ரூ.900-0-0

50. நச்சாந்துப்பட்டி திரு. வீ. மு. வீரப்ப செட்டியார் அவர்கள் அளித்த மூக்குத் திருகாணியில் வயிரம் 1 வைத்திழைத்தது மதிப்பு ரூ. 250-0-0

51. திரு. தீ. சொ. அவர்கள் செய்து அளித்த வெள்ளி இரதம் 1 தங்கத் திருவாசி உள்பட ரூ.125000-0-0

52. வெள்ளி இரதம் நிற்கும் கொட்டகை, கல கட்டிடம் ரூ. 10000-0-0

53. சுவாமியை வெள்ளி இரதத்தில் ஏற்றும் தேர் முட்டிக் கட்டிடம் 1-க்கு ரூ. 3000-0-0

தர்மகர்த்தா, ராவ்பகதூர்.
திரு. பெ. க. அ. சித. வீரப்ப செட்டியார், M.B.E. அவர்கள் சொந்தத்தில் செய்து சுவாமிக்கு அளித்த நகைகள், வெள்ளி வாகனங்கள் முதலிய விபரம்.

17. மூலஸ்தானம் அம்மனுக்குச் சாத்துபடிசெய்த வயிரத் திருமாங்கல்யம் 1, வயிரப் பக்கப்பூ 2, பொன்சங்கிலி உள்பட உருப்படி 1-ல் மொத்தம் வயிரம் 125-க்கு ரூ. 2550-0-0 450-0-0 கூலி உள்பட வயிரத் திருமாங்கல்யம் 1-க்கு ரூ. 3000-0-0

முலஸ்தானம் அம்மனுக்குச் சாத்துப்படிசசெய்த பொன் கர்ண பத்திரத்தில் வயிரத்தோடு பொன் சங்கிலி தனிப்பொன் வில்லை 2, உள்பட ஜதை 1-க்கு உருப்படி 2-ல் வயிரம் 18 க்கு ரூ.1600-ம் தங்கம் கூலி உள்பட ரூ. 400-ம் ஆக வயிரத்தோடு உள்ள கர்ணபத்திரம் ஜதை 1-க்கு ரூ. 2000-0-0

நாயகர் கல்லிழைத்த கர்ணபத்திரம் வலது பக்கம் 1-ல் கெம்பு 97, வயிரம் 12 , பச்சை 5, தங்கம் உள்பட ஆக மொத்தம் வராகன் எடை 45 5-8 இடது பக்கம் 1-ல் கெம்பு 70. பச்சை 5, வயிரம் 14, தங்கம் உள்பட வராகன் எடை 45.5 ஆக வராகன் எடை 91.1-8க்கு ரூ.1500-0-0

நாயகர் பக்கத்து அம்மனுக்குச் செய்த கல்லிழைத்த கர்ண பத்திரம் ஜதை 1-ல் கெம்பு 134, வயிரத் தரிப்பு 22, பச்சை 8, தங்கம் உள்பட ஜதை 1-க்கு வராகன் எடை 56-க்கு ரூ. 2000-0-0

சோமாஸ்கந்தருக்கு வழங்கிய அபயவயிர அஸ்தம் 1-க்கு வயிரம் 377, சின்னக் கெம்பு 121, பெரிய கெம்பு 1, சின்னப் பச்சை 21, உள்ளங்கை நடுச் சதுரப்பச்சை 1, தங்கம் உள்பட உருப்படி 1-க்கு வராகன் எடை 111க்கு ரூ 15000-0-0

மூலஸ்தானம் அம்மனுக்குக் கொடுத்த தங்கமுலாம் பத்மபீடம் உருப்படி 2-க்கு 500-0-0

தாம்பரத் தகட்டின் பேரில் தும்புரு நாரதர் உருப்படி 2-க்கு தங்கத்தகடு 7 போட்டுச் செய்ததற்குக் கூலி உள்பட ரூ.2300-0-0

மரத்தின் பேரில் தும்புரு நாரதர் உருப்படி 2-க்கு தங்கரேக்குப் போட்டதற்குக் கூலி உள்பட ரூ. 300-0-0

வெள்ளிப் பெரிய இந்திர விமானம் 1-க்குக் கூலி உள்பட ரூ. 35000-0-0

62.2

மேற்படிக்குக் கட்டிடம் ரூ.8000-0-0

வெள்ளிச் சின்ன இந்திர விமானம் 1க்குக் கூலி உள்பட ரூ.15000-0-0

வெள்ளி எடுப்பிடி உபசாரம் வெள்ளிக் காம்பு உள்பட வெள்ளிச் சுருட்டி 2 வெள்ளிக் காம்பு உள்பட வெள்ளிப் பாவட்டா 2. வெள்ளிக்காம்பு உள்பட வெள்ளி விசிறி 2 ஆக உருப்படி 6-க்குத் தங்கக் குமிழ் உள்பட ரூ.2565-0-0

வெள்ளிக் குடைகள் 2ம் அழித்து நவக்கிரகம் 8, மூர்த்திகளுக்குக் கவசமும் பழநி ஆண்டவருக்குக் கவசமும் 5, அடுக்குத் தீபாராதனைச் செட்டு 3-ம் மேற்படி தீபாராதனை உபசாரச் சாமான்கள் செட்டு 3-ம் கற்பூரக் கிளை 3, உள்படவும் கூலி உள்பட ரூ.2500-0-0

கோபுரத்திளையனார் என்ற சுப்பிரமணிய சுவாமிக்கு மேற்படி அம்பாள் வள்ளியம்மை தெய்வானைக்கும் அருணகிரிநாத சுவாமிக்கும் வெள்ளிக் கவசங்கள் கூலிஉள்பட ரூ. 3000-0-0

சோமாஸ்கந்தருக்குப் படிச் சட்டத்தின் பேரில் வெள்ளித் தகடுபோட்டது. ரூ.300-0-0

கோபுரத்திளையனார் தெட்சணாமூர்த்தி வேணுகோபாலசுவாமி சுப்பிரமணிய சுவாமி பள்ளியறை. வயிரவர் சண்டீசுவரர் மஹாலட்சுமி தெண்டாயுதபாணி இந்தச் சந்நிதிகளுக்குப் பித்தளைப் படிபோட்டதும் பீடங்கள் பித்தளைத் தகட்டினால் செய்ததும் தகடு கிரையம் கூலி உள்பட ரூ. 3000-0-0

துர்க்காம்பாள்க்கு வழங்கிய வெள்ளிக் கவசங்கல் ரூ.500-0-0

மேற்படி அம்மனுக்குப் பித்தளைத் திருவாசி ரூ.50-0-0

மூலஸ்தானங்களுக்கும் உற்சவர்களுக்கும் பட்டு சரிகை வகையறாக்கள் வாங்கிய வகையில் ரூ. 2000-0-0

ஆக மொத்தம் எண்ணிக்கை 20-க்கு ரூ.100015-0-0

பிறசேர்க்கை

1. திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயிலுக்கு அ.க.ராம.அரு. அருணாசலம் செட்டியார் அவர்கள் பிரதோஷ வெள்ளி சின்ன ரிஷபம் செய்து கொடுத்திருக்கிறார்கள்.

2. 16 கால் மண்டபத்தை க.வீ.சொ.வீ. அழகப்ப ஐயா அவர்கள் புதுப்பித்தார்கள்.

3. திருவண்ணாமலைக்கு வடக்கே 15 மைல் தொலைவில் செய்யாற்றங்கரையில் உள்ள பழைய கோயிலை ரூ. 20,000 செலவில் க.வீ.சொ.வீ. அழகப்பா ஐயா அவர்கள் புதுப்பித்துள்ளார்கள். காலசந்திக் கட்டளைக்காக அவர்கள் 3 ஏக்கர் நிலம் நன்கொடை அளித்துள்ளார்கள். கும்பாபிஷேகம் ஆங்கிரச ஆனி 26இல் நடத்தப்பெற்றது.

4. 1975 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் திருவண்ணாமலை கோயிலைப் புதுப்பிக்கும் வேலை தொடங்கப்பெற்றது. அண்ணாமலையார் உண்ணாமலை அம்மன் சந்நிதிகளில் அடங்கிய பகுதிகளையும், அவற்றையடுத்து மூன்றாம் பிரகாரத்தில் உள்ள திருக்கல்யாண மண்டபத்தையும் ஏனைய மண்டபங்களையும் பஞ்சபூத ஸ்தலங்களுக்குரிய கோயில்களையும் சொந்தமாக ஸ்தபதிகளை வைத்துச் சுதைவேலை செய்து பல லட்சம் ரூபாய் செலவில் விமானங்கள் முதலிய யாவற்றையும் நகரத்தார்கள் மிகச்சிறப்பாகச் செய்து கொடுத்தார்கள். கும்பாபிஷேகம், மகாகும்பாபிஷேகம் ஆகியவற்றையும் நகரத்தார்களே நடத்திவைத்தார்கள். இந்தக் கொடைகளிலும் பணிகளிலும், கோட்டையூர் நகரத்தார்களின் பங்கு சிறப்பானது.

5. க.வீ. அள. குடுபத்தார், சிவகங்கைத் தீர்த்தத்தின் கரையிலுள்ள சர்வசித்தி விநாயகர் கோயிலை ஏறத்தாழ ரூபாய் நாற்பதாயிரம் செலவில் புதுப்பித்தார்கள்.

6. ராம. பெ. குடும்பத்தார் ராஜகோபுரத்தின் முன்பாக உள்ள 16 கால் மண்டபத்தை ரூ. 44,000 செலவில் கவர்ச்சியாகப் புதுப்பித்துக் கொடுத்தார்கள்.

7. ராம. பெ. நா. அருணாசலம் செட்டியார் அவர்கள் 1979இல் உண்ணாமலை அம்மன் கோயிலில் வெள்ளிச் சரவிளக்கு செய்து தொங்கவிட்டிருக்கிறார்கள் (மதிப்பு ரூ. 5,000)

உ

சிவமயம்

அண்ணாமலையார் துணை

மெ. க. குடும்பத்தார் அவர்களுக்குரிய கோட்டையூரில் மெ. க. மடம் என்ற பெயரில், இந்த அன்னச் சத்திரம் தோன்றுவதற்கு முன்னமேயே ஒரு மடம் நிறுவி நடத்தி வருகிறார்கள்.

அம்மடத்தின் சார்பில் நந்தவனம் ஒன்று உண்டாக்கப் பெற்றுக் கோவில்களுக்கு நாள் தோறும் பூமாலை கட்டிக் கொடுத்து, சிறப்பாக அப்பணி நடந்து வருகிறது.

மடத்தையொட்டி ஒரு பிள்ளையார் கோவிலும் திருக்குளமும் அமைக்கப் பெற்றிருக்கின்றன. மடத்திற்குப் புதிய கட்டிடம் கட்டப்பெற்று, பல திருமணங்களுக்குப் பயன்பெற்று வருகிறது.

உ

சிவமயம்

அண்ணாமலையார் துணை

திருவண்ணாமலை

ஸ்ரீ அபீதகுசாம்பாஸமேத அருணாசலேசுவரசுவாமி

ஆலய ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன

மஹா கும்பாபிஷேக பத்திரிகை

திரிஞானசம்பந்தமூர்த்திநாயனார் தேவாரம்

பண்-நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

உண்ணாமுலை யுமையாளொடு முடனாகிய வொருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன வருவித்திரண் மழலைம்முழ வதிரு
மண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ண மறுமே. (க)

பண்–தக்கேசி

பூவார் மலர்கொண் டடியார் தொழுவார் புகழ்வார் வானோர்கண்
மூவார் புரங்க ளெரித்த வன்று மூவர்க் கருள்செய்தார்
தூமா மழைநின் றதிர வெருவித் தொறுவின் னிரையோடு
மாமாம் பிணைவந் தணையுஞ் சார லண்ணா மலையாரே. (உ)

திருநாவுக்கரசு நாயனார் தேவாரம்

திருநேரிசை

ஓதிமா மலர்க டுவி யுமையவள் பங்கா மிக்க
சோதியே துளங்கு மெண்டோட் சுடர்மழுப் படையி னானே
யாதியே யமரர் கோவே யணியணா மலையு ளானே
நீதியா னின்னை யல்ல னினையுமா நினைவி லேனே. (௩)

திருக்குறுந்தொகை

வட்ட னைம்மதி சூடியை வானவர்
சிட்ட னைத்திரு வண்ணா மலையனை
யிட்ட னையிதழ்ந் தார்புர மூன்றையு
மட்ட னையடி யேன்மறந் துய்வனோ. (௪)

சுந்தரமூர்த்திநாயனார் தேவாரம்

பண்-பழம்பஞ்சுரம்

தேனைக் காவல் கொண்டு விண்ட கொன்றைச் செழுந்தாராய்
வானைக் காவல் கொண்டு நின்றா ரறியா நெறியானே
யானைக் காலி லரனே பரனே யண்ணா மலையானே
யூனைக் காவல் கைவிட் டுன்னை யுகப்பா ருணர்வாரே. (௫)

திருவாசாகம்

திருவம்மானை

விண்ணாளுந் தேவர்க்கு மேலாய வேதியனை
மண்ணாளு மன்னவர்க்கு மாண்பாகி நின்றானைத்
தண்ணர் தமிழளிக்குத் தண்பாண்டி நாட்டானைப்
பெண்ணாளும் பாகனைப் பேணு பெருந்துறையிற்
கண்ணார் கழல்காட்டி நாயேனை யாட்கொண்ட
வண்ணா மலையானைப் பாடுதுங்கா ணம்மானாய். (௬)

ஸ்தலமகிமை

இரவிகள் சந்திரர் வயிரவர் விஞ்சைய ரிமையவ ரெண்டிசையோ
ருரக ரருந்தவர் முனிவரர் பங்கய ருவண நெடுங்கொடியோர்
பரவி நெருங்கலி னுலக நிறைந்தவர் பணியு மிடங்கிடையா
தரகர வென்பது கடலின் முழங்கிய தருணை வளம்பதியே. (எ)

அண்ணாமலையார் துதி

ஒருமானைக் கரத்தினில்வைத் தொருமானைச்
சிரத்தினில்வைத் துலக மேழுந்
தருமானை யிடத்தினில்வைத் தருள்வானைப்
பவளநெடுஞ் சயிலம் போல
வருமானை முகத்தானை யளித்தானைப்
பொருமானை மகிழ வேறும்
பெருமானை யருணகிரிப் பெம்மானை
யடிபணிந்து பிறவி தீர்ப்பாம். (அ)

உண்ணாமுலையம்மையார் துதி

காரொழுகுங் குழலாளைக் கருணைவழந்
தொழுகுமிரு கடைக்கண் ணாளை
மூரலிள நிலவொழுகப் புழுகொழுக
வழகொழுகு முகத்தி னாளை
வாரொழுகுந் தனத்தாளை வடிவொழுகித்
தெரியாத மருங்கு லாளைச்
சீரொழுகும் பதத்தாளை யருணையுண்ணா
முலையாளைச் சிந்தை சேர்ப்பாம். (கூ)

கும்பாபிஷேக பலன்

மான் ஆகம் சுலோக மொழிபெயர்ப்பு

அகவற்பா

உமையொரு பாகத் தமல னாகிய
சிவபிரா னுக்குச் சிறப்புறச் செய்யுங்
கும்பாபி டேகபலன் கூறுதுங் கேண்மோ
ஆக மங்க அருளிய வாறே
கும்பாபி டேகங் குயிற்றிய மனிதர்
பாப மனைத்தையும் பற்றற விடுவர்
வீடு விரும்பினோர் வீடுபெறு கின்றார்
நாடு விரும்பினோர் புதல்வரைப் பெறுவர்
சிதைவின்மை விரும்பினோர் சிதைவின்மை பெறுவர்
பொருளை விரும்பினோர் பொருள்பெறு கின்றார்
அருளை விரும்பினோர் அருள்பெறு கின்றார்
ஞானம் விரும்பினோர் ஞானம் பெறுவர்
மோனம் விரும்பினோர் மோனம் பெறுவர்
அரோகம் விரும்புனோ ரரோகம் பெறுவர்
ஆயுளை விரும்பினோ ராயுளைப் பெறுவர்
இம்மையின் மகப்பே றிருஞ்செல்வ முடையராய்த்
தேகாந் தத்திற் பெரிதா முயற்சியாற்
றேவ தேவன் சிவபெரு மானுக்
கட்டபந் தனஞ்செய் தரிய பெரிய
கும்பாபி டேகங் குயிற்றுக வென்பவே. (க0)

கிருத்திகாதீப மகிமை

கார்த்திகைக்குக் கார்த்திகைநா ளொருசோதி
மலைநுனியிற் காட்டா நிற்போம்
வாய்த்தவந்தச் சுடர்காணிற் பசிபிணியில்
லாதுலகின் மன்னி வாழ்வார்
பார்த்திவர்க்கு மருந்தவர்க்கு மிடையூறு
தவிருமிது பணிந்தோர் கண்டோர்
கோத்திரத்தி லிருபத்தோர் தலைமுறைக்கு
முத்திவரங் கொடுப்போ மென்றார்.. (கக)

அன்னதான மகிமை

உத்தம தலத்திற் கோடி யருந்தவர்க் குதவு மன்ன
நித்தமாங் காசி மீதோ ரவிழ்ப்பலன் றனக்கு நேரா
தத்தலத் தனந்த கோடி யரிந்தவர்க் குதவு மன்னஞ்
சத்திய வருணை நாட்டி லவிழ்ப்பலன் றனக்கொவ் வாதே.

ஸ்ரீமதகண்டாகார நித்த வியாபக ஸச்சிதானந்த ஸ்வரூப சுத்த ஷாட்குண்ய பரிபூரண பரமபதியாகிய சிவ பெருமான் நமது தர்ம பத்தினியாரும், லோகமாதாவுமாகிய பராசக்தியாரோடியைந்து ஸ்ரீ சாம்பமூர்த்தியாய், ஆன்ம கோடிகள் அதிருசியராகிய தம்மைத் திருசியராகக் கண்டு எளிதிலுபாசித்துப் போகமோக்ஷ வின்பங்களைப் பெற்றுய்ய வேண்டிப் பூலோகத்தில் எண்ணில்லாத புண்ணிய ஸ்தலங்களை வைத்திப் பரிவார தெவதைகள் சூழ ஸ்கந்த கணேசர்கள் ஸஹிதம் அப்பராசக்தியாரோடு கோவில் கொண்டு கொலுவீற்றிருந்தருளுவர்.

அவ் வெண்ணில்லாத புண்ணிய ஸ்தலங்களிள்ளே சிறப்புவகையால் நோக்குமிடத்து உத்தம ஸ்தலங்கள் அறுபத்தெட்டு ; அவற்றுள்ளும் சிறப்புவகையால் நோக்குமிடத்து உத்தமோத்தம ஸ்தலங்கள் நான்கு. அவை திருவாரூர், சிதம்பரம், காசி, திருவண்ணாமலை என்பனவாம். இவற்றுள்ளும் சிறப்பு வகையால் நோக்குமிடத்து முந்திய மூன்றும் முயன்று முத்திபெற வேண்டிய ஸ்தலங்களாய் நிற்ப, எங்கிருந்தும் எப்படியிருந்தும் எவர்களும் எம்முயற்சியும் செய்யவேண்டாது தன்னை நினைத்த மாத்திரத்திற்றானே அந்நினைத்தவர்களுக்கு முத்தியளிப்பது திருவண்ணாமலையாதலால் எத்தலங்களுள்ளும் அத்தியந்த உத்தமோத்தம சிவஸ்தலம் திருவண்ணாமையென்பது ஸர்வலோக ஸர்வ சாஸ்திரப் பிரசித்தமாம்.

சிவபெருமான், பிரம்ம விஷ்ணுக்கள் அகங்காரத்தால் அடிமுடி தேடியுங் காணாது திகைத்து நிற்ப, தாம் அகண்ட விலாச அதீத ஜோதிப் பிழம்பாய் நின்று தமது ஸர்வோத்கர்ஷத்தை அநுபவத்தில் விளக்கி நின்ற துர்லப அவசரம் இத்திருவண்ணாமலையாம்.

சிவபெருமான், தம்மை மறந்து அகங்கரித்த பிரம்ம விஷ்ணுக்களது அபராதத்தை அவர்களது முக்கரண வழி பாட்டுக்குத் திருவுள மிரங்கி க்ஷமித்து அவர்களுக்குத்தமது யதார்த்த ஸ்வரூப சுத்த ஜோதி தரிசனங் காட்டித் தமது ஸர்வாநுக்கிரககரத்வத்தை அநுபவத்தில் விளக்கி நின்ற சுலப அவசரம் இத்திருவண்ணாமலையாம்

சிவபெருமான் மற்றைத் தலங்களிற் போலாது எவர் கண்ணுக்கும் எளிதிற் புலப்படும்படி தமது வடிவம் மலையே யாகக்கொண்டு அதிப்பிரசிச்ச ஸாந்நித்தியம் பெற்று விளங்கும் கிருபாவசரம் இத்திருவண்ணாமலையாம்

சிவபெருமான், ஜாதி, பிறப்பு, சமயம், ஆசாரம், ஞானம் என்னும் இவற்றால் உயர்ந்தோரும் தாழ்ந்தோருமாகிய ஜீவர்களெல்லாம் தம்மைத் தடையின்றித் தூரத்திலும் சமீபத்திலும் ஏகாகாரமாகத் தரிசிக்கும்படி தமது ஸ்தானம் வெளியாகக்கொண்டு விளங்கும் ஸர்வ ஸமரசாவசரம் இத்திருவண்ணாமலையாம்.

இங்கே பர்வதமே லிங்காகாரம். சிவலிங்கமாகிய இப்பர்வதமே கிருதயுகத்தில் அக்கினி மலையாயும், திரேதாயுகத்தில் மாணிக்க மலையாயும், துவாபர யுகத்தில் பொன்மலையாயும், கலியுகத்திற் கன்மலையாயும் திருவுருக்காட்டி நிற்கும்.

இதற்குத் தேஜோ நகரம், கௌரி நகரம், சிவலோகம், வாயு நகரம், முத்தி நகரம், ஞான நகரம், ஸ்தலேஸ்வரம், சுத்த நகரம், தக்ஷிண கைலாசம், சோணாசலம் முதலியவாகப் பல நாமங்களுண்டு. ஸாக்ஷாத் கைலாசம் சிவபெருமானுக்கு ஸ்தான மாத்திரமாய் ஒரு பிரகாரமாய் விஸங்கும் ; சிவபெருமான் அதற்கு ஸ்தானியாகிய அதிபதியாவர். இத்திருவண்ணாமலையோ ஸ்தானமாகிய மலையுந் தானாய் ஸ்தானியாய் அதிபதியாகிய சிவமுந்தானாய் இரண்டு பிரகாரமாயும் விளங்கும். இக்காரணத்தால் இதனையும் கைலாசத்தையும் சீர்தூக்கி நோக்கின், அக்கைலாசமும் கொண்டாடும் இத்திருவண்ணாமலையினது அதுலமகிமை வெளிப்படையாகத் தோன்றும். இத்திருவண்ணாமலை ஊழியினும் அழியாது. பாதாள மேழினுங்கீழ் சொற்கழிவு பாதமலராய்ப் போதார் புனைமுடியும் எல்லாப் பொருண் முடிவேயாய் நின்று விளங்கும் சுத்த சிவமேயாம். இங்கே மூன்று யோசனை தூரம் பார்த்தவிடமெல்லாம் சிவலிங்கங்களாய் உண்மையன்பர்க்கு நக்ஷத்திரங்கள் போல விளங்கித் தோன்றும்.

இத்திருவண்ணாமலையைப் பிராகாரத்தினின்று நோக்குவார்க்கி அது ஒவ்வொரு பாகத்திலே பஞ்ச மூர்த்தமாகவும், விநாயகர், ஸுப்பிரமணியர், அம்பிகை, அண்ணாமலையாரென்னும் நான்கு மூர்த்தமாகவும், பார்வதி, பரமேசுவரர், ஸ்கந்தர் என்னும் திரிமூர்த்தமாகவும், சுவாமி அம்பாள் என்னும் இரண்டு மூர்த்தமாகவும், ஏக மூர்த்தமாகவும், இன்னும் பற்பல அற்புதமாகவுந் தோன்றும்.

இங்கே அம்பிகை, கணேசர், ஸ்கந்தர், வயிரவர், பிரம்மா, விஷ்ணு, இலக்குமி, ஸரஸ்வதி, ஸூரியன், சந்திரன். ஸப்த கன்னிகைகள், அஷ்ட வசுக்கள் முதலியோர் செய்தனவும், முழுகியனவுமாய், அவரவர் பேரால் வழங்கப் பெறுவனவாய் முந்நூற்றறுபது புண்ணிய தீர்த்தங்கள் உள்ளனவாம் : அவற்றுள் திக்குப் பாலகர் எழுவர்பேரால் அவரவர் திக்கில் ஏழு தீர்த்தங்களும், ஈசான திக்கில் அசுவினி தேவர்களால் அசுவினி தீர்தமும், இன்னும் கட்க தீர்த்தம், அகஸ்திய தீர்த்தம், வசிட்ட தீர்த்தம், திரு நதி, சோண நதி, புண்ணிய நதி, சேயாறு, சக்கர தீர்த்தம் முதலியனயும், உருத்திரகணிகையர் எழுவர் செய்த பல தடாகங்களும், திருக்கோயிலினுள்ளே பிரம்ம தீர்த்தம், சிவகங்கை என்னும் முக்கிய தீர்த்தங்களும் அடங்குவனவாம். இங்கே உண்மை நோக்குடைய ஞானிகளுக்கு நீர் நிலைகளெல்லாம் சிவதீர்த்தங்களாம்.

கைலையில் சுவாமியைத் திருக்கண் புதைத்த பார்வதி தேவியார் ஸ்ரீ காஞ்சிபுரத்தில் வந்து சிவபூஜை செய்து, சிவபெருமானது இடப்பாகம் பெற்றது இத்திருவண்ணாமலையிலாம். இத்திருவண்ணாமலையை நினைத்தும், தரிசித்தும், வலம் வந்தும், பூஜித்தும், அங்கு வரித்தும், ஸ்நானஞ் செய்தும், தவமிருந்தும், பணிசெய்தும் பேறு பெற்றோர்கள்-பார்வதி, கணேசர், ஸ்கந்தர், விஷ்ணு, பிரம்மா, இலக்குமி, ஸரஸ்வதி, இந்திரன், திக்குப் பாலகர், வசுக்கள், இருடிகள், முனிவர்கள், ஸூரியன், சந்திரன், வச்சிராங்கத பாண்டியன், பிரதத்தன், வல்லாளன், குதிரை, நாவி, விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, புல் பூண்டு முதலிய பலராவர். தேவர்களும் பிறப்பதுண்டெனில், அப்பிறவி புல்லாயினும் இத்திருவண்ணாமலைப் பூமியிற் பிறக்க இச்சிப் பார்களெனின் இதன் பெருமை சொல்லவற்றோ!இத்திருவண்ணாமலைக் காற்று வீசும் எத்தனையோ காத தூரம் வரையில் அக்காற்றுப் பரிசிக்கப் பெற்றவர்களுக்குச் சிவஞானம் எளிதிற் கைகூடுமென்று பெரியோர்கள் சொல்வார்கள் ; சாஸ்திரங்களும் முறையிடுகின்றன.

இத்திருவண்ணாமலையை வலம் வருவோர் ஸகல பாவங்களினின்றும் நீங்கி மனோரத ஸித்திகளெல்லாம் பெற்று முடிவில் முத்தி யின்பமும் பெறுவார்கள். சரியாவான்கள் ஸகள ஜோதிலிங்கமாகக் கண்டும், கிரியாவான்கள் ஸகள நிஷ்கள ஜோதிலிங்கமாகக் கண்டும், யோகிகள் நிஷ்கள ஜோதிலிங்கமாகக் கண்டு யோக ஸமாதியிற் றூங்காமற் றூங்கிக் கொண்டும், ஞானிகள் அகண்ட விலாஸ சுத்த சத்திய ஞானானந்த ஜோதிலிங்கமாகக் கண்டு ஞான ஸமாதியிற் றூங்காமற் றூங்கிக்கொண்டும் திருவண்ணாமலை என்னும் இந்த ஞான கிரியைப் பிரதக்ஷிணஞ்செய்வார்கள், ஏனைய லோகர்களும் தத்தமக் குரியவாறு கண்டு பிரதக்ஷிணஞ் செய்வார்கள். இங்கே திருமலையை அறியாதே வலம் வந்தும், அதன் விசேடத்தால் நாவியுங் குதிரையும் காந்தி சாலி கலாதரன் என்னும் வித்தியாதரராயின. அறிந்து வலம் வந்து ஒப்பிலா நாயகியாராகிய அம்மையாரும் இடப்பாகம் பெற்றனர்.

இங்கே வருஷந்தோறும் கார்த்திகை மாதம் கிருத்திகை நக்ஷத்திரத்தில் அண்ணாமலையார் மலைமேல் விளக்காய் ஜோதிதரிசனங் காட்டியருளும் அகண்ட தீப மஹோத்ஸவம் நிகழும், இவ் வகண்ட தீப மஹோத்ஸவ தரிசனத்தால் வருஷ முழுவதும் ஜோதிதரிசனஞ் செய்த பலன் கிடைக்குமென்று பிரம்ம விஷ்ணுக்களுக்கு ஆதியில் அண்ணாமலையார் ஆஞ்ஞை செய்தருளினர்.

தீப தரிசனஞ் செய்தவர் அஞ்ஞான விருள் விலகி ஞான வொளி பெற்று இஷ்ட ஸித்திகளெல்லாம் பெறுவார். ஆகாச வாசிகளாகிய ஸுரர்களும் நரர்களாய் வந்து பக்தர்களோடு நெருங்கி நின்று தீபதரிசனஞ் செய்வார்கள். வேதங்கள் துதித்த அதூம மகா பரஞ்சோதியே நமது திருவண்ணாமலை அகண்ட தீபமாம்.

இத்திருவண்ணாமலாயின் மகிமை வாக்கு மனங்களைக் கடந்து அனந்தானந்தமாம். ஸகல வேத வேதாந்த ஸித்தாந்தப் பிரதிபாத்திய அதூமக சுத்த கைவல்லிய பரிபூரண ஞானானந்த ஜோதி பர்வதம் நமது திருவண்ணாமலையெனின், இதன் மகிமை சொல்லவல்லார் அறியவல்லார் யார் தாம் இவ்வுலகத்து ?

இத்துணை மகிமையை உட்கொண்டன்றே நமது பரமாசாரிய குலதெய்வமாகிய திருஞானசம்பந்த வள்ளலார், தமது அருந்தமிழ் வேதத்திற் பொருந்தும் மருந்தனைய ஒவ்வொரு திவ்விய மந்திரத்தாலும் அம்மந்திரத் துட்பொருளாகக் கொண்டு நமது திருவண்ணாமலை யென்னும் ஞானபர்வத ஜோதிலிங்கத்தைத் துதி ரூபத்தில் வைத்து உபதேசித்தருளியதென்க.

இத்தகைய திருண்ணாமலை ஆலயத்தில் அஷ்ட பந்தன மஹா கும்பாபிஷேகம் நடந்து நெடுநாளாயின ;ஆதலால் இப்போது ஆலய ஜீர்ணோத்தாரணஞ் செய்து ஸ்ரீ அண்ணாமலையார் உண்ணாமுலையம்மையார் இருவருக்கும், ஸ்கந்த கணேசர்களுக்கும், பரிவார தேவதைகளுக்கும் அஷ்டபந்தனஞ் செய்து தாரண வருடம் வைகாசி மாதம் 22உ பாநு வாரம் பூர்வபக்ஷம் திரயோதசி திதி சிவாதி நக்ஷத்திரம் உதயாதி நாழிகை 12:30-க்கு மேல் 16:15 -நாழிகை யளவில் ஸிம்ஹலக்கினத்தில் மஹாசாந்திரூப மஹா கும்பாபிஷேகமும், அன்றிரவு பஞ்சமூர்த்திகளும் திருவீதியில் திருவுலாக் கொண்டருளும் மஹா மங்கள மஹா வைபவ மஹா ரிஷபப் பவனி மஹோத்ஸவமும் நிகழுமாதலால், வைதிக சைவ வைஷ்ணவ ஆஸ்திகர்களாகிய ஸகல வர்ணாச்ரம சிவநேசச் செல்வர்க ளெல்லோரும் வந்து தரிசித்து ஸ்ரீ அபீதகுசாம்பா ஸமேத அருணாசலேசுவரரது அற்புத திவ்வியப் பிரஸாதம் எய்தி இகபர மோக்ஷ லாபம் பெறறு இன்புற்று இனிதுவாழும்படி வேண்டுக் கொள்கின்றோம்.

கும்பாபிஷேக நாள்

வெண்பா

தாரணவை காசிமதி சாருமிரு பத்திரண்டில்
வாரங் கதிரில் வளர்பிறையிற்- சேரத்
திரயோ தசிசோதி சிம்ம மருணைப்
பரமன்கும் பாபிடே கம்.

கலித்துறை

வளைக்கும் புகழுடை யண்ணா மலையப்பர் வாமமுற
வளக்கப் படாவரு ளுண்ணா முலையுமை யம்மைபங்க்ர்
துளக்கறு மாலய கும்பாபி டேகஞ்செய் துங்கரறம்
வளர்க்குந்தென் பாண்டிநன் னாட்டு நகரத்து வைசியரே.

கும்பாபிஷேகம் நடைபெறு முறை

தாரண வருஷம் வைகாசி மாதம் 13-ஆம் தேதி சுக்கிர வாரம் பஞ்சமி திதி புநர்வசு நக்ஷத்திரம் ஸித்தயோகங் கூடிய சுபதினத்தில் உதயாதி 16-நாழிகைக்குமேல் ஸிம்ஹ லக்கினத்தில் தனபூஜை, அநுஜ்ஞை, 26:15-நாழிகைக்குமேல் விக்கிநேசுவர பூஜை.

14உ ஸ்திரவாரம்-பிரவேச பலி, ரக்ஷோக்ந ஹோமம்

15உ பாநுவாரம்- வாஸ்து சாந்தி

16உ ஸோமவாரம்- ம்ருத் ஸங்கிரஹணம்

17உ பௌமவாரம் -அங்குரார்ப்பணம்

18உ ஸௌம்யவாரம் -ஆசார்ய ரக்ஷாபந்தநம், உதயாதி 38:30-நாழிகைக்கு மேல் மகர லக்கினத்தில் கடஸ்தாபநம், யாகபூஜை

19உ குருவாரம்- காலை மாலை யாகபூஜை

20உ சுக்கிரவாரம்- காலை மாலை யாகபூஜை

21உ ஸ்திரவாரம் -காலை மாலை யாகபூஜை

22உ பாநுவாரம் திரயோதசி திதி சுவாதி நக்ஷத்திரம்

ஸித்தயோகம் கூடிய சுபதினத்தில் உதயாதி 12:30-நாழிகைக்குமேல் 16:15- நாழிகை யளவில் ஸிம்ஹலக்கினத்தில் மஹா கும்பாபிஷேகம், மாலை மஹாபிஷேகம், இரவு பஞ்சமூர்த்திகள் உத்ஸவம்.

இங்ஙனம்

நாட்டுக்கோட்டை நகரத்தார்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்







அருள்தரும் அன்னை உண்ணாமுலை உடனாகிய அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயில்

ஜீரணோத்தாரண அஷ்டபந்தன ஸ்வர்ணபந்தன மஹாகும்பாபுஷேகப் பத்திரிகை

திருஞானசம்பந்தர் தேவாரம்.

உண்ணாமுலை உமையாளொடும்
உடனாகிய ஒருவன்
பெண்ணாகிய பெருமான்மலை
திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள்
மழலைம்முழவு அதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை
வழுவா வண்ண அறுமே

அண்ணாமலையார் துதி

ஒருமானைக் கரத்தினில் வைத்து ஒருமானைச்
சிரத்தினில் வைத்து உலகம் ஏழும்
தருமானைஇடத்தினில் வைத்து அருள்வானை.
பவளநெடும் சயிலம் போல
வரும் ஆனை முகத்தனை அளித்தானை,
பொரும் ஆனை மகிழ ஏறும்
பெருமானை, அருணகிரிப் பெம்மானை,
அடிபணிந்து பிரவி தீர்ப்பாம்.

உண்ணாமுலையம்மை துதி.

காக்ஒழுகும் குழலாளை, கருணை வழிந்து
ஒழுகும் இரு கடைக்கண்ணாளை
மூரல்இள நிலவு ஒழுகப் புழுகு ஒழுக
அழகு ஒழுகும் முகத்துனாளை,
வார் ஒழுகும் தனத்தாளை, வடிவு ஒனுகித்
தெரியாத மருங்கு லாளை
சீர் ஒழுகும் பதத்தாளை, அருணை உண்ணா
முலையாளைச் சிந்தை சேர்ப்பாம்.

ஸ்தலமஹிமை.

இரவிகள் சந்திரர் வயிரவர்
விஞ்சையர் இமையவர் எண்திசையோர்
உரகர் அருந்தவர் முனிவரர்
பங்கயர் உவண நெடுங்கொடியோர்
பரவி நெருங்கலில் உலகம்
நிறாந்தவர் பணியும் இடங்கிடையாது
'அரகர' என்பது கடலின்
முழங்கியது அருணை வளம்பதியே,

திருக்கார்த்திகை தீப மஹிமை

கார்த்திகைக்குக் கார்த்திகை நாள் ஒருசோதி
மலைநுனியில் காட்டா நிற்போம்
வாய்த்த அந்தச் சுடர் காணில் பசி பிணி
இல்லாது உலகில் மன்னி வாழ்வார்
பார்த்திவர்க்கும் அருந்தவர்க்கும், இடையூறு
தவிரும், இது பணிந்தோர், கண்டோர்
கோத்திரத்தில் இருபத்து ஓர் தலைமுறைக்கு
முத்திவரம் கொடுப்போம் என்றார்.

கும்பாபிஷேக பலன்.

(அம்சுமான் ஆகம சுலோக மொழி பெயர்ப்பு)

உமையொரு பாகத்து அமலனாகிய
சிவபிரானுக்குச் சிறப்புச் செய்யும்
கும்பாபிடேக பலன் கூறுதும் கேண்மோ
ஆகமங்கள் அருளியவாறே.
கும்பாபிடேகம் குயிற்றிய மனிதர்
பாபம் அனைத்தையும் பற்றற விடுவர்
வீடு விரும்பினோர் வீடு பெறுகின்றார்
நாடு விரும்பினோர் நாடு பெறுகின்றார்
புதல்வரை விரும்பினோர் புதல்வரைப் பெறுவர்
சிதை வின்மை விரும்பினோர் சிதைவின்மை பெறுவர்
பொருளை விரும்பினோர் பொருள் பெறுகின்றார்
அருளை விரும்பினோர் அருள் பெறுகின்றார்
ஞானம் விரும்பினோர் ஞானம் பெறுவர்
மோனம் விரும்பினோர் மோனம் பெறுவர்
அரோகம் விரும்பினோர் அரோகம் பெறுவர்
ஆயுளை விரும்பினோர் ஆயுளைப் பெறுவர்
இம்மையின் மகப்பே றிஞ்செல்வ முடையராய்த்
தேகாந்தத்தில் சிவசாயுச்சியம்
பெறுவராதலிற் பெரிதா முயற்சியால்
தேவ தேவன் சிவபெருமானுக்கு
அட்டபந்தனம் செய்து அரிய பெரிய
கும்பாபிடேகங் குயிற்றுக வென்பவே.

"அங்கு இங்கு எனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த மூர்த்தி"யாக விளங்கும் ஏக பரம் பொருள், பாசத்தால் கட்டுண்டு பிறவிப் பெருங் கடலில்கிடந்து உழலும் ஆன்ம கோடிகள் உய்யும் பொருட்டு தம் இயல்பான கருணையினால் திருவுருவத் திருமேனி தாங்கி அருள் விளக்கம் செய்யும் ஆலயங்கள் பல. அவைகளில் "தென்னாடுடைய சிவன்" என்று சிறப்பாகப் போற்றப் பெறும் இறைவன் அருவுருவத் திருமேனி தாங்கி அருள் சுரக்கும் செந்தமிழ்நாட்டுத் திருத்தலங்கள் சிறப்புப் பெறுவன. அவைகளுள்ளும் சிவம் பெருக்கும் சீலர்களான சைவ சமய ஆசார்யர்களின் திருப்பாடல்கள் பெற்றிருப்பவை மிகச் சிறப்பு உடையன. எண்ணில்லைத புண்ணியத் தலங்கள் பலவற்றுள்ளும் உத்தம மானவை அறுபத்து எட்டு என வகுக்கப்பெற்றுள்ளன. அவற்றுள்ளும் உத்தமோத்தமம் எனப் போற்றத்தக்கவை, திருவாரூர், சிதம்பரம், காசி, திருவண்ணாமலை என்னும் நான்கு முத்தித் தலங்களாகும். முறையே முதன் மூன்று தலங்களும் பிறத்தலானும், தரிசித்தலானும், மரித்தலானும் முயன்று முத்தி பெறுவதாயிருப்ப, எங்கிருந்தும், எப்படியிருந்தும், முயற்சி எதுவும் வேண்டாது நினைத்த மாத்திரத்தில் நினைப்பவருக்கு முத்தி அளிக்கும் பெரும் சிறப்புடைய தலம் திருவண்ணாமலை

"காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய்
நீள்நாகம் அணிந்தார்க்கு நிகழ் குறியாம் சிவலிங்கம்"
என்று போற்றுவார் சேக்கிழார் பெருமான். இச் சிவலிங்கத்
திருக்கோலம் (லிங்கோத்பவர்) காட்டிய திருத்தலம் திருவண்ணாமலை

"அலரவனும் மாலவனும் அறியாமே அழலுருவாய்
நிலமுதற்கீழ் அண்டம்உற நின்றதுதான் என்னேடி?
நிலமுதற்கீழ் அண்டம்உற நின்றிலனேல் இருவரும்தம்
சலமுகத்தால் ஆங்காரம் தவிரார்காண் சாழலோ!" _என்பார் மணிவாசகப்பெருமான்.

அகம் உருகி அடியிணைகள் தொழுது ஏத்து அவனைக் காண்பதலால் செல்வச் செழிப்பாலும் கல்வித் திறத்தாலும் இறைவனைக் காண்பது இயலாதென்பதே இதன் உண்மைத் தத்துவம். தேவியின் திருவிளையாடல் காரணமாகத் தேவிக்கு நேர்ந்த சாபம் நீங்க தேவி, திருவண்ணாமலை வந்து அருந்தவம் இயற்றித் திருக்கார்த்திகைத் திருநாளில் மீண்டும் இறைவன் இடப்பாகம் பெற்றது திருவண்ணாமலையின் பெருமையை அதிகரிக்கின்றது.

"உன்னினர் தங்கட்செல்லாம் ஒல்லையில் முத்தி நல்கித்
தன்னிகர் இன்றி நின்ற தழல்"

வடிவின் நினைவாக ஆண்டுதோறும் கார்த்திகைத் திங்களில் திருக்காக்த்திகை நன்னாளன்று அண்ணாமலையின் முடி மீது தீபம் ஏற்றித் திருவிழா கொண்டாப் பெறுகின்றது. உலகப் பிரசித்தி பெற்ற தீபத் திருவிழாவின் நிலைக்களம் திருவண்ணாமலையே யாகும். கயிலை மலைக்குத் தனிச் சிறப்பு உண்டு. அதனினும் சிறப்புடையது "அண்ணாமலை" என்று போற்றுவர். இறைவனுக்கு உறைவிடமாந் தன்மையால் கயிலை சிறப்புறுகின்றது. அண்ணாமலை, இறைவனாகவே விளங்குவதாள் அதன் சிறப்பு மேலும் அதிகமாகின்றது. தேனினும் இனிய திருவாசகம் அருளிய மணிவாசகப் பெருமானைப் பெரிதும் ஆட்கொண்டது அண்ணாமலை. "சந்தக் கவிராஜயோகி" எனப் புகழ் பெற்ற அருணகிரி நாதர் அவதரித்து ஆறுமுகப் பெருமானால் ஆட்கொள்ளப் பெற்ற திருத்தலம் திருவண்ணாமாலை.

"அண்டங் கடந்தபொருள் அளவில்லதோர் ஆனந்த வெள்ளப் பொருள்" பொங்கித் ததும்பி பூரணமாய், " ஞானத் தபோதனரை வா " என்று அழைத்துப் பூரண ஞானம் பொழிகின்றது திருவண்ணாமலையில், புராண, இதிகாசங்களும் நாட்டு வரலாறுகளும் திருவண்ணாமலையின் புகழுக்கு அணிசெய்கின்றது. அளப்பறும் புகழ் வாய்ந்த திருவண்ணாமாலையின் சிறப்பு அகில உலகிலும் பிரசித்தமானது. எழுத்தில் வடிக்க இயலாதது. " ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெரும் சோதி" யான அண்ணாமலையானை வழிபட்டு பேரானந்தப் பெரும் பேறு பெற்றவர் எண்ணிலர். எத்தனை மகான்கள்; எத்தனை மகரிஷிகள்; எத்தனை மன்னர்கள்;எத்தனை அடியார்; இன்னும் மற்றவர் எத்தனை எத்தனை வழிபட்டு பேரானந்தப் பெரும் பேறு பெற்றவர் எண்ணிலர்.

அண்ணாமலை அரன் அழகிய கோயில் போல்
எங்கும் காணற்கு இயலா தாகும்
நான்கு பெருமதில் நன்னான்கு வாயில்கள்
வாயில்கள் தவறாது வான்தொடும் கோபுரங்கள்

எப்பதியிலும் உள இராச கோபுரங்கள்
இங்கிது இராச ராசகோபுரம் காண்
இத்தரை மீது ஏற்றம் மிக்கவை
உத்தமர் செய்தவை ஊழூழி நிற்பவை

ஞானத் தலம் இது நண்ணிய புண்ணியர்
ஞானிகள் போற்றும் ஞானிகள் ஆவர்.
போகத் தலம் இது பணி செயும் புண்ணியர்
போகமும் யோகமும் பொருந்த வாழ்ந்திருப்பர்.

எண்ணில் பெரும் சிறப்புடை இத்தலத்தில் திருக்கோயில் கொண்டருளும் அன்னை உண்ணாமுலைக்கும், அருள்மிகு அண்ணாமலைப் பெருமானுக்கும், பரிவார மூர்த்திகளுக்கும் ஸ்வர்ண பந்தனம் அஷ்டபந்தனம் சார்த்தியும். எங்கும் காணா ஏற்றமுடைய இராச கோபுரங்கள், விமானங்கள் ஆகியன புதுப்பித்தும் நாளிது இராட்சஸ ஆண்டு பங்குனித் திங்கள் 22-ம் நாள் (4_4_1976) ஞாயிற்றுக் கிழமை பூர்வபட்சதம், பஞ்சமி திதி, ரோஹிணி நட்சத்திரம், அமிர்தயோகம் கூடிய நன்னாளில் உதயாதி நாழிகை 5-30க்குமேல் 7-30 க்குள் (காலை 8-15முதல் 9 மணி அளவில்) விருஷப லக்கினத்தில் மகா கும்பாபிஷேகமும், அன்று இரவு பஞ்சமூர்த்திகள் வெள்ளி ரிஷப வாகனத் திரு உலைக் காட்சியும் நிகழ்ச்சி நிரலில் காணும் வண்ணம் சிறப்பாக நடைபெறும். அன்பர்கள் திரண்டு வந்து தெரிசித்தி அருள்தரும் உண்ணாமுலை உடனாகிய அருள்முகு அண்ணாமலைப் பெருமான் திருவருள் பெற்று எல்லா நலன்களும் எய்துமாறு வேண்டுகின்றோம்.

தமிழ் வருடம் மாதம் தேதி	ஆங்கில வருடம், மாதம் தேதி	கிழமை	காலை மணி	காலை நிகழ்ச்சிகள்	மாலை மணி	இரவு நிகழ்ச்சிகள்.
இராட்சஸ பங்குனி						
14	27-3-1976	சனி		அதிகாலை உதயாதி நாழிகை 57-30க்கு மேல் 60 நாழிகை அளவில் (மணி 5-க்கு மேல் 6- க்குள்) அநுக்ஞை, தனபூஜை. ஆச்சார்ய வரணம்.		
15	28-3-1976	ஞாயிறு	9:00	பிரசன்ன கணபதி ஹோமம் பூஜை	6:00	பிரவேச பலி, ராட்சோக்னம்
16	29-3-1976	திங்கள்	9:00	ஆச்சார்ய தசவித ஸ்நானம்	6:00	வாஸ்து சாந்தி
17	30-3-1976	செவ்வாய்	7:00	தான்ய ஸ்தாபனம், ரட்சா பந்தனம்	7:00	கலாகருஷணம்,
			12:00	பிரஸன்னாபிஷேகம்	8:00	யாக பூஜை துவக்கம்
					12:00	(இரவு) பூர்ணா ஹுதி,
18	31-3-1976	புதன்	8:00	காலை யாகபூஜை துவக்கம்	7:00	கலாகருஷணம்,
			11:30	பூர்ணாஹுதி	10:00	பூர்ணாஹுதி
19	14-3 -1976	வியாழன்	8:00	காலை யாகபூஜை துவக்கம்	7:00	யாகபூஜை துவக்கம்
			11:30	பூர்ணாஹுதி	1000	பூர்ணாஹுதி
20	2-4-1976	வெள்ளி	4:00	(அதிகாலை பரிவாரமூர்த்திகள் மஹா கும்பாபிஷேகம் துவக்கம்		
			8:00	காலை யாகபூஜை துவக்கம்	7:00	யாகபூஜை துவக்கம்
			11:30	பூர்ணாஹுதி	10:00	பூர்ணாஹுதி
21	3-4-1976	சனி	8:00	காலை யாகபூஜை துவக்கம்	7: 00	யாகபூஜை துவக்கம்
			11:30	பூர்ணாஹுதி	10:00	பூர்ணாஹுதி
22	4-4-1976	ஞாயிறு	4:00	(அதிகாலை) யாகபூஜை துவக்கம்	4:00	மஹாபிஷேகம்
			6:00	மஹா பூர்ணாஹுதி	8:00	திருக்கல்யாணம்
			8:15-9:00	மஹா கும்பாபிஷேகம்	9:30	பஞ்சமூர்த்திகள் திருவீதி உலாக் காட்சி

பிரதி தினமும் வேத, சிவாகம் தேவாரதியானம், பன்னிருதிருமுறை பாராயணம் , சமயச் சொற்பொழிவும், இன்னிசைக் கச்சேரிகள், நாதஸ்வரக் கச்சேரிகள் நடைபெறும்

தி. ந. பரமசிவம், பி. ஏ.,
நிர்வாக அதிகாரி
செயலாளர் &பொருளாளர்

நாட்டுக் கோட்டை நகரத்தார்
சா. நா. அ. சொ . அண்ணாமலைசெட்டியார்,
திருப்பணிக் குழுத்தலைவர்.
அ.க. அ. சித. அழ. சிதம்பரம் செட்டியார்,
கும்பாபிஷேகக் குழுத்தலைவர்.

டி. வி.சுப்ரமண்ய செட்டியார். அறங்காவலர் குழுத்தலைவர்.
பி எஸ். மாணிக்கவேலு,
எஸ். ஜெயராம பிள்ளை,
எம். தருமலிங்கம்,
ஏ. நடராசன்.
அறங்காவலர்கள்

வாகீசகலாநிதி

திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கள்

வாழ்த்துப்பாக்கள்

தேசு வடிவன் சிவபெருமான்
திகழும் அண்ணா மலைப்பதியில்
வீசும் புகழோ டன்னமிடும்
வியனார் மெ. க. சத்திரச்சீர்

ஆசை யுடனே சொல்லுவதற்
காரம் பித்து விரிவாகப்
பேசின் அதற்கோர் எல்லையுண்டோ?
பெருமை சொல்லச் சொலவிரியும். (1)

ஆய ஒருநூ றாண்டின்முன்
ஆங்கி ரசப்பேர் ஆண்டினிலே
மேய கார்த்தி கைத்திங்கள்
மெ க. அன்ன சத்திரத்தைத்

தூயர் முயன்று பத்தியினால்
தொடங்கி னார்கள்; மறைபயிலும்
சேயர் அங்கே அத்தியனம்
சிறக்கச் செய்து நலம்பெற்றார். (2)

நாளும் அடியார் பலர்வந்து
நாவும் ஆரப் பசியாற
நீளும் சுவைசேர் விருந்தருந்தி
நிறைவு பெற்றார்; மறைபயில

மூளும் விருப்பம் உடையவர்கள்
முன்போல் வாரா ததனாலே
கேள்போல் ஏழை மாணவர்க்குக்
கெழும உணவா தியஅளித்தார். (3)

திருக்கார்த் திகைநா ளைச்சேர்ந்த
திருவி ழாவில் ஐந்தாம்நாள்
பெருக்கார் கருணைச் சிவபெருமான்
பிறங்கும் பவனி வருதற்கா

இருக்கா திதுபோல் பெரியதெங்கும்
எனவே சொல்லும் வெள்ளிவிடை
பொருப்பே போலச் செய்தமைத்துப்
பெரிய விழாவும் செய்கின்றார். (4)

இறைவன் ஆடும் படிநாளும்
இனிய பசுவின் பாலளித்தார்;
இறைவன் இறைவி இருவருக்கும்
இலங்கும் திருவா பாரணங்கள்

முறையின் அமைந்த வாகனங்கள்
முயன்று செய்து வழங்கினார்;
அறையும் சங்கத் தபிடேகம்
ஆற்றிப் பணியும் புரிந்தனரே. (5)

பழைய அணியண் ணாமலையில்
பகவ னார்க்குத் திருப்பணிகள்
விழைவி னேடு செய்துகுட
நீரு மாட்டி வேண்டும் நிலம்

தழைய வாங்கி வழங்கியன்பு
ததும்ப நாளும் பூசையினை
இழைய ணாமல் வைப்பதுபோல்
இயற்றச் செய்து புகழ்பெற்றார். (6)

அண்ணல் அண்ணா மலையார்தம்
ஆல யத்தில் திருப்பணிகள்
வண்ண முறவே செய்துகும்ப
நீரும் ஆட்டி வளம் செய்தார்;

உண்ணெக் குருகி அடியார்கள்
உவந்து போற்றித் தரிசிக்க
நண்ணும் அறங்கள் பலபலவும்
நாளும் எண்ணிச் செய்கின்றார். (7)

ஒவ்வோர் நாளும் சத்திரத்தில்
உவந்து வந்த அடியார்கள்
செவ்வே உணவுண்டு இன்புற்றார்;
செட்டி மார்தம் அறத்தினையே

ஒவ்வா தெந்தப் பேரறமும்
உண்மை என்றே புகழ்கின்றார்;
அவ்வா றந்தச் சத்திரத்தின்
அருமை பெருமை மிக ஓங்கும் (8)

அன்னதானம், கல்வி கற்போர்க்
கரிய உதவி, இறைவனுக்குச்
சொன்ன மேவு மாபரணம்
தூய வெள்ளி விடையூர்தி

இன்ன பலவும் செய்தியங்கும்
இந்த மெ. க. சத்திரமும்
நன்னர் நடத்தும் அன்பர்களும்
நாளும் ஓங்கி வாழியவே! (9)

பாடுவார் முத்தப்ப செட்டியார் அவர்கள்
தம் மரபினரான
நகரத்தார் முன்னேறும் பொருட்டுப் பாடியருளிய

பஞ்சாட்சர வர்க்க பூஷணம்

கலித்துறை

1. நன்றே பெருக நவிலுங்கு பேரர் நகர்வணிக
ரென்றே யுலகம் புகழ வவர்க்கீண் டிருநிதியம்
நின்றே நிலவ வறமும் கனமும் நெடிதுபெறத்
தொன்றேசோ ூீசர் செயங்கொண்டார் பாதம்துதிக்குமே.

2. மன்னும் பெருமை பெருகிக் குபேரர் நகர் வணிக
ரென்னும் மகிமை யுறவும் வறியவர்க் கீந்திடவும்
பொன்னும் பொருளும் புவியிமுப் போகம் பொருந்திடவும்
துன்னுஞ்சோ ூீசர்செயங்கொண்டார் பாதம் துதிக்குமே

3. சிவனா லயமும் திருமால்பணியும் சிறப்புறத்தான்
நவமாப் புதிக்கியு மாக்கியும் மேலோர் நவிலுநல்ல
தவமா மிதெனத் தரணியி லோங்கவும் தாங்குமகத்
துவமாசோ ூீசர்செயங்கொண்டோர் பாதம் துதிக்குமே

4. வந்தார்க் குதவும் வணிகர் குபேரனாம் வள்ளலுக்கும்
பிந்தார் தனத்திலிவரே யுலகில் பெரியரெனச்
சிந்தார் புறமிளை யாத்தங் குடியார் சிறப்புறவும்
சொந்தார்சோ ூீசர்செயங்கொண்டோர் பாதம் துதிக்குமே

5. யவனங் கலிங்கந் தமிழ்சிங்க ளம்பல யாண்டுமுள்ள
புவன மெலாமிவர் வர்த்தக மோங்கவும் புண்ணியஞ்சேர்
தவமும் தருமமும் தங்க வணிகர் தரம்பெறவும்
துவசோ ூீசர்செயங்கொண்டோர் பாதம் துதிக்குமே

குறிப்பு : ஒவ்வொரு பாட்டின் தலைப்பிலும் உள்ள முதல் எழுத்தைச் சேர்த்துப் படித்தா பஞ்சாட்சர மந்திரமாகும்.

பாடுவார் முத்தப்ப செட்டியார் அவர்கள் கோட்டையூருக்கு வந்திருந்த போது, அவர்களை வரவேற்றுப் பெருமைப்படுத்திய நகரத்தார்கள் வேண்டுகோளுக்கிணங்க பின்வரும் பாடலை, அவர்கள் பாடியிருக்கிறார்கள்.

கோட்டையூர் நகரத்தார் வாழ்த்து

கோட்டையூர் மாவணிகர் கொண்டுவிற்றுக் கொண்டுவந்த
ஏட்டையெல்லாம் கண்டு இயம்பினோம் - கோட்டையூர்
நாட்டைவிட்டுச் சென்ற நகர்த்தார் யாவரும்பொன்
கோட்டையுடன் வருவர் கொண்டு.

நீர்பெருகி ஊற்றெடுக்கும் நீண்டபுகழ்க் கோட்டை
யூர்பெருகி ஊற்றெடுக்கும் ஊருணிகள் - சீர்பெருகி
அன்ன ஊரன்ன ஆருஞ்செல்வம் வீற்றிருக்கும்
பின்னும் ஓர் ஊழி பேரிட்டு.

–பாடுவார் முத்தப்ப செட்டியார்

உ

சிவமயம்

திருமகள் வாழ்த்து

காடுவெட்டிப் போட்டுக்
கடிய நிலந்திருத்தி
வீடுகட்டிக் கொண்டிருக்கும்
வேள்வணிகர் - வீடுகட்கு
அன்றைக்கு வந்த எங்கள்
அம்மா இலக்குமி நீ
என்றைக்கும் நீங்காது இரு.
நீங்காது நின்மகனும்
நெடிய திரு மாநிதியும்
பாங்காக அன்று வந்த
பாற்கடல்போல் - தேங்காது
நன்றுக நீஇருந்து -
நாளும், வளம்பெருக்கி
என்றைக்கும் நீங்காது இரு,

—பாடுவோர் முத்தப்ப செட்டியார்.

சிலப்பதிகாரமும் நகரத்தார்களும்

கவிஞர் கண்ணதாசன்

பெருங்குடி வணிகன் பெற்ற குலக்கொடி
மாநா யகன்மகள் மாணிக்கக் கண்ணகி
கோவல னுடேனே குடித்தனம் நடத்தி
மாதவி இடத்தே மணந்தவன் சென்றதும்
கையறு நிலையில் கலங்கித் தவித்ததை
செப்பும் காவியம் சிலப்பதிகாரம்!

மணவினைப் பண்பும் மங்கல வழக்கும்
வாணிபக் குலமென வாழ்ந்த பெருமையும்
சிறிதே நோக்கினால் சிலப்பதி காரம்
செட்டி மக்கள் தம் சிறப்பினைச் சொல்வதே!
ஆராய்ந் தெடுத்தவர் அனைவரும் ஒப்பும்
உண்மை இதுதான்! ஒன்பது ரஸமும்
கலந்த சிலம்பு காட்டிடும் பண்பு
நகரத் தார்நிலை நாட்டிடும் பண்பே!

காவிரி நகரைக் கடல்கொளு முன்பு
வாணிபத் தெருவில் வாழ்ந்தவ ரெல்லாம்
செட்டிமார் என்றே தேர்ந்தனர் அறிஞர்.
கண்ணகி ஆத்தாள் கண்ணாத் தாளே
இன்றும் அவள்பேர் இடுவது யாமே
கோவலன் வாழ்ந்தது குணமிலா வாழ்வு
ஆதலின் நாங்கள் அவன்பேர் வைத்திலம்!
மாதவி பெயரையும் வைப்ப தில்லையென
இசைவே ளாளர் இருந்ததும் அறிவோம்!

காவிரிப் பட்டினம் கடல்கொளப்பட்டதும்
பாண்டிய மன்னன் பரிந்துரைத் ததனால்
சூழும் நகரம் தொண்ணூற் றாறென
மறவர் நாட்டில் மங்கலம் கொண்டோம்
நாட்டுக் குடையோர் `நாட்டார் 'எனவும்
நகரம் கொண்டவர் `நகரத்தார்' எனவும்
பட்டம் சூட்டிப் பகைஇன்றி வாழ்கிறோம்!

கடற்கோ ளாலும் கடுநோ யாலும்
நகரத்து மாதர்கள் நாசமுற் றதனால்
பாண்டிய நாட்டில் இல்லம் படைத்ததும்
சைவப் பிள்ளைமார் சம்பந்தம் கொண்டோம்
"ஆச்சி" எனும்பேர் அவர்கள் தந்ததே!

வீரபாண் டியன் வேண்டுகோ ளின்படி
இந்தத் தொடர்பை ஏற்று முடித்தோம்
எடுப்பதும் கொடுப்பதும் இல்லை' என்றவர்
இன்னொரு வகையாய் இயங்கி வருகிறார்!
சரித்திர வரிகளைச் சரியாய் நோக்கினால்
சிலப்பதி காரமும் வளையா பதியும்
மணிமே கலையும் நமதுமா கதையே!

ஐந்தில் மூன்றுக் குடைய வராக
வாழும் நகரத் தாரர்கள் வாழ்க்கையை
என்றும் அந்த இறைவன் காக்க
கோட்டை யூர்ப்பரமன் குலமுறை காக்க
வாழி! வாழபல் லாண்டு வாழி என
வாரிசுக் கொருவன் வாழ்த்துகின்றேனே!



விநாயகர் பெருமை

டாக்டர் அவ்வை நடராசன்
முன்னாள் மொழிபெயர்ப்புத் துறை இயக்குநர், தமிழக அரசு,

இறைவன் பல உருக்கொண்டவன் எடுத்த செயல் இனிது முடிய நாம் வழிபடும் போது, நம் முன்னே நிற்பவர் விநாயகர்.

விநாயகர் முதற்கண் வழிபடப் பெறும் கடவுளாக இருத்தலின் மந்திரங்களுக்கு எல்லாம் மூலமந்திரமாகிய பிரணவம் அவர்க்கு உரியதாயிற்று. உற்று நோக்குவார், அவர் வடிவம் ஓங்கார வடிவமாக இருப்பதை உணருவர்.

விநாயகர் காட்சிக்கு எளியவர்; கருணைக்கு இனியவர் ; தன்னை வணங்கும் அடியவர்க்கு எளிதாகவும், விரைவாகவும் அருள் வழங்குபவர் சைவரும் வைணவரும் சமணரும் பௌத்தரும்கூட விநாயகக் கடவுளை அன்புடன் வழிபடுவர்.

தனது அடி வழிபடும் அவர் இடர் கடி கணபதி

என்று திருஞானசம்பந்தர் விநாயகரைப் போற்றித் துதித்துள்ளார். நம்பியாண்டார் நம்பிகள், மெய்கண்டார் போன்ற சைவப் பெருஞ்சான்றோர்கள், தங்கள் குழந்தைப் பருவத்திலேயே விநாயகரை வழிபட்டு அருள் பெற்றனர் என்பது வரலாறு.

விநாயகரைப் பற்றிய துதிநூல்கள் பலவற்றுள்ளும், அவ்வையார் அருளிச் செய்த அரும்பெறல் நூலான விநாயகர் அகவல் என்பது எளியதும், சிறியதும் பொருள் பொதிந்ததும் ஆகும். அதனை மனம் உருகி ஓதி வழிபடுவர் அனைவரும் விநாயகர் அருள் பெற்று உய்வது உறுதியாகும்.

பதினோராம் திருமுறையில் இருபதாவது பிரபந்தமாக விளங்குவது மூத்தநாயனார் திருவிரட்டை மணி மாலை என்பது. நாயனார் - இறைவன் மூத்தநாயனார் - சிவ பெருமானின் மூத்தபிள்ளையாகிய விநாயகர். இதனைப் பாடியவர் கபிலதேவநாயனார் என்னும் புலவர் ஆவார். நமக்குக் கிடைத்துள்ள தமிழ் நூல்களுள் கணபதியைச் சிறப்பு முறையில் போற்றும் தனிப் பிரபந்தங்களில் தொன்மையானது மூத்த நாயனார் திருவிரட்டை மணிமாலை என்னும் இந்நூலே ஆகும்.

மாதவச் சிவஞான முனிவர், விநாயரைப் பற்றிப் பிரபந்தம் ஒன்று பாடியுள்ளார். இவர் மாணவரான கச்சியப்ப முனிவர், விநாயகர் புராணம் ஒன்றைத் தமிழில் யாத்துள்ளார்.

மெய்கண்டார் நூல்களிலும் விநாயகர் பலபடப் பாராட்டப் பெற்றுள்ளார்.

இந்து மதத்திற்கு உரிய கடவுளர் பலருள்ளும் வேற்று நாடுகளிலும போற்றப் பெறுபவர் விநாயகப் பெருமானே ஆவார். நேபாள நாட்டில் விநாயகர் வழிபாடு அசோகப் பேரரசர் காலத்திலேயே பரவி இருந்தது. திபெத்து, மங்கோலியா, இந்தோனேசியா ஆகிய நாடுகளிலும் பல நூற்றாண்டுகளாக விநாயக வழிபாடு பரவியிருக்கிறது.

இலங்கையில் கதிர்காமம் என்னும் முருகன் கோயிலில், விநாயகர் தனிச் சந்நிதி பெற்று விளங்குகிறார். அங்கு, கிறித்தவர்களும் முஸ்லீம்களும் கூட அவரை வணங்குகின்றனர்.

தாய்லாந்தின் தலைநகரான பாங்காக் நகரிலுள்ள கோயிலில் விநாயகர் ஒரு கையில் எழுத்தாணியுடனும் மற்றெரு கையில் எழுத்துச் சுவடியுடனும் காணப்பெறுகிறார்.

விநாயகருக்காகவே கி.பி. பத்தாம் நூற்றாண்டில் ஒரு கோயில் அமைத்துள்ளதை கம்போஜ (கம்போடியா) நாட்டில் காண்கிறோம். அங்கே கணேசர், பராகெனேஸ் எனப் பெயர் பெறுகிறார்.

சப்பான், யவனம், இத்தாலி மற்றும் தென் அமெரிக்காவிலுள்ள பெரு ஆகிய நாடுகளிலும் விநாயகப் பெருமான் சிறப்புப் பெற்றுத் திகழ்கிறார்.

இத்தகைய புகழ்மிக்க விநாயகரை நாளும் வழிப்பட்டு இடர் நீங்கி நல்வாழ்வு வாழ்வோமாக!

விநாயகர் தலங்களும் வழங்கும் பெயர்களும்

திருவாவடுதுறை	-	அழகிய விநாயகர்
நறையூர்ச் சித்தீச்சுரம்	-	ஆண்டபிள்ளையார்
திருவையாறு	-	ஆதிவிநாயகர்

திருமுதுகுன்றம்	-	ஆழத்துப்பிள்ளையார்
திருச்சிராப்பள்ளி	-	உச்சிப்பிள்ளையார்
திருவையாறு	-	ஏலமிட்டவிநாயகர்
குடந்தைக் கீழ்க் கோட்டம்	-	கங்கைக் கணபதி
திருக்காறாயில்	-	கடுக்காய்ப்பிள்ளையார்
திருக்கச்சூர்	-	கருக்கடிவிநாயகர்
திருக்கடவூர்	-	கள்ளவாரணப்பிள்ளையார்
கடிக்குளம், திருக்கருகாவூர்	-	கற்பகப்பிள்ளையார்
திருமுருகன் பூண்டி	-	கூப்பிடுபிள்ளையார்
திருநாட்டியத் தான்குடி	-	கைகாட்டி விநாயகர்
கொட்டையூர்	-	கோடிவிநாயகர்
திருமறைக்காடு	-	சிந்தாமணி கணபதி
கீழ்வேளூர், திருமழபாடி	-	சுந்தர கணபதி
திருவுசாத்தானம்	-	சூதவனப்பிள்ளையார்
அன்பிலாலந்துறை	-	செவிசாய்த்த விநாயகர்
திருநள்ளாறு	-	சொர்ண விநாயகர்
திருக்கச்சூர்	-	தாலமூல விநாயகர்
திருப்பனையூர்	-	துணையிருந்த பிள்ளையார்
நாகைக் காரோணம்	-	நாகாபரண விநாயகர்
இன்னம்பர்	-	நர்த்தன விநாயகர்
திருவீழிமிழலை	-	படிக்காசு விநாயகர்
திருவிடைமருதூர்	-	படித்துறை விநாயகர்
திருப்புறம்பியம்	-	பிரளயங்காத்த விநாயகர்
திருமாகறல்	-	பொய்யா விநாயகர்
திருநாரையூர்	-	பொள்ளாப்பிள்ளையார்
திருவாரூர்	-	மாற்றுரைத்த பிள்ளையார்
ஆலவாய், கோயில், மாயூரம்	-	முக்குறுணிப் பிள்ளையார்
திருவல்லம்	-	வரசித்தி விநாயகர்
திருக்களர்	-	வலம்புரி விநாயகர்
திருப்புகலூர்	-	வாதாபி கணபதி
திருமறைக்காடு	-	வீரஹத்தி விநாயகர்
திருவலஞ்சுழி, இடும்பாவனம்	-	வெள்ளை விநாயகர்
திருவேதிகுடி	-	வேதப்பிள்ளையார்

விநாயகரைப் பற்றிய சில நூல்கள்

நூலின் பெயர்	-	ஆசிரியர்
கந்தபுராணம்	-	கச்சியப்ப சிவாச்சாரியார் (கயமுகன் உற்பத்தி, அனந்தன் சாபநீங்கு படலங்கள்)
விநாயகபுராணம்	-	கச்சியப்பமுனிவர்
விநாயக மான்மியம்	-	பூபாலபிள்ளை
பிள்ளையார் கதை	-	சுன்னாகம் வரத பண்டிதர்
மூத்தநாயனார் இரட்டை மணிமாலை	-	கபிலர்
நாரையூர் பொள்ளாப் பிள்ளையார் இரட்டை மணிமாலை	-	நம்பியாண்டார் நம்பி
மூத்தபிள்ளையார் மும்மணிக்கோவை	-	அதிராவடிகள்
காசித்துண்டி விநாயகர் திருவருட்பா	-	தருமபுரம் சிவராம தேசிகர்
கலைசைச் செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத் தமிழ்	-	சிவஞான சுவாமிகள்
விநாயகர் திருவகவல்	-	ஔவையார்
விநாயகர் திருவகவல்	-	நக்கீரர்
விநாயகர் பராக்கிரமம்	-	பானுகவி
விநாயக பரத்துவம்	-	குமாரசுவாமிக் குருக்கள்
கணேசபுராணம்	-	வீரசைவர் ஒருவர்
கணபதி	-	தண்டபாணி தேசிகர் (திருவாவடுதுறை ஆதீன வெளியீடு)



திருநீற்றின் பெருமை

காஞ்சிப் பெரியவர்கள்

உலகத்தில் பச்சையாக் ஓர் இலை இருக்கிறது. மஞ்சளாக ஒரு துணி இருக்கிறது. இப்படி அநேகம் பொருள்கள் அநேக வர்ணங்களில் இருக்கின்றன. அந்தப் பொருள்களில் எதைக்கொண்டு வந்து நெருப்பில் போட்டாலும் அது கரியாகி விடுகிறது, 'கறுப்பு ஒன்றுதான் எல்லாப் பொருள்களுக்கும் இயல்பான நிறமோ, பாக்கி நிறம் எல்லாம் அவை பூசிக்கொண்ட சாயமோ?' என்று தோன்றுகிறது, இருந்தாலும், 'ஒரு பொருளின் சாயம் கருத்துப் போயிற்று?' என்று சொல்கிற வழக்கம் இல்லை. 'சாயம் வெளுத்துப் போயிற்று' என்றே சொல்கிறோம் ஏன்? கருகிவிட்ட இந்தப பண்டங்களையும் இன்னொரு முறை அக்கினியில் புடம் போட்டால் அவை அனைத்தும் நீற்றுப் போகின்றன. இப்படி நீறு ஆகிவிட்டபோது எல்லாம் வெளுப்பு! இப்படிச் சாயம் வெளுத்துப் போய்விடுகிறது!

இந்த உலகமே பலவிதமான சாயங்களை பூசிக் கொண்டிருப்பதுதான். அந்தச் சாயங்கள் யாவும் போனபின் எஞ்சியிருப்பது ஒன்று தான். அதுதான் ஆண்டவன் உண்மை என்பது வெண்மை, நல்ல உடம்பில் உள்ள பொருளெல்லாம் சாயம்; அதில் உண்மையை நிலைப்படுத்திக் கொள்வதற்காகவே வெண்மையின் திருநீற்றைப் பூசச்சொன்னார்கள்.

62

திருநீறு அணிவதால் உண்டாகும் நன்மைகள்

1. உடல் நாற்றத்தைப் போக்கும்.
2. தொத்து நோய்க் கிருமிகளைக் கொல்லும்.
3. தீட்டுக் கழிக்கும்.
4. உடலைச் சுத்தம் செய்யும்.
5. வியாதிகளைப் போக்கும்.
6. பில்லி, சூனியம், கண்ணேறு பாதிக்காது காக்கும்.
7. முகத்திற்கு அழகைத் தரும்.
8. நினைவாற்றலை வளர்க்கும்.
9. அறிவுக் கூர்மையைத் தரும்.
10. ஞானத்தை உண்டாக்கும்.
11. பாவத்தைப் போக்கும்.
12. திருவடிப் பேற்றைத் தரும்.



அர்ச்சனைச் சிறப்பு

சிவாச்சாரிய திலகம் தி.ஷ. சாம்பமூர்த்தி சிவாச்சாரியார், சென்னை

இறைவன் எங்கும் நிறைந்திருப்பவன் சிறப்பாகக் கோயிலில் குடிகொண்டு இருப்பவன். உயிரினங்களின் உள்ளேயும் வெளியேயும் நிறைந்து விளங்கும் பேரருளைக் குவித்து வைக்கும் இடங்களே கோயில்கள்.

கோயிலில் எழுந்தருளியிருக்கும் மூர்த்தங்களுக்கு ஏற்ற முறையில் பண்டு தொட்டு பூசை வழிபாடுகள் நடந்து வருகின்றன.

சிவன் கோயிலின் பூசை முறைகள் சிவாகம நெறிப்படி நடக்கும்.

சக்தி வழிபாடுகள் பெரும்பாலும் சாக்த தந்திரங்களை ஒட்டியும் ஆகமங்களைப் பின் பற்றியும் நடைபெறும்.

பெருமாள் கோயில்களில் பாஞ்சராத்தம், வைகானசம் என்னும் நெறிமுறைகளைப் பின்பற்றி வழிபாடு நடக்கும்.

மூர்த்தங்களுக்குப் பதினாறு வகையான உபசாரங்கள் உண்டு. அவையாவன :

1. ஆவாகனம்
2. ஸ்தாபனம்
3. சன்னிதானம்
4. சன்னிரோதனம்
5. அவகுண்டனம்
6. தேனுமுத்திரை
7. பாத்தியம்
8. ஆசமனீயம்
9. அர்க்கியம்
10. புஷ்பதானம்
11. தூபம்
12. தீபம்
13. நைவேத்தியம்
14. பானீயம்
15. ஜப சமர்ப்பனை
16. ஆராத்ரிகம்

இவற்றுள் புஷ்பதானம் மிகச்சிறப் புடையது. மந்திரங்களைச் சொல்லி மலர்களை மூர்த்தங்களுக்குச் சாத்துதலையே அர்ச்சனை என்கிறோம்.

அர்ச்சனையில் வரும் மந்திரநாமங்கள் இறைவனின் பெருமையையும் பேரருளையும் வெளிப்படுத்தும்.

'அர்ச்சனை பாட்டே யாகும்'
என்பது தேவார வாக்கு.

தோத்திரமாக இருந்த அர்ச்சனை பின்னர் வாக்கிய வடிவில் அமைந்தது.

சிவன்கோயிலில் வில்வமும், பெருமான் கோயிலில் துளசியும், அம்மன் கோயிலில் குங்குமமும் அர்ச்சனைக்குப் பயன்படுத்தப் படுகின்றன.

அர்ச்சனைகளில் இறைவனின் திரு நாமங்களைச் சொல்லி, மூர்த்தங்களின் திருவடிகளில் மலர்களை இட்டு வழிபடுவதே சிறப்புடையது.

ஒரு நாமாவை உச்சரிக்கும் பொழுது ஏற்படும் சப்தராசிகளின் மந்திரமயம் உச்சரிப்பவனின் இதயத்திலிருந்து கிளம்பி, வாய்வழி வெளிப்பட்டு, கையிலுள்ள மலர், குங்குமம் இவற்றில் இறங்கி இறைவனின் திருவடிகளை அடைகின்றன.

அர்ச்சனையின் இறுதியில் நைவேத்தியம், கற்பூரங் காட்டல் அவசியமாகும். தேங்காய், பழம், வெற்றிலை பாக்கு இவை நைவேத்தியங்கள் ஆகும்.

நைவேத்தியங்கள் இறைவனது மூர்த்தங்களை ஒளி செய்பவையாகவும் சாந்தி செய்பவையாகவும் விளங்குகின்றன. இவை அடியார்களுக்கு அமைதியைத் தரும்.

அர்ச்சனையின் முடிவில் கண்டிப்பாகத் தேங்காய் உடைக்க வேண்டும்.

மனிதன் தான் செய்த கருமாக்களின் பிணைப்பில் கட்டுண்டு கிடக்கின்றான். கர்மா என்பது பாவங்களின் உருண்டை. பாவம் விலகாதவரை, மனிதன் தான் விரும்பியதை அடைய முடியாது. வீடுபேறடைய தான் செய்த கர்மாவை உடைத்தெறிய வேண்டும்.

தேங்காயை உடைப்பதன் மூலம் மனிதன் தான் செய்த கர்மாவை உடைத் தெறிகிறான். இதனால் பாவங்கள் விலகி இறைவனது திருவருள் கிடைக்கிறது.

அர்ச்சனையில் படைக்கப் பெறும் பழம் அர்ச்சிப்பவனின் மனத்தை உறுதிப்படுத்துகிறது.

வெற்றிலை, வறுமை என்னும் காம்புடனும், துன்பம் என்னும் நுனியுடனும் கூடி விளங்குகிறது. காம்பையும் நுனியையும் கிள்ளி நிவேதனம் செய்வதனால் மனிதனின் வறுமையும் துன்பமும் நீங்குகின்றன.

இறுதியாகக் காட்டப் பெறும் கற்பூர ஒளி இறைவனது உருவச் சிறப்பைப் பிரகாசப் படுத்திக் காட்டுகிறது.

மந்திரங்களை உச்சரிப்பவன் அவற்றை முழுமையாக உச்சரிக்க வேண்டும். இல்லையானால் முழுப்பயனை அடையமுடியாது.

உ

ஸ்ரீ அண்ணாமலையார் துணை

திருமதி. ராம. வள்ளிமுத்தையா

தாலாட்டு

பிறந்த வீட்டுப் பெருமையையும், புகுந்த வீட்டுக் கீர்த்தியையும் தாலாட்டாக பிஞ்சிலே நம் நெஞ்சில் பதித்து நமை உயர்த்திய அன்னை இனத்துக்கு இந்த சின்னஞ் சிறியவளின் எண்ணத்தில் பிறந்த பாடல் அர்ப்பணம்.

அண்ணாமலை நாதன் அருள் சுரக்கும் வாசலிலே
ஆளப்பிறந்தவனே அய்யாக்கள் கதை கேளாய்
பண்ணெடுத்துப் பாடிடுவேன் பாட்டன்மார் பெருமை எல்லாம்
பச்சைப் பசுங்கிளியே பருகிடுவாய் பால் போல.

மெய்யஞ்செட்டி மகன் கருப்பன் செட்டியவர்
மாதவத்தால் மலர்ந்த மாணிக்கம் மூவரய்யா
பொய் சொல்லா மெய்யருடன் அழகிய மெய்யருண்டு
பின்னால் பூத்தவர்க்கு வீரன் செட்டியாம் நாமம்
தாயின் வயிற்றினிலே தனித்துக் கிடக்கையிலே - அன்னை
தருமமெனும் உணர்வை உதிரத்தில் கலந்தாளோ?
வாயிலே பாலூட்டும் வேளையிலே மாதாவும்
வளமான சிவநாமம் தானூட்டி வளர்த்தாளோ?
தின்னத் தேன் குழலும் தந்திருக்கும் போதினிலே
தென்பாண்டி நாட்டானின் திருச்சரிதை சொன்னாளோ?
பிள்ளைக்கனி மூன்றும் பஞ்சு மெத்தை துயின்றிருக்க
பசி தீர்க்கும் நற்குணத்தைப் பாட்டாய்ப் படித்தாளோ?
பள்ளிக்கு ஏடெடுத்து இளஞ்சிட்டுப் போகையிலே
பஞ்சாட்சரத்தையவள் பைக்கட்டில் வைத்தாளோ?
திரைகடலோடி மைந்தர் திரவியங்கள் சேர்க்கையிலே
தலைவன் அடியார்க்கு அள்ளியிடச் சொன்னாளோ?
விரைந்தே வந்தவரும் வடிவாய் மடம் அமைத்து
வயிற்றுப் பசிபோக்கும் புண்ணியத்தைப் பெற்றாரோ?

அரனார் அமர்ந்துவர அழகழகாய் வாகனமாம்
ஆத்தாள் அணிந்திருக்கும் அணிகலனும் பலவகையாம்
சிரத்தில் சொலித்திருக்க வைரத்தால் மணிமுடியாம்
சிவனார் கோபுரங்கள் செப்பனிட கோடிகளாம்
தொப்பையப்பனுக்குத் தனியாக ஆலயமாம்
துவைத்துக் குளித்திடவே ஆழிபோல் ஊரணியாம்
செப்பிட எளிதாமோ சேர்ந்திருந்த புண்ணியங்கள்
சொல்லில் அடங்கிவிடுமோ அய்யாக்கள் கீர்த்தியெலாம்?

நீயும் அவர் வகுத்த பாதையிலே சென்றிடய்யா
நெஞ்சில் அஞ்செழுத்தை வித்தாக நட்டிடு அய்யா
கோவில் கட்டியவர் குலம் விளங்க வந்தவனே
குன்றின் சோதியைப் போல் குவலயத்தில் ஒளி வீசு
பாட்டன்மார் ஆண்டமனை பால் குடிக்கப் பிறந்தவனே
பாட்டை உள் வாங்கி பசுந்தளிரே கண்ணுறங்கு
நாட்டமுடன் திருப்பணிகள் நீ செய்யும் நாளும் வரும்
நாதன் தாள் துணை நமக்கு நாயகமே கண்வளராய்

நகரத்தார் வரலாறு

கம்பன் அடிப்பொடி

மகுட, தனவைசிய, பூபால, நாட்டுக் கோட்டை நகரத்தார் எனப் பெயர் பெறும் செட்டிமார்கள் ஆதியில் காஞ்சிபுரத்தில் வாழ்ந்துவந்தவர்தள். காஞ்சிபுரத்தில் உள்ளூர், உள் நாட்டு வாணிகம் செய்பவகளாகவும் மாமல்லபுரத்துத் துறைமுகத்தில் இருந்து மரக்கலம் வழியாக வெளிநாட்டு வாணிகம் செய்பவர்கலாகவும் விளங்கியிருக்கின்றார்கள் இக்காலத்தில் காஞ்சிபுரம் உள்ளிட்ட தொண்டைநாடு முழுவதும் சோழநாடாகவே இருந்தது.

கரிகால் சோழன் காலத்திற்குப் பின்னர் அதாவது சுமார் 2000 ஆண்டுகட்கு முன் வெண்வேற்கிள்ளி என்னும் சோழமன்னன் ஒருவன் நாக நாட்டைச் சேர்ந்த பீலிவளை என்னும் மாதைக் காதலித்து மணந்தாடி, அவள் அம்மன்னனை மணக்க சுரு நிபந்தனை விதித்தாள். அதற்கு அம்மன்னனும் இசைந்தான். அதன்படி அம்மாதிற்குப் பிறக்கும் மைந்தனுக்குச் சோழநாட்டில் பாதியை வழங்க வேண்டும். கருவுற்றதும் அம்மாது நாக நாட்டிற்குச் செனறுவிட்டாள். ஆண்குழந்தை பிறந்து தக்க பருவம் வந்தது அக்குழந்தையை கப்பல் வாணிகம் செய்யச் சென்றிருந்த ஒரு வணிகக்கூட்டத்தின் மூலம் மன்னன்பால் சேர்ப்பிக்கும்படி அனுப்பிவைத்தாள். அக்குழந்தை வந்தபடகு நாகைத் துறைமுகத்தை அடுத்து கடல் அலையால் மொத்துண்டு உடைந்துவிட்டது. அப்படகில் இருந்தவர்கன் எப்படியோ உடைந்த படகின் மரத்துண்டுகளைப் பிடித்துக் கொண்டு கரைசேர்ந்தனர். பீலிவளையின் மைந்தனும் அவர்களுடன் ஒரு மரத்துண்டைப் பிடித்துக்கொண்டு கரைசேர்ந்தனர். அவனை அழைத்துவந்த வணிகர் கூட்டம் அம்மைந்தனை மன்னன்பால் சேர்ப்பித்தனர். அச்சோழனுக்கும், பீலிளைக்கும் ஏற்பட்ட ஓர் உடன்பாட்டின்படி அம்மைந்தன் கழுத்தில் தொண்டைக்கொடியுடன் இருந்தான். தொண்டைமாலையுடன் இருந்தவனை சிற்றலைகள் கரைசேரவிட்டதால் அவன் பெயர் " தொண்டைமான் இளந்திரையன்" என்றாயிற்று. மன்னனும் நிபந்தனைக்கேற்பர் சோழநாட்டில் ஒரு பாதியை அவனுக்குவழங்கினான். தொண்டைமான் ஆண்டதால் தொண்டைநாடு என்று அப்பகுதி பிற்காலத்தில் பெயர் பேற்றது. தென்பெண்னை ஆற்றுக்கு வடக்கே, திருப்பதிக்குத் தெற்கே, கடலுக்கு மேற்கே, பவள மலைக்குக் கிழக்கே இந்நான்கெல்லைக்குள் உட்பட்ட நாடு தொண்டை நாடாயிற்று.

வெள்வேற்கிள்ளி சோழ நாட்டின் வடபகுதியை இளந்திரையனுக்கு வழங்கியபின் காஞ்சியிலிருந்து பலதுறை வாணிகம் செய்து வந்த நம் முன்னோரை அழைத்து அவர்களை எல்லாம் சோழநாட்டிற்கு வந்து குடியேறித்தம் வாணிகத்தை நடத்தும்படியும் அதற்கு வேண்டிய எல்லாவசதிகளையும் தான் செய்து தருவதாகவும் கூறினான். அதற்கேற்ப நம்மவர்களும் காஞ்சிபுரத்தை விட்டுப் புறப்பட்டு சோழ நாட்டிறகு வந்து சேர்ந்தனர். சோழநாட்டில்

காவிரிப்பூம்பட்டினம், நாகபட்டினம், காரைக்கால் முதலான நகரங்களில் குடியேறினர்.

காஞ்சிபுரத்திலிருந்து வந்தவர்கள் ஆதலால் இவர்கள் "நகரத்தார்" என்று பெயர்பெற்றனர். இவர்களில் மிகப்பெரும்பாலோர் காவிரிபூம்பட்டினத்திலேயே வசித்து வந்தனர். அங்கு வாழ்ந்துவந்தவர்கள் உள்ளூர்களிலும், வெளியூர் சென்றும், பிற மாநிலங்கட்கும் பொதிமாடு, வண்டி, படகுகளின் மூலம் வாணிகம் செய்தும், பிரதேசங்கட்கு மரக்கலங்களின் மூலம் ஏற்றுமதி இறக்குமதி வாணிகம் செய்தும் வளம் பெற விளங்கினர்.

இவர்கல் தங்கள் வாணிப முறைகளை மிக்க ஒற்றுமையுடனும் ஒழுங்குடனும் ஆற்றி வந்தனர். பெரும்பாலும் வெளியிடங்கட்குச் செல்பவர்கள் கூட்டமாகவே செல்வர். வெளியிடம் செல்வோர் "சாத்து" (Traders cararan) என்று அழைக்கப் பெற்றனர். பிறநாடுகட்குக் கடல்வழி வாணிகம் செய்தோர் "மணிக்கிராமம்" (Mercantile Guild) என்று அழைக்கப் பெற்றனர். எல்லாவகை வாணிகர்களும் தங்கள் தொழில் செம்மையாக நடைபெற ஏற்படுத்திக் கொண்ட ஓர் அமைப்பு "நகரம்" (Chamber of Commerce) எனப் பெயர் பெறும்.

இவர்கள் தங்கள் "நகரம்"செயல் படுவதற்கு ஒரு பெரிய மாளிகை அமைத்திருந்தனர். அதற்கு இலச்சினையாக சித்திர மேழியையும் கொடியாகச் சிங்கத்தையும் கொண்டிருந்தனர். மேலும் தங்கள் நகர மாளிகைக்கு வெள்ளிக் கதவும் அமைத்திருந்தனர்.

மன்னரும் மதிக்கப் பலவகையாலும் சிறந்து விளங்கினர். மன்னர்க்கு முடி சூட்டும் பெருமையும் உரிமையும் உடையவர்களாய் விளங்கிவந்தனர். பல அறப் பணிகளையும் ஆற்றிகெடை நலம் படைத்திருந்தனர். இவர்களின் கொடைச்சிறப்பையும், நடைச்சிறப்பையும், நேர்மையையும் பற்றிப் பலப்பல பாடல்கள் உள்ளன. அவற்றுள் ஒன்று: -

"ஈட்டிய எல்லாம்
இதன் பொருட்டு என்பது
காட்டிய கைவண்மை
காட்டினார்- வேட்டோறும்
காமருதோள் சென்னி
கடல் சூழ் புகார்வணிகர்
தாமரையும் சங்கும் போல்
தந்து"

இங்ஙனம் இவர்களின் சிறந்த வாழ்வு சுமார் ஏழெட்டு நூற்றாண்டுகட்கு மேல் காவிரிப்பூம் பட்டினமாகிய பூம்புகாரில் விளங்கிற்று. அதன் பிறகு, சுமார் கி.பி. 10 ஆம் நூற்றாண்டில் சோழநாட்டை ஆண்ட மன்னனுக்கும் நகரத்தார்கட்கும் விரோதம் ஏற்பட்டுள்ளது. அதற்குக் காரணம் பலவாறாகச் சொல்லப்படுகிறது.

1. இவர்கள் கொடைச் சிறப்பால் ஏற்பட்ட பொறாமை.

2. இவர்கள் தங்கள் நகர மாளிகைக்கு வெள்ளிக் கதவு அமைத்தது.

3. காவிரியாறு பெருக்கெடுத்த பொழுதோ அல்லது கடல் பொங்கி எழுந்த பொழுதோ மன்னன் செய்வதறியாது மயங்கி நிற்க தங்களிடமிருந்த பஞ்சுப் பொதியை அடுக்கி வெள்ளத்தைத் தடுத்த நிலைமையால் தனக்குக் குறைவை ஏற்படுத்திவிட்டதாக மன்னன் கருதி, அதன் காரணமாகக் கொண்ட வெறுப்பு.

4. தெருவில் விளையாடிக் கொண்டிருந்த நகரத்தார் வீட்டுப் பெண் குழந்தையின் அழகில் ஈடுபட்டு உலாவந்த மன்னன் எடுத்து முத்தமிட அச்செயலை நகரத்தார் கண்டித்ததால் மன்னனுக்கு ஏற்பட்ட சினம்.

இப்படியான பல காரணங்களால் அக்கால மன்னனுக்கும் நகரத்தார்க்கும் இடையில் உண்டான மனக்கசப்பு பகை உணர்வாக மாறிவிட்டது. அந்த நிலை நாளுக்கு நாள் வளர்ந்ததே யன்றி குறைந்து ஒரு சுமூக நிலை ஏற்பட வழி பிறக்கவில்லை. அரசனும் கடுமையாக இருந்தான். நகரத்தாரும் தன்மான உணர்வால் பிடிவாதமாக இருந்தனர்.

இச்செய்கை உணர்வாலும் அச்சத்தாலும் மன்னன் தங்களைத் தண்டிக்கக் கூடுமென அஞ்சித் தீக்குளித்தோ அல்லது மன்னனால் தண்டிக்கப்பட்டோ மிகப் பெரும்பாலான நகரத்தார்கள் உயிர்விட்டனர். இஃது எவ்வளவு உண்மை எனத் துணியத் தக்க சான்றுகள் இன்று கிடைக்குமாறில்லை. ஆனால் ஒரு குறிப்பிட்ட தொகையினர் சோழ நாட்டை விட்டு வெளியேறிப் பாண்டிய நாடு சேர்ந்தனர். அப்படி வந்தவர் தொகை ஐந்நூறு என்று துணிய முடிகிறது. நகரத்தார்க்கு "ஐந்நூற்றுவர்" என்ற பெயர் இருப்பதாலும், இவர்கள் வசித்த பகுதி ஐந்நூற்றுவப்பெருந்தெரு என்று கல்வெட்டுக்கள் கூறுவதாலும் இங்ஙனம் முடிவு செய்வது எளிதாகவும் சரியாகவும் இருக்கிறது.

இங்ஙனம் நாடு பெயர்ந்து வந்தவர்கள் யாவரும் நாட்டரசன் கோட்டையில் சிலகாலம் ஒருங்கிருந்து வாழ்ந்தனர். இஃது கி.பி. 10ம் நூற்றாண்டில் என்று கணிக்க முடிகிறது. அக்காலத்தில் பாண்டிய நாட்டை ஆண்டுவந்த வீரபாண்டியன் முதலியோரிடம் வேண்டி ஏழு கோயிலைகளைப் பெற்று அவற்றைத் தத்தம் கோத்திரமாகக் கொண்டு அங்கு குடியேறியும் வழிபட்டும் வந்திருக்கின்றனர். அவையாவன :

1. மாற்றூர் 2. இளையாத்தங்குடி 3. வயிரவன்கோவில் 4. நேமம் 5. இலுப்பைக்குடி 6. சூரக்குடி 7. வேலன்குடி ஆகியவையாகும்.

இரணியூர், பிள்ளையார்பட்டி ஆகிய இரு கோவிலாரும், 'திருவேட்பூருடையார்' எனப் பெயரிய ஒரேபிரிவாக இளையாற்றங்குடியில் விளங்கி வந்திருக்கின்றனர்.

ஆகவே தான் நகரத்தார்களை ஏழகத்தார் என்றும், ஏழுவழியினர் என்றும் வழங்கி வந்திருக்கின்றனர். கல் வெட்டுக்களிலும் ஏழகத்தார் என்று காணப்படுகிறது. இவர்களின் காப்புப்படைக்கு 'ஏழகப்படை' என்ற பெயரும் காணப்படுகிறது. அந்த ஏழகப்படை இருந்த இடம் காரைக்குடியை அடுத்த கழநிவாசலாகும். கழநிவாசலுக்குப் பழைய பெயர் `ஏழகப்பெருந்தெரு' என்பதாகும். வயிரவன் கோவிலாரின் கோத்திரப் பெயர் "ஏழகப்பெருந் தெருவான வீரபாண்டிய புரமுடையார்" என்பதும் இன்றும் அங்குள்ள பெருமாள் கோவிலுக்கு ஏழகப்பெருமாள் விண்ணகரம் என்பதும் குறிப்பிடத்தக்கனவாகும். நகரத்தார்க்குப் படையுண்டா என்று சிலர் ஐயுறலாம் உண்டு ; நிச்சயம் உண்டு நாடு காக்க மன்னர் படைவைத்திருப்பார். வாணிகப் பொருள் காக்க வணிகர்கள் படை வைத்திருப்பார். எனவே தான் தொல்காப்பியம்'.

"இடைஇரு வகையோர்
அல்லது நாடின்
படைவகை பெறார்
என்மனார் புலவர்"

–மரபு - 77

எனக்குறிப்பிடுகிறது. இடை இருவகையோர் என்றால் அத்தணர். அரசர், வணிகர், வேளாளர் என்னும் நால் வகையில், தலையும் கடையும் ஆகிய அந்தணர், வேளாளர் இருவகையையும் நீக்கிவிட்டு, அரசர் வணிகர் ஆகிய இருஇடைவகையார் என்றுதானே கொள்ளவேண்டும்!

ஐந்நூற்றுவர் என்பது நகரத்தார்க்குரிய பெயர் என்பதாலன்றோ மாற்றூர்ப்பெருமான் "ஐந்நூற்றீச்வரர்" என்று பெயர் பெற்று உள்ளார் நானா தேசங்கட்கும் சென்று வாணிகம் செய்பவர்கள் ஆனதால் 'நானாதேசிகன்' என்றும்'தேசி' என்றும் நகர்தார் பெயர் பெறுவர், அதனாலேயே

பிள்ளையார் பட்டிப் பெருமான் தேசி விநாயகப் பிள்ளையார்' என்றும் சூரைக்குடிப் பெருமான் "தேசிகநாதர்" என்றும் பெயர் பெறுவாராயினர்.

சுமார், 12ம் நூற்றாண்டை ஒட்டி திருவேட்பூருடையார் பிரிவினராகிய இரணியூராரும் பிள்ளையார்பட்டியாரும் தம்முள் புள்ளி எண்ணிக்கை அதிகமாக இருப்பதால் இளையாத்தாங்குடிக் கோவிலிருந்து பிரிந்து பாண்டியனிடம் வேண்டிமுறையே இரணியூரையும், பிள்ளையார் பட்டியையும் பெற்று அங்கு குடியேறிகோவில் எடுத்து வழிபட்டு வாழ்ந்து வந்திருக்கின்றனர். இதற்குத் தக்க - அசைக்க முடியாத - சான்றாகப் பிள்ளையார்பட்டிக் கல்வெட்டு விளங்குகிறது காரைக்குடி ஐந்நூற்றுவப் பெருந் தெருவில் உள்ள நகர்த்தார்க்கு விற்று விலைப் பிரமாணம் செய்து கொடுத்த செய்தி குடைவரைக் கோவிலில் உள்ள கல்வெட்டுக்களால் நன்கு புலப்படுகிறது. இஃது சுமார். 12ஆம் நூற்றாண்டில் என்று அறிய முடிகிறது.

நாளாவட்டத்தில் ஒன்பது கோவில் உள்ள ஊர்களில் வசித்த நகரத்தார்கள் வெவ்வேறு ஊர்களில் சென்று வசிக்கலாயினர். அப்படிக் குடியேறிய ஊர்கள் தொண்ணூற்று ஆறு ஆகும் எனவே தொண்ணூற்றாரூர் நகரத்தார் எனப் பிற்காலத்தில் பெயர்பெற்றனர்.

அந்தத் தொண்ணூற்றாரூரில், வாரிவயல், பொய்யளூர், சிவரகோட்டை,ஆலங்குடி மேலமாகாணம், கூத்தளூர், ஆர்க்காடு, வித்ராவயல், சித்தாட்டிவயல் செய்வாசல், இளையாத்தங்குடி, வயிரவம்பட்டி நேமம், இரணியூர், குறட்டி, தட்டட்டி, கம்பனூர் இலுப்பைக்குடி, மாத்தூர், கீரணிப்பட்டி, சேர்ந்தணி, எழுவன் கோட்டை கீழக்கோட்டை ஆகிய ஊர்களில் தற்பொழுது நகரத்தார்கள் வசிக்கவில்லை.

நாட்டரசன் கோட்டை சேர்ந்து ஊரமைத்துக் குடியேறிய நகரத்தார்கள் காவிரிப்பூம்பட்டினத்தைப் போலவே நகர நிர்மாணம் செய்திருக்கின்றனர். ஊரின் நடுவில் பெருஞ் சதுக்கம் அமைத்து அதில் பல திருக்கோவில்களையும் எடுத்து அதைச் சுற்றி வீடுகள் கட்டிங்கொண்டிருப்பதை இன்றும் காணலாம். காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து வரும் போது தங்களுடன் உவச்சர்களையும் அழைத்து வந்து கண்ணகித் தாய்க்குப் பீடம் அமைத்துக் கோவில் எடுத்து வழிபட்டு வந்திருக்கின்றனர். அதுவே கண்ணாத்தாள் - அல்லது - கண்ணுடைய அம்மன் கோவிலாக இன்று விளங்குவது.

உவச்சர்கள் பலர் இங்கிருப்பதாலும், அவர்களில் சிலர் தம் - உறவினர்களாகவோ நண்பர்களாகவோ இருந்ததாலுமே தான் கவிச்சக்கரவர்த்தி நாட்டரசன் கோட்டைக்கு வந்து தங்கியிருக்க வேண்டும் அப்படித் தங்கியிருந்த காலத்தில் மரணம் எய்தியதால் கம்பனின் பூத உடலுக்கு பள்ளிபடைக் கோவில் (சமாதி) நாட்டரசன் கோட்டையில் ஏற்பட்டிருக்கிறது. அதையும் நம் நகரத்தார்கள் குடும்பமே பரிபாலித்து வருவது குறிப்பிடத்தக்கது.

காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து வந்தவர்களில் நம்மவர்கள் இடையில் புலால் உணவு கொண்டதாலோ அல்லது வேறு காரணத்தாலோ தனித்து விடப்பெற்றனர். மற்றையோர் மதுரை வழியாக மேலும் தெற்கு நோக்கிச் சென்றனர் அவர்களில் அரியூராரும் இங்ஙனமே இடையில் விடப் பெற்றனர் அவர்கள் பிரான்மலையைச் சுற்றிய ஊர்களில் குடியேறிப் பிரான்மலைக் கொடுங்குன்றீசரைக் குல தெய்வமாகக் கொண்டு வாழ்ந்து வருவாரா்யினர்.

இங்ஙனமே சுந்தரர் என்ற பிரிவாரும் மதுரைக்குப் பக்கத்தில் சிறுகுடி முதலிய கிராமங்களில் குடியேறி வாழ்வாராயினர்.

எஞ்சிய நகரத்தார்கள் நாகர்கோவில் கோட்டாறுப் பகுதியில் குடியேறினர் காவிரிப் பூம்பட்டினத்திலிருந்து கொண்டுவந்த மரகதப் பிள்ளையாரைக் கோட்டாற்றில் பிரதிஷ்டை செய்து வழிபடுவாராயினர். அக்கோவில் உள்ளதெரு செட்டித்தெரு எனப்படுகிறது. அங்குள்ள பிள்ளையார்பெயர் 'தேசிவிநாயகர்' என்பதாகும். இன்றும் அக்கோவில் மிகச்சிறப்பாக விளங்கி வருவுதைக் காணலாம்.

பாண்டி நாட்டிற்கு வந்த நம்மவர்கள் தொழில் நிமித்தமாகப்பல நாடுகட்கும், கடல்கடந்தும் சென்று வந்தனர். தலைப்பில் நாகை, திருநெல்வேலி, சென்னை, மதுரை, முதலான தமிழ்நாட்டுப் பகுதிகட்கும் பின்னர் வங்காளம், கஞ்சம் முதலிய வெளி மாநிலங்கட்கும், பிறகு யாழ்ப்பாணம் கொழும்பு முதலிய பகுதிகட்கும் அதன்பிறகு பர்மா, மலேசியா, சிங்கப்பூர், செய்கோன் மைடான் முதலான இடங்கட்கும் சென்று தொழில் செய்து வந்தனர்.

முதலில் பண்டங்கள் வாங்கிவிற்பதையே தொழிலாகக் கொண்டிருந்தனர். பின்னர் நாளாவட்டத்தில் பல்வேறு காரணங்களால், பணம் கொடுக்கல் வாங்கல் (Banking) தொழில் முறையில் ஈடுபட்டனர். ஆனாலும் பழைய முறைப்படியே கொண்டுவிற்கப் போய்வருவதாகவே கூறி வந்தனர்.

நகரத்தார்களின் தொழில் முறையையும் கணக்கெழுதும் முறையையும் நாணயத்தையும் பற்றிப் பல்வேறு நீதி மன்றத் தீர்ப்புக்கள் மட்டுமின்றி ஆங்கிலேய அரசால் நியமிக்கப்பட்ட 'பாங்கிங் எங்க்வோயரிக் கமிஷன்' எனப்பெயரிய விசாரணை குழுவும் மிகச் சிறப்பாகப் பாராட்டியிருக்கக் காணலாம்.

காணிகாணியாய்த் தேடிக் கோடி கோடியாகத் தருமம் செய்த சமூகம் - என்று நகரத்தார் சமூகத்தை நல்லோர் எல்லாம் பாராட்டுவர். மூவேந்தர் ஆட்சி முடிந்து பிறமதத்தவர் ஆட்சி ஏற்பட்ட பின்னர் நாட்டுக்கோட்டை நகர்த்தார்கள் தான் ஏராளமான ஆலயங்களைத் திருப்பணி செய்து ஆலயங்கள் அழியாமற் காத்தனர். ஆலயங்கள் மட்டுமின்றி பாடசாலைகள், பசுமடங்கள், சத்திரங்கள், மருத்துவசாலைகள் முதலியனவும் தோற்றுவித்து நலம் புரிந்து வந்தனர்.

தற்பொழுது நகரத்தார்களில் பலர் பள்ளிக்கூடம், கல்லூரி, மருத்துவமனை, பல்கலைக்கழகம் போன்ற காலத்திற்கேற்ற அறங்களிலும் ஈடுபட்டுப் பயன் சுரந்து வருகின்றனர்.

மக்கள் தொகையால் சிறிய சமூகமே ஆனாலும் அறப்பணிகளால் உலகறிந்த ஒரு சமூகமாகத் திகழ்கின்றது. நகரத்தார் சமூகம், காசி முதல் ராமேஸ்வரம் வரை இவர்களின் அறப்பணி இல்லாத இடமே இல்லை என்னும் படி எல்லா இடங்களிலும் இவர்களின் நற்றொண்டு நாளும் மலர்ந்து மணம் பரப்பி வருகிறது.

வெளியிடங்களில் மட்டுமின்றித் தாங்கள் நிரந்தரமாக வசிக்கும் ஊர்களிலும் சிவன் கோவில் எடுத்து அருமையாகப் புரந்து வருவது கண்கூடு. அப்படி அமைக்கப்படும் கோவில்கள் யாவும் மதுரை மரபை யொட்டி 'மீனாட்சி சுந்தரேஸ்வரர்' கோவில்களாகவே இருக்கக்காணலாம். அங்ஙனம் அமைந்துள்ள கோயில்களில் ஒன்றான கோட்டையூர் நகரச் சிவன்கோவில் எல்லா வகையிலும் சிறப்பான ஒன்று. அவ்வூர் நகர்த்தார்கள் மிக்க சிரத்தையுடனும் இக்கோவில் நித்ய, நைமித்திக வழிபாடுகளை ஆற்றிவருகின்றனர்.

நாளது தை மீ 13உ (27.1.1980) ஏராளமான பொருட்செலவில் கோவிலைப் புதுப்பித்துக் குட நீராட்டுச் செய்யப்பெற்றது. நகரத்தார் யாவரும் ஒரே ஆர்வத்துடன் ஒன்று பட்டு மிக்க சிறப்புடன் இத் திருப்பணியில் ஈடுபட்டுச் செயலாற்றியதை எத்துணை பாராட்டினும் தகும்.

வாழ்க நகரத்தார் சமூகம்!

வளர்க அவர்தம் அறப்பணிகள்!

நகரத்தார் வாழ்த்து

சீனா பர்மா சிங்கபுரம்
செல்வம் பொழியு மிலங்கை முதல்,
நானா திசையும் தமிழ்க் கொடியை,
நாட்டிப் பரத நாட்டினிலே
ஆனாப் பொருளும் புகழும் நல்
அறமும் வளர்க்கும் தனவணிகர்;
தேனார் கொன்றைச் சிவனருளால்,
சிறந்து தினமும் வாழ்கவே.

—கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை

நகரக் கோயில்களும் இறைவன் இறைவி – பெயர்களும்

	இறைவன் பெயர்	இறைவி பெயர்
இளையாற்றக்குடி கோவில்	கைலாசநாதர்	நித்தியகல்யாணி
மாற்றூர்க் கோவில்	ஐந்நூற்றீசர்	பெரியநாயகி
வைரவன் கோவில்	வளரொளிநாதர்	வடிவுடையம்மை
இரணிக் கோவில்	ஆட்கொண்ட நாதர்	சிவபுரந்தேவி
பிள்ளையார்பட்டிக் கோவில்	கற்பகவினாயகர்	
	திருவீசர்	- சிவ்காமவல்லி
	மருதீசர்	- வாடாமலர்மங்கை
நேமங் கோவில்	ஜெயங்கொண்ட சோழீசர்	சவுந்தர நாயகி
இலுப்பைக்குடிக் கோவில்	தான்றோன்றியீசர்	சவுந்தர நாயகி
சூரைக்குடிக் கோவில்	தேசிகநாதர்	ஆவுடையநாயகி
வேலங்குடிக் கோவில்	கண்டீசுவரர்	காமாட்சியம்மை

பெரும்பற்றப்புலியூர் நம்பி திருவிளையாடற் புராணத்தில் இறைவன் இயல்பு

டாக்டர் சு. வேங்கடராமன்,
பேராசிரியர் & துறைத்தலைவர்
தமிழியற்புலம்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை - 625 021.

அறிமுகம்

கி.பி. 13 ஆம் நூற்றாண்டில் தோன்றிய பெரும்பற்றப் புலியூர் நம்பி (வேம்பத்தூரார்) இயற்றிய திருவாலவாயுடையார் திருவிளையாடல் புராணம் தமிழில் முதலில் தோன்றிய தலபுராணம். தலபுராணம் என்னும் இலக்கியவகை தமிழில் கவிதையிலும் உரைநடையிலும் பல்கிப் பெருகியது. வடமொழியில் இங்கிருந்து சென்று ஸ்தலமகாத்மியம் (தலமான்மியம்) என்று பெயர் பெற்றது. ஒரு தலத்து இறைவன் மீது பாடப்படுவது தலபுராணம். மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்று சிறப்புக்களும் உடையது என்று தலபுராணம் சிறப்பித்துப் பாடும். இந்திரன் உள்ளிட்ட தேவர்களும் அகத்தியர் உள்ளிட்ட முனிவர்களும் விலங்குகளும் வழிபட்டு வீடுபெற்றனர் என்று உள்ள முருகும் வகையில் இது பாடும். நாட்டுப்புறக் கதைகளை எடுத்துக் கொண்டு, நைமிசாரண்யவனத்தில் சனகாதிமுனிவர் கேட்க, சூதபுராணிகர் கூறியதை அப்படியே தான் பாடுவதாகப் புலவன் கூறும் மரபு தலபுராணத்தில் உண்டு. தலபுராணம் ஒவ்வொன்றும் தன்னைவில் 'கடையருக்கும் கதிமோட்சம்' என்பதைக் கருவாகக் கொண்டது.

தலபுராணம் விளக்கம்

தமிழில் தலபுராணம் பெரும்பாலும் தலமகிமை கூறுவதாகவும் சிறுபான்மை நதிகளின் பெருமை கூறுவதாகவும் (சான்று: காவேரிப்புராணம்) அமைந்தன. தலபுராண இலக்கியம் தலச்சிறப்பை இதிகாச, புராண, வரலாற்று அடிப்படைகளுடன் நாட்டுப்புறக்கதைகள், தொன்மக் கதைகள், (mythical stories) ஆகியவற்றையும் சேர்த்து விளக்கிநிற்கும். மிக எளிய மக்களுக்கும், புரியும் படி கவிதையில் அமைந்து, கோயிற்சிறப்பு, மூர்த்தி, தலம், தீர்த்தம், சிறப்புகள், கோயில் விழாக்கள், ஊர்ப்பெயர் பெருமைகள் ஆகியவற்றை அவை கூறும். 'கோயிலில்லா ஊரில் குடியிருக்கவேண்டாம்' என்ற பழமொழிக்கு ஏற்ப, ஒவ்வோர் ஊருக்கும் தலபுராணம் தோன்றியது. கோயில், கோயிற்கலை, வழிபாடு, விழா போன்றவற்றின் களஞ்சியம் தலபுராணம்.

முதனூல்

திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணம் தமிழில் தோன்றிய முதல் தலபுராணம். இது நம்பி திருவிளையாடல், பழைய திருவிளையாடல், வேம்பத்தூரார் திருவிளையாடல் எனவும் வழங்கப்பெறும். 1753 விருத்தப் பாக்களால் ஆன இந்நூல் டாக்டர் உ.வே. சாமிநாதையர் அவர்களால் பதிப்பிக்கப்பெற்றது. பின்னர் 17 ஆம் நூற்றாண்டில் தோன்றிய பரஞ்சோதிமுனிவரின் திருவிளையாடல் புராணம், கடம்பவனபுராணம், சுந்தரபாண்டியம், வடமொழியில் தோன்றிய ஹாலாஸ்ய மகாத்மியம் ஆகிய மதுரைத் தலபுராண நூற்களுக்கு முதனூலாக அமைவது பெரும்பற்றப்புலியூர் நம்பியின் திருவிளையாடல் புராணமே ஆகும். மேலும், கி.பி. 15 ஆம் நூற்றாண்டில் கடவுள் மாமுனிவர் பாடிய திருவாதவூரடிகள் புராணத்திற்கும் இது முதனூல் ஆகும். சுந்தரரின் திருத்தொண்டர் தொகை, நம்பியாண்டார் நம்பியின் திருத்தொண்டர் திருவந்தாதி ஆகியவற்றில் இடம்பெறாததால் சேக்கிழாரும் பெரியபுராணத்துள் மணிவாசகர் வரலாற்றைப் பாடவில்லை. மாணிக்கவாசகர் வரலாற்றை முதன்முதலாக வேம்பத்தூரார் திருவிளையாடல் புராணமே பாடுகின்றது. (ஞானோபதேசஞ் செய்தது, நரி குதிரையானது குதிரை நரியானது, மண்சுமந்தது ஆகிய நான்கு திருவிளையாடல்களில் விரிவாகப் பாடுகிறது.) மதுரைத் தலபுராண நூற்களான பரஞ்சோதி திருவிளையாடல், கடம்பவனபுராணம், சுந்தரபாண்டியம், திருவாதவூரடிகள் புராணம், திருஉத்தரகோச மங்கைப்புராணம், திருப்பெருந்துறைப் புராணம் ஆகிய பல்வேறு நூற்களுக்கும் மாணிக்க வாசகர் வரலாறு கூறுவதில் இது முதனூலாக அமைகிறது. இத்தகு சிறப்புடைய நம்பி திருவிளையாடற்புராணம் கூறும் இறைவன் இயல்பைக் காண்பது இக்கட்டுரையின் நோக்கம்.

தேவாரம், திருவாசகம், கல்லாடம் ஆகியவற்றில் திருவிளையாடல் கதைகள் இடம்பெற்றபோதிலும் எட்டெட்டு ஆடல்களை (64 திருவிளையாடல்களை) முதல் முதலாகக் கூறும் நூல் இது. கல்லாடனாரால் (கி.பி. 11 ஆம் நூற்றாண்டு) இயற்றப்பெற்ற கல்லாடம் திருவிளையாடல் சிலவற்றைக் (முப்பது திருவிளையாடல்கள்) கூறுகிறது. அந்த நூலில் கூடற் பதிவரும் ஆடற் பரியோன் எட்டெட் டியற்றிய கட்டமர் சடையோன்" என்று வந்தபோதிலும், சொக்கனின் அறுபத்துநான்கு திருவிளையாடல்களையும் முதன்முதலில் பெரும்பற்றப்புலியூர் நம்பியே, "சுருதிநான் மறைதொழுஞ் சொக்க நாயகன் திருவிளையாடல் எட்டெட்டுஞ் செப்பிட" என்று பாடுகிறார். பின்பு தோன்றிய திருவாதவூரடிகள் புராணம், திருநாகைக்காரோண புராணம் ஆகியவை அறுபத்து நான்கு திருவிளையாடல்கள் பற்றிப்பேசும்.

தோற்றக் காரணம்

தமிழகத்தில் சோழப்பேரரசின் வீழ்ச்சிக்குப் பிறகு, பிற்காலப் பாண்டியர் எழுச்சி ஏற் பட்டு, அதுவும் கி.பி. 1311 ஆம் ஆண்டு அளவில் மாறவர்மன் குலசேகர பாண்டியனுடன் தடைப்படுகிறது. தமிழகம் அடிக்கடி போர்களை உள்நாட்டு அளவிலும், 13 ஆம் நூற்றாண்டு தொடக்கம் முதல் வேற்றுமொழி, கலாச்சாரம், பண்பாடு, சமய அளவிலான இசுலாமியராலும்-வெளித்தாக்குதல் அளவிலும்-கண்டுவந்தது. கி.பி. 1310-11 ஆம் ஆண்டு அளவில் மாலிக்காயூர்

ராமேசுவரம் வரை சென்று தமிழக ஆலயப் பெருநிதியங்களைக் கொள்ளையிட்டுச் சென்றான். மதுரையும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளும் கி.பி. 1336 முதல் கி.பி. 1377 முடிய சுல்தான்கள் ஆட்சியில் இருந்தது. மதுரைக் கோயிலில் வழிபாடுகள் யாவும் நின்றுபோயின. இச்சூழலில் மதுரையின் பழம்பெருமை தலச்சிறப்பை ஏற்றிப்போற்றும் நோக்கம் அடித்தளமானது.

பிற்காலப் பாண்டியர்களின் எழுச்சி ஏற்பட்டுப் பின், சுந்தரபாண்டியன், வீரபாண்டியன் இருவருக்குள்ளும் ஏற்பட்ட உரிமைப் போரில் பாண்டியராட்சி - தமிழ் மன்னராட்சி - வீழ்ந்தது. இதன் விளைவாக, மற்றொரு சமயத்தைச் சார்ந்த டில்லி சுல்தான்களின் வருகை ஏற்பட்டது. எனவே, பாண்டிய மன்னர்களுக்கு அவர்தம் பரம்பரைப் பெருமையை - "தென்னன் சிவனே ஆகும் சிவலோக மதுரை ஆகும்" என்பதை - இறைவிதடாதகையும் இறைவன் சொக்கனும் மன்னராயிருந்து ஆண்ட பழம்பெருமையை எடுத்துரைக்க வேண்டிய தேவை இருந்தது.

புறச்சமய வருகை - கி.பி. 13 ஆம் நூற்றாண்டு அளவில் இசுலாம் சமயமும் கி.பி. 16 ஆம் நூற்றாண்டு அளவில் கிறித்தவ சமயமும் - தமிழகத்தில் நிகழ்ந்தது. இதனால் வைதிக சமயவாதிகள் தத்தம் சமயப்பெருமைகளை எடுத்துக் கூற, தலபுராணம் படைக்க முற்பட் டனர். கி.பி. 13 ஆம் நூற்றாண்டில் தோன்றிய 'நம்பி திருவிளையாடலில் சமணர்களுடன் வாதுகளில் வென்று, திருஞானசம்பந்தர் சைவ சமயம் நிலைநாட்டிய வரலாறு விரிவாகப் (149 விருத்தங்களால்) பேசப்படுவது இதன் விளைவுதான். ச்மண சமயம் வீழவிருப்பதை முற்குறிப்பாகத் தீநிமித்தங்கள் வழியாகக் காட்டும் வேம்பத்தூரார், மறைபொருளாக - குறிப்புப் பொருளாக - இசுலாமியத்தின் எதிராகச் சைவ எழுச்சியைக் குறிப்பிடுகிறார். "பிண்டிவே ரற்று வீழப் பிரம்புநேர் பிளப்பக் கையிற் குண்டிகை யுடையப் பாய்முக் குடையுகக் கழுவாயேறக் கண்டனம் கொடுங்கனாத் தோள் கண் இடந்துடிக்கும் ஊர்வேம் பண்டிகழ் கூகை யாந்தை பாழிமேற் குழறுங் காணே" என்பது இதனைக் காட்டும்.

தமிழகத்தில் பிற்காலப் பாண்டியரின் வீழ்ச்சியைத் தொடர்ந்து சுல்தான்கள் ஆட்சி நடைபெற்றது. தொடர்ந்து போர்களையே கண்டு வந்தனர் தமிழர். மக்களின் அன்றாட வாழ்க்கை சீர்குலைந்து பஞ்சம் பட்டினி காணப்பட மக்கள் ஊர்களை விட்டுக் குடிபெயர முற்பட்டனர். இதனால், மக்களுக்கு அவர்தம் ஊர்ப்பெருமைகளை எடுத்துக்கூறும் தேவை இருந்தது. பஞ்சமும் பட்டினியும் வாட்டும் வாழ்வில் மக்களுக்கு நம்பிக்கை ஊட்டும் பணியைத் தலபுராணம் செய்து வந்தது. இசுலாமியர் படையெடுப்பும் மதுரை சுல்தான்களின் ஆட்சியும் ஒன்றுசேர, வைதிக சமயங்கள் வலுவிழக்க, மெல்ல மெல்ல இசுலாமிய சமயம் ஆட்சி மதமாக ஆனது. மதமாற்றங்கள் நிகழத் தலைப்பட்டன. ஆலயங்களில் விழாக்களும் வழிபாடுகளும் தடைப்பட்டன. இச்சூழலில் தான் வேம்பத்தூரார் திருவிளையாடல் புராணமும் கோயிற்புராணமும் (கி.பி. 14 ஆம் நூற்றாண்டு) தோன்றின. கி.பி. 1542-1554 அளவில் நெல்லைக் கடலோரப் பகுதிகளிலும், 1572-1595 அளவில் மதுரையிலும் 1586 க்குள் நாகப்பட்டினம் பகுதிகளிலும் கிறித்தவ சமயம் பரப்பப்பட்டு, இந்துக்கள் மிகுதியாக மதமாற்றத்திற்கு ஆளாகினர். கி.பி. 16 ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதிகளில் கிறித்தவ மதமாற்றப் பணி பெருமளவில் நடைபெற்றது.

இதற்குத் தமிழக அரசில் காணப்பட்ட ஆதிக்கப்போட்டி முதன்மைக் காரணமாக அமைந்தது. இக் காலத்தில் தமிழில் மிகுதியான தலபுராணங்கள் தோன்றின என்பர்.

வேம்பத்தூரார் திருவிளையாடற் புராணத்தில் அனல்வாதம், புனல் வாதங்களில் சமணர்களை வென்ற ஞானசம்பந்தர், அவர்களைச் சைவத்திற்கு மாற்ற முயல்கிறார். "பூசும் இனிய நீற்றைப் போற்றுமின், ஈசன்தாளை மாற்ற நீரும் நாமும் வாழலாங் கூடியென்றார்" ஆனால் தோற்ற சமணர், "முன்னையூழ் வினையால் வென்ற முனிவகேள் மடிவதல்லாற் சொன்னவெஞ் சாம்பல் சீசீ தொடுவமோ" என்று கூற, அதுகண்டு, தொண்டர்களும் நின்ற சீர் நெடுமாறனும் சிறந்திட சமணர்கள் கழுவேற்றப்பட்டனர். ("பொய்செய் பாதக் குழுவெலாந் தொலைந்திமைப் பொழுதில் வெய்ய நீள்கழுவேறினர் மெலிந்துயிர் பதைப்ப"). பழைய வரலாற்று செய்தியே ஆனபோதிலும், மாற்றுச் சமயத்தாரையும் அன்பால் தம் சமயத்திற்கு ஈர்த்து சிவசாதனப் பெருமகளைக் கூறி, சிவபரத்துவம் நிலைநாட்ட முயலும் பெரும் பற்றப்புலியூர் நம்பியின் உள்ளம் இத்திருவிளையாடற்புராணம் முழுவதிலும் புலனாகிறது. சமணர்களைக் குறிப்பிடும் பொழுதெல்லாம், குண்டர், கலகர், துட்டர் என்று கூறுகிறார். "கலக வெஞ்சமண் கையரைக் களைந்திடாது ஒழியின் இலகு சைவசித்தாந்தமுன்னிறந்திடும் இறந்தால் அலகில் வேதமும் வேள்வியும் அழிந்திடும் அழிந்தால் உலக வேந்தனும் மாரியும் உலகம் கெடுமால்" என்று வலியுறுத்துகிறார். இந்தத் திருவிளையாடல் புராணம் முழுவதிலும் சிவபரத்துவத்தைப் பாடுகிறார்.

இறை இயல்பு

இறை இயல்பைப் பதிமுது நிலையாகப் பெரும்பற்றப்புலியூரார் காட்டுகிறார். இறைவன் பெரியதிற் பெரியதாயும் சிறியதிற் சிறியதாயும் பேரருள் திறமிக்கவனாகவும் உயிர்களில் அறிவுக்கு அப்பாற்பட்டவனாவும் இருக்கிறான்.

'இலங்கெறும் மீற தாக நயந்துல கனைத்தும் தந்த நான்முகனாதியாக உயர்ந்தபல் பிறப்புத் தோற்றம் உயிர்க்குயிர் ஆய்நம் ஈசன் சயம் பெற நிற்றல் கண்டீர்'.

"அயன் முதல் ஆகத் துன்னித்
தப்பற வெறும்பீ றாகத் தனுத்தொறு நிற்பம் யாமே"

என்று வருமிடங்களில் எறும்பு முதலாக உலகைப் படைக்கும் பிரமன் ஈறாக அனைத்து உயிர்களிலும் கலந்து - கரந்து - உயிர்க்குயிராகி நிற்கும் இறை இயல்பு காட்டப்படுகிறது. அப்படிபட்ட இறைவன் ஆற்றல் மிக்கவனாக - 'மெய்ப்புழுப் பிரமவாகப் பிரமன் மெய்ப் புழுவ தாக ஒப்புடன் ஆக்க' வல்லவனாக - இருக்கிறான். அவன் தன் ஆற்றல் மிக்க நிலையை அறிவால் அறிய முடியாது. வேதங்களும் அவனை அறியவில்லை. தேவர்களாலும் - திருமால், வேதஞ்செய் பிரமன் உள்ளிட்டவர்களாலும் - அவன் அறியப்படாதவன்.

இறைவனுடைய இவ்வியல்புகளைப் பெரும்பற்றப்புலியூர் நம்பி பற்பல இடங்களில் வியந்து பாராட்டுகிறார். 'பண்டை நான் மறைக்கும் எட்டாம் பராபரன்" "நான் மறைகள் சொல்லரியான் சொல்லினல்லான் மற்றொருவர் சொல்வாரில்' என்று மறைகளால் அறியப்படாத பராபரநிலையைக் காட்டுகின்றார். "வருந்திநான் முகன்மால் வளர்ந்தழற் பிழம்பாகி நின்றான்", 'மாலயன் அறியா வடிவம்' 'வானவர் துதிக்கு மேலோன்', 'இந்திரன் அயன்மால் ஆதியாவருந் தீண்டொணாத சுந்தர உருவம்' 'மலரயன் நாணி முன்னர் வரும்விதி மாற்றல் கண்டு சிலைமலை வில்லான் அல்லது யார்வல்லார் என்று சென்று தலையினால் வணங்கி' 'பாதார விந்தஞ் சோதி நீண்முடி தேடிப் பண்பார்' வேதாவும் மாலுங் காணா விண்ணவன்' என்று மால், பிரமன், இந்திரன் உள்ளிட்ட தேவர்களால் அறியப்படாது நிற்கும் அவன் இயல்பும், 'நான்' என்னும் அகந்தை கொண்டு அவன் வடிவைத் தேட முற்பட்டு மாலும் நான்முகனும் தோற்றுப் போக இறைவன் சோதிப்பிழம்பாக நிற்கும் இயல்பும், இறைவனுக்கு அவன் ஆற்றலுக்கு - உரிய வல்லமையைப் பிரமன் உணர்ந்து வணங்கும் பாங்கு ஆகியன காட்டப்படுகின்றன.

இறைவன், கருவி கரணங்களால் அறியப்படாதவன். மனம், வாக்கு இவைகளால் எட்டப்படாதவன். இதனை வேம்பத்தூரார், 'வாய்மனத்துக்கு மெட்டான்' 'ஒதரு மனத்தால் வாக்கால் உணரொணான்' என்று காட்டுகிறார். இப்படிப்பட்ட இறைவன் 'ஆதிநாதன்' அறிவன்', அறிபவன் எங்குமுள்ளான்', 'முழு துணர்ந்தோன்','எங்கும் உள்ள இன்னெறிச் சொக்கன் தானே அறிகுவன் அடியவர் தன்மை தின்மை அறிபவன்', 'கருணைச் சொக்கன் ஏயவுரை யாவும் உணர்வான்' என்று வரும் இடங்களில் பேறறிவினனாக, தனக்கு மேல் ஒருவன் இல்லாத தனிப்பெரும் ஞானநாயகனாக, அறிவித்தல் இன்றித் தானே அறிபவனாக இருக்கும் பரத்துவ நிலை காட்டப்படுகிறது.

இவ்வாறு மேலானவன் - எல்லா உயிர்களிலும் கலந்து கரந்தும் நிற்கும் இறைவன் - உயிர்களின் மாட்டுக் கொண்ட பேரருளின் காரணமாக அருவம், உருவம், அருவுருவம் ஆகிய மூவகைத் திருமேனி தாங்கி வருகிறான். 'அருவ மெய்னின் ஆலவாய் நாயகன் கருவி முன்னமோர் காலங் கருணையின் ..... பொருளில் சித்த உருவம் புனைந்தனன் எனவும் அடியார்களுக்காகப் பற்பல வேடங்கொண்டு வருகிறான் எனவும் வேம்பத்தூரார் காட்டுகிறார். கல்யாணசுந்தரராக, தட்சிணாமூர்த்தியாக, ஆடல்வல்லானாக, சித்தராக உமையொருபாகனாக, இடபாருடர்ாக அவன் உருவத் திருமேனி தாங்கி வருகிறான்.

'திருந்திய சிகையு நூலுஞ் சென்னியிற்றுளங்க வானுள் விரிந்ததாரகைக் கணத்துள் விளங்குதன் மதிய மென்னப் பரிந்துமாணவர்கள் சூழப் பத்தனார் வரவு பார்த்துப் பெருந்துறைக் குருந்த நீழ விருந்தனர் பெரிய வாசான்' என்பது மணிவாசகரை ஆட்கொண்ட தட்சிணாமூர்த்தி வடிவம் பற்பல இடங்களில் அருவமாக இறைவனைக் காட்டும் ஆசிரியர் அருவுருவாகவும் லிங்க வடிவானவாகவும் காட்டுகிறார். உவமையில்லா இருக்கறை சிவலிங்கத்தை யிம்மையே தருவா வென்றே உரைத்தவா கமத்திற் பூசித் தருளினன் உலகங் காண' என்பதால் ஈசன்

சுந்தரபாண்டியனாக வந்தபோது பூசித்த அருவுருவடிவை - இம்மையில் நன்மை தரும் சிவலிங்கத்தை வேம்பத்தூரார் காட்டுகிறார்.

உயிர்களிடம் கொண்ட பெருங்கருணையால் அவன் பற்பல வடிவம் பூண்டு வருவதை இப்புராண ஆசிரியர் விதந்து பாடுகிறார். உயிர்களை ஆட்கொண்டு அவைதம் பாசங்களை நீக்க அவன், தன் தேவியுடன் வருகிறான். அவளும் அவனும் விட்டு நீங்காதிருப்பதை ஆசிரியர் பற்பல விடங்களில் உரைக்கின்றார். 'வெந்துயரமும் ஒழித்து . . . ஏவலார் குழலி தன்னொடு மறைத்தான் அடியவர்க் கெளியவெம் பெருமான்' 'சிற்புட்ப கேசியென்று குளிர்ந்தமாறைகள் நான்கும் கூப்பிடு கின்ற வாறு' என்றும் காட்டுகிறார். மேலும், சொல்லும் பொருளுமாக உமையும் ஈசனும் உள்ளனர் என்பதை, 'மன்னிய சொல்லுன் மாது மாசறு பொருள் நீ' உண்மை என்னநின்றரற்றும் வேதம்' 'நின்னையும் நின்னை நீங்கா மின்னையும்' என்ற அடிகளில் காட்டுகிறார்.

அறப்பெரியவனான ஈசன், உயிர்களை ஆட்கொள்ளப் பற்பல வடிவங் கொண்டு வருகிறான். இறைவனின் இப்பண்பே இத்தலபுராணம் முழுவதிலும் பேசப்படுகிறது. 'முன்புரந்தரனை மாலை யடிமையா வுடையாய் முற்றும் அன்பிலா வடிய னேனுக் கடிமையென் றுரைப்ப தேநிந் மென்பசுங் கரஞ்சி வப்ப விறகினை வெட்டிக் கட்டித் துன்புறச் சுமப்ப தேயென் றழுதுகை தொழுது சொன்னான்' என்ற அடிகள் காட்டும். இத்திருவிளையாடற் புராணம் முழுவதிலும் ஈசன், அடியவர்க்கெளிய சொக்கன், அடியவர்க் கெளியவன், அடியவர்க்கெளிய சுந்தரன், அடியலர் திறத்து நல்லவன், அற்றவர்க்கற்ற சிவன், அன்பர் தம்பிழை பொறுப்பான், எளியவர்க்கெளிய சொக்கன், கருணை மேனிப் புண்ணியன் நல்லடியார்க்கு நல்லான் என்று பற்பல திருநாமங்களுடன் காட்டப்பெறுகிறான். ஒவ்வொரு விளையாட்டும் அவனுடைய விண் சுமந்த கீர்த்தியை - கருணைத்திறத்தை - காட்டுகிறது."

'அருளுடையார் சொக்கனைப் போலாரு ளரிங்கு', 'விழுமிய பேரருட் சொக்கன்','தென்னவன் வைகை யாற்றிற் கடிபட மண்சுமந்தான் அவன்திரு வருளுக் குண்டோ ....' 'கருணைச் சொக்கன் ஏயவுரை யாவும் உணர்வான்' 'மற்றொரு தெய்வ மண்ணின் மதுரைநா யகன் போலில்லை முற்றிய கருணை கூர்ந்து முத்தியை அளிக்க வல்லார்' என்பவற்றால் இதனை அறியலாம்.

உயிர்களின் மலங்களை நீக்கி ஈசன் முத்தி அளிக்கிறான். அருட்கடலே குணக்குன்றே... உத்தமனே முத்திதரும் ஆதி முனி வித்தகனே' 'முதிரும் வெம் பிறவிப் பாச மறுத்தவர் மூர்த்தி நாதன்' என்பவற்றால் இதனை அறியலாம். உயிர்களின் பாசத்தை நீக்கி, முத்திதரும் அவன் ஞானாசிரியனாக வந்து ஆட்கொள்வதை 'காசினான் மறைமு ழங்கக் கருணையிற் சிறந்தி ருந்த தேசிகே சனை' என்ற அடிகளில் காட்டுகிறார். எல்லாவற்றிலும் பெரியவனாக ஈசன், புழுதிபடைத்த திருமேனி பொலிய வலிய நடை நடந்து உயிர்களை ஆட்கொள்கிறான்.

அவன் உயிர்களிடம் வைத்த கருணையால் ஐந்தொழில் இயற்றுவதை விளையாட்டாகச் செய்கிறான். 'ஒருவிளையாட்டில் உண்மை ஒருவரால் உணரா நாளும் பெருவிளையாட்டு ஐந்தாடும் பிஞ்ஞகன் மதுரை மன்னன் அருள் விளையாட்டி னோங்கி' என்பதால் இதனை அறியலாம். அவனுடைய பரந்து நிற்கும் நிலை, கலந்து நிற்கும் நிலை ஆகியன பரக்கப் பேசப்படுகின்றன. ஈசனுடைய எண்வகை வீரச்செயல்கள், அவனுடைய பல்வேறு ஆடல்கள் ஆகியன வியந்து போற்றப்படுகின்றன.

கருணையே வடிவான ஈசன் உயிர்களை ஆட்கொண்டு முத்தி அளிக்கிறான். உயர்ந்த சிவலோகம் அளிக்கிறான். இதனை - அவன் மண் சுமந்து அடிபட்டுப் புண் சுமந்த வரலாற்றைப் படிப்பவர் கேட்பவர் பெறும் பேறாக - 'சுந்தர வைதானங்கள் சொல்லுவோர் நினைப்போர் கேட்போர் சந்தக முனிவர் வானோர் சாரணர் சித்தர் ஏத்த முந்தொளி விமானத் தெய்தி மூவுல கத்தினொடு மிந்திரன் முடிமேற் றாள்வைத் தேறுவர் சிவலோகத்தே' என்ற பாடலில் காட்டுகிறார்.

இறைவனின் திருவிளையாடல்கள் எட்டெட்டு என்று வேம்பத்தூரரார் பாராட்டுகிறார். 'சுருதிநான் மறை தொழுஞ் சொக்க நாயகன் திருவிளை யாடல் எட்டெட்டுஞ் செப்பிட' என்ற அடிகள் எண்குணத்தினனான சொக்கன், எண்வகை வீரச்செயல் புரிந்த அருட்டிறமிக்க சுந்தரன் உயிர்களின் பால் வைத்த வான்பெருங் கருணையால் எட்டெட்டு (அறுபத்து நான்கு) திருவிளையாடல்களைச் செய்தால் என்று காட்டிகிறார். பிரணவத்தின் முதன்மையான அகரம் (தமிழ்க் கணக்கு முறையில் எட்டு 'அ'என்று காட்டப்படும்) ஆக நிற்கும் ஈசனுக்கும் எட்டிற்கும் உள்ள தொடர்பை உணர்ந்து பெரும்புற்றப்புலியூர் நம்பி அதில் - எட்டெட்டு விளையாட்டுக்களில் - ஆழங்காற்பட்டுப் பாடியுள்ளார் என்று கருதலாம்.

முடிவுரை

தம்முடைய காலச் சமுதாய, அரசியல் நிலைக்களன்களுக்கேற்பப் பெரும்பற்றப்புலியூர் நம்பி திருவிளையாடற் புராணத்தைத் தமிழில் முதல் தலபுராண இலக்கியமாகப் படைத்தார். இறைவன் தனிப்பெருங் கருணையுடன் உயிர்களுக்கு அருள் செய்யும் அடியவர்க்கெளிய சொக்கனாக வந்து எட்டெட்டு திருவிளையாடல்கள் புரிந்த பேரருள் திறத்தைப் போற்றுகிறார். திருமுறை நூற்கள் தோத்திர நூற்களாகப் பின்தோன்றிய சாத்திர நூற்களுக்கு ஊற்றுக்கால்களாக விளங்கின. அதே முறையில், பின் தோன்ற உள்ள சித்தாந்த சாத்திர நூற்களுக்கு ஊற்றுக் காலாக வேம்பத்தூராரின் திருவிளையாடல் அமைந்துள்ளது.

திருவருள்

-முனைவர். ஆ. ஆனந்த ராசன்
பேராசிரியர், சைவ சித்தாந்தத் துறை,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.

சைவ சமயம் எல்லா அறிவும், எல்லாத் தொழிலும், எல்லா முதன்மையும் உடைய முழுமுதற் பொருளைச் சிவம் என அழைத்து, உயிர்கள் அதனைத் தலைப்பட்டு இன்புறுதற்குரிய வழியினையும் தெளிவாக வகுத்துக் காட்டியுள்ளது.

ஞாயிற்றைக்காணுதற்குத் துணை செய்வது அதன் ஒளியே யாகும். அவ்வொளி ஞாயிற்றின் தன்னியல்பாகவும் குணமாகவும் உள்ளது. ஞாயிற்றைப் போலவே சிவமாகிய முதற் பொருளும் அருள் ஒளி உடையது. 'அருள் உண்டாம் ஈசற்கு; அது சத்தி'என்பது மெய்கண்டார் வாக்கு.

உமாபதி சிவம் சிவப்பிரகாசம் என்ற தமது நூலில் பின்வருமாறு கூறியுள்ளார். சிவனது அறிவாகிய சத்தி ஒளியாயிருக்கும். அது சிவத்தையின்றித் தனித்து நில்லாது. எங்கும் செறிந்திருக்கும் இருளை நீக்கி உலகப் பொருளைக் காட்டுகின்ற சூரியனது ஒளியே தன்னை நோக்குவார்க்குத் தன்னையும் காட்டித் தனக்கு முதலாகிய சூரியனையும் காட்டி நிற்றல் போல, உலகத்தை நோக்குகின்ற உயிர்க்குத் தன்னையும் காட்டித் தனக்கு முதலாகிய சிவ பரம் பொருளையும் காட்டி நிற்கும்.

சுத்தமாகும் சத்தி ஞானச்
சுடராகும் சிவம் ஒழிந்து அச்
சத்திதான் இன்றாம் ; முன்னைத்
தகவிலா மலங்கள் வாட்டி
அத்தனை அருளும் ; எங்கும்
அடைந்திடும் இருளகற்றி
வைத்திடும் இரவி காட்டும்
வளரொளி போல் மகிழ்ந்தே. (சிவப்பிரகாசம். 75)

இதனால், உயிர்கள் சிவனது உருவாகவும் குணமாகவும் உள்ள திருவருளைத் தலைப் பட்டே அவனை உணர்ந்து இன்புறுதல் கூடும் என்பது விளங்கும்.

உலகியலில் ஒருவன் ஒரு சமயத்தில் ஒரு பொருளைத் தனக்கு இன்றியமையாததாகக் கருதி விடுவானாயின், அவனுக்கு அந்தச் சமயத்தில் அந்தப் பொருள்தான் மிகவுயர்ந்த

பொருளாகத் தோன்றும். அதனைக் காட்டிலும் மேலான பொருள் வேறொன்றும் இருக்க முடியாது. அது போல ஆன்மீக நெறியிற் செல்லும் ஒருவன் திருவருளையே தனக்கு இன்றியமையாத பொருளாகக் கருதி அதனையே வேண்டி நிற்பான். அவனைப் பொறுத்த வரையில் திருவருளைக்காட்டிலும் மேலான பொருள் இவ்வுலகில் வேறொன்றும் இல்லை.

ஒருவன் நீர் வேட்கையோடு வருகிறான்; பருகுவதற்குத் தண்ணீர் கிடைக்குமா என்று அலைந்து பார்க்கிறான். எங்குத் தேடியும் கிடைக்கவில்லை. அவனது நாக்கு வறண்டு போய் விட்டது. உதடுகள் காய்ந்து விட்டன. தண்ணீருக்காக அவன் தவிக்கிறான். அந்த நேரத்தில் தண்ணீருக்குப் பதிலாக வகை வகையான உணவுகளை அடுக்கடுக்காக அவன் முன்னே வைத்தாலும் அவற்றை அவன் நாடுவானா? அல்லது, விலையுயர்ந்த பொன்னையும் நவமணிகளையும் அவன் முன்னே குவித்தாலும் அவற்றை மதிப்பானா? இவையெல்லாம் அவனது தாகத்தைத் தீர்க்குமா? அவனுக்கு வேண்டியது தாகத்தைத் தணிக்கின்ற நீர் ஒன்று தான். அந்த நேரத்தில் நீர்தான் அவனுக்குத் தலையாய பொருள்.

இன்னெரு நிகழ்ச்சியைக் கூறலாம். வீட்டில் குழந்தை தரையில் விளையாட்டுப் பொருள்களைப் பரப்பி வைத்துக் கொண்டு விளையாடிக் கொண்டிருக்கிறது. தாய் கடைவீதிக்குப் போய் வரலாம் என்று புறப்படுகிறாள். குழந்தையைப் பார்த்துக் கொள்ளும் படி சொல்லி விட்டுச் செல்கிறாள். விளையாடிக் கொண்டிருந்த குழந்தைக்குத் தாயின் நினைப்பு வந்து விட்டது. அவ்வளவு தான். விளையாட்டுப் பொருள்களை வீசியெறிந்தது. அது வரையில் சிறந்தவையாக விளங்கிய அப்பொருள்கள் இப்பொழுது அக்குழந்தைக்கு ஒரு பொருட்டாகத் தோன்றவில்லை. இந்த நேரத்தில் தாய்-தான் அதற்கு வேண்டும். அம்மாவை நினைத்து அழத் தொடங்கி விட்டது. வீட்டிலுள்ள ஒவ்வொருவரும் அதன் அழுகையை நிறுத்த முயன்றார்கள். என்னென்ன பொருள்களையோ எடுத்து வந்து காட்டி அதன் கவனத்தை ஈர்க்கப் பார்த்தார்கள். ஆனால் அதன் அழுகை நின்றபாடில்லை. தாயைக் கண்டாலொழிய அதன் அழுகை ஒயாது. அக்குழந்தைக்கு அக்கணத்தில் வேண்டப்படுகிற ஒரே பொருள் தாய் தான். வேறு எந்தப் பொருளையும் அது நாடுவதில்லை. அக்குழந்தையைப் பொறுத்த மட்டில் அவள் தான் தலையாய பொருள்.

தாகமுற்றவன் தண்ணீரை நாடுதல் போலவும், அழும் குழந்தை தன் தாயை நாடுதல் போலவும் ஆன்மீக நெறியிற் செல்லும் சாதகன் திருவருள் ஒன்றையே வேண்டி நிற்பான்.

திருவருள் நாட்டம் வருதல் என்பது அவ்வளவு எளிதன்று. திருவருளே நமக்குப் புகல் என்ற உறுதியான எண்ணம் நமக்கு இல்லை. அப்படி நூல்கள் எடுத்துச் சொன்னாலும் நாம் நம்புவதாக இல்லை. எண்ணற்ற பிறவிகளை எடுத்து எடுத்து உலக வாழ்வு ஒன்றையே அறிந்த நமக்கு உலகப் பற்றே மீதூர்ந்து நிற்கிறது. அதனால், கண்கண்ட உலக சுகத்தையே பெரிது என்று நம்புகிறோம். காணாத திருவருள் இன்பத்தில் நமக்கு நம்பிக்கை பிறக்கவில்லை.

உயிர்களுக்கு வாழ் இடமாக உள்ளது திருவருளேயாகும். ஆயினும் உயிர்கள் திருவருளை அறிந்து அனுபவிப்பதில்லை. மாயையின் காரியமாகிய நிலையில்லாத உலகப் பொருள்களையே அவாவி அவற்றை அடைய முயலும். இது, பாற்கடலில் வாழும் மீன் அப்பாலைப் பருகி மகிழாது, அங்குத் திரியும் சிறு பூச்சிகளைப் பிடித்து உண்ணுவதைப் போன்றது. பாற் கலத்தின் மேல் உள்ள பூனை பாலை உண்ணக் கருதாமல் சுவரில் ஓடும் கரப்பான் என்னும் சிறு பூச்சியை உண்ண முயல்வதையும் இதனோடு ஒப்பிடலாம்.

’பரப்பமைந்து கேண்மின் இது பாற்கலன் மேல் பூனை
கரப்பருந்த நாடுங் கடன்’ (திருவருட்பயன். 39)

நிலத்தின் மேல் வாழ்வோர் தம்மைத் தாங்கி நிற்பது நிலம் என்பதனைச் சிறிதும் நினைப்பதில்லை. தாமே தமது ஆற்றலால் நிலத்தில் இயங்குவதாக எண்ணிக் கொள்கிறார்கள். அது போல, மாந்தர் திருவருளால் எல்லாவற்றையும் பெற்று நின்றும், அவற்றைத் தருவது திருவருள் என்பதனைச் சிறிதும் உணராமல் தாமே தமது திறமையினால் எல்லாவற்றையும் அடைந்ததாக எண்ணிச் செருக்குகிறார்கள். அவர்களுடைய அறியாமையை என்னென்பது!

தரையை அறியாது தாமே திரிவார்
புரையை உணரா புவி (திருவருட்பயன். 36)

பிறப்பினால் உண்டாகும் துன்பத்தையும், வாழ்க்கையின் முடிவில் இறப்பினால் உண்டாகும் துன்பத்தையும் நன்கு உணர்ந்து அஞ்சுபவர்க்கே உலகியலில் உவர்ப்பு உண்டாகும். பொறிகளால் நுகரும் இன்பங்களில் வெறுப்பு உண்டாகும். நிலையான புகலிடம் எது என்று தேடும் முயற்சி உண்டாகும்.

ஒருவன் தலையில் தீப்பற்றிக் கொண்டால் அவன் ஒரு கணமேனும் வாளா இருப்பானா? ’எங்கே தண்ணீர்?’ என்று தேடி அங்குமிங்கும் ஓடி அலைவான். தண்ணீருக்காக அவன் தவிப்பது போலத் தம்நிலையை உள்ளவாறு உணர்ந்தவரே திருவருளுக்காக ஏங்குவர்; இப்படி ஆன்மீகப் பாதையில் செல்பவரை நோக்கியே’அருளிற் பெரியது அகிலத்து இல்’ என்று திருவருட்பயன் கூறிற்று.

திருநாவுக்கரசர் தேவாரத்தில் இறைச் சிந்தனைகள்

டாக்டர் ம. திருமலை, இணைப் பேராசிரியர்
தலைவர்: ஒப்பிலக்கியத்துறை
தமிழியற் பள்ளி,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை-21.

முன்னுரை:

தமிழர்களின் வழிவழிச் சொத்துக்களாகக் கருதப்படுவன இலக்கண இலக்கியங்கள்; அவற்றுள் வயிற்றுப் பிழைப்புக்காக என்றில்லாமல் வாழ்க்கைக்காக என்று கருதப்படுபவை பக்தி இலக்கியங்கள். மக்களின் அன்றாடப் பழக்க வழக்கங்களுடன் இணைந்து இரண்டறக் கலந்தவை பக்தி இலக்கியங்கள்; அவை இன்றேல் மனித உழைப்பு இல்லை; வாழ்க்கை இல்லை. "கற்றைச் செஞ்சடையன் உளன்; நாம் உளோம்" என்ற வாகீசரின் வாக்கிற்கு இணங்கத் தமிழ் மக்கள் முழுமுதற் கடவுளான சிவபெருமானை மனத்தில் இருத்திக் கொண்டிருந்தனர்; இருத்திக் கொண்டுள்ளனர்.

தென்னகத்தில் மூவர் தோன்றி பக்திநெறியைப் பரப்பியது தமிழர் சமய வரலாற்றில் கூறப்படுகின்றது. ஞானசம்பந்தரும், சுந்தரரும், அப்பரும் இல்லாவிட்டால் இன்றைய தமிழ் நாட்டுக்கு அரும்பெரும் சொத்துக்களான பக்திப் பனுவல்கள் கிடைக்காமலே போயிருக்கும் இதனை,

"சொற்கோவும் தோணிபுரத் தோன்றலும் எம் சுந்தரனும்
சிற்கோல வாதவூர்த் தேசிதனும்-முற்கோலி
வந்திலரேல் நீறெங்கே மாமறைநூல் தானெங்கே
எந்தைபிரான் ஐந்தெழுத்தெங்கே"

என்ற பழம்பாடல் நமக்கு உணர்த்துகின்றது. திருநெறி தமிழகத்தில் நிலைத்து வளர வையகத்திற்கு வாழ்வுதர வந்த திருநெறியாளர்களுள் இன்றியமையாதவரும் தமது இடைவிடாத முயற்சிகளின் காரணமாக இறைவனை அடைந்தவருமான திருநாவுக்கரசரின் பாடல்களில் புலப்படும் இறைச் சிந்தனைகளை இச்சிறு கட்டுரையில் நோக்குவோம்.

சிவம்:

சைவநெறியில் இறைவன் சிவம் என்றழைக்கப்படுகிறது. சிவமானது உயிர்களைப் பக்குவப் படுத்தி ஆட்கொள்வதாகவும், காப்பதாகவும் உள்ளது. உயிர்களின் ஈடேற்றத்தினைத்

தடை செய்யும் ஆணவம், கன்மம் மாயை என்ற மும்மலங்களோடு தொடர்பற்றதாகச் சிவம் விளங்குகின்றது: அதனால் உயிர்களைச் சிவம் ஆட்கொண்டு அருளுகின்றது இதனை நாவுக்கரசர்,

"சிவன் எனும் நாமம் தனக்கே உடைய
செம்மேனி எம்மான்
அவன் எனை ஆட்கொண்டளித்திடுமாகில்"
என்று குறிப்பிடுகின்றார்.

அனைத்துமாகிற்கும் இயல்பு:

இறைவன் உலகின் அனைத்துமாக நிற்பவன் என்பதால் உலகின் இயக்கங்கள் அனைத்தும் இறைவனின் திருவுளப்படியே நடக்கின்றன. உலகில் நடக்கும் காரியங்கள் அனைத்தையும் இறைவனே நடாத்துகின்றான். இதனைத் திருநாவுக்கரசர் மிக எளிமையாக, அனைவரும் உணரும் வண்ணம் கூறுகின்றார். இக்கருத்து,

"ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதரே
அடக்குவித்தால் ஆரொருவர் அடங்காதாரே
ஓட்டுவித்தால் ஆரொருவர் ஓடாதாரே
உருகுவித்தால் ஆரொருவர் உருகாதாரே
பாட்டுவித்தால் ஆரொருவர் பாடாதாரே
பணிவித்தால் ஆரொருவர் பணியாதாரே
காட்டு வித்தால் ஆரொருவர் காணாதாரே
காண்பார் யார் கண்ணுதலாய்க் காட்டாதாரே"

என்ற பாடலில் மிக எளிமையாக உணர்த்தப்படுகின்றது. மனிதர்களின் இயக்கங்கள் அகம், புறம் என்ற இரண்டு நிலைகளில் உண்டு. உடல் மூலம் பிறருக்கும் புலப்பட்டுத் தெரியும் இயக்கங்கள். இவ்விரண்டில் உடல் ஒடுங்கிக் கிடப்பினதும் மனம் ஒடுங்காமல் இடைவிடாது இயங்கிக் கொண்டிருப்பது இயல்பாக எங்கும் காணத்தக்கது இக்காலத்தில் மனம் ஒடுக்கமின்றி அலைபாய்ந்து கொண்டிருத்தலே ஒரு பெரும் நோயாக உள்ளது. எனவே இந்த இரண்டு வகை இயக்கங்கள் உடல் இயக்கம், ம்ன இயக்கம் இரண்டுமே இறைவனால் நடப்பவை என்பதை மேற்காட்டிய பாடல் நுட்பமாக உணர்த்துகின்றது. ஆடுதல், ஓடுதல், பாடுதல், தாண்டல் ஆகியன புறத்தே தெரியக்கூடிய உடல் உறுப்புக்களின் இயக்கம். அடங்குதல், உருகுதல், பணிதல் முதலிய மனிதப் புலன்கள், சிந்தனைகளின் செயல்கள், இவ்விரண்டு இயக்கங்களும் இறைவனின் திருவருளால் நடப்பவையாகும்.

மனித இயக்கம் தொடர்பான இப்பாடலில் நாவுக்கரசர் பிறிதொரு நுட்பத்தினையும் பொதிந்து வைத்துள்ளார். அடங்குதல், உருகுதல், பணிதல், ஆடுதல், ஓடுதல், பாடுதல், தாண்டல் முதலியன மனிதனின் பொதுவான இயக்கங்களை மட்டும் குறிக்கவில்லை, அடியவர்களின் பக்தியுணர்விலும் இச்செயல்கள் இடம்பெறுவதை நாம் உணராலாம். இதனால் மனிதனின் பொதுவான இயக்கம் மட்டுமல்லாமல் பக்திபூர்வமான செயல்களும் இறையருளின் ஆணைப்படிதான் நடக்கின்றன என்பதைத் திருநாவுக்கரசர் கூறுகின்றார்.

இறைவன் யாதுமாகி நிற்பவன் என்ற இவ்வுண்மையை,

"இருசுடரோடு இயமானன் ஐம்பூதம் என்று
எட்டு வகையும் உயிரும் யாக்கையுமாய்க
கட்டி நிற்போனும், கலையுருவினோனும்
படைத்து விளையாடும் பண்பினோனும்
துடைத்துத் துயர் தீர் தோற்றத் தோனும்
தன்னில் வேறுதான் ஒன்றிலோனும்
அன்னோன் இறைவன் ஆகும்..."

என்று மணிமேகலை உணர்த்துகின்றது. இப்பாடல் வரிகளின் செய்தி திருநாவுகரசரின் மேற்குறிப்பிடப்பட்ட பாடல் வரிகளுடன் ஒப்புநோக்கத் தக்காதாகும். இறைவன் முழு முதலாக இருப்பவன் என்ற செய்தி பரிபாடலிலும் காணப்படுகிறது. இவற்றை நோக்க, தமிழ் மரபில் இறைக்கோட்பாடு பற்றிப் பரந்து விரிந்த நிலையில் காணப்பட்ட சிந்தனைகளைத் திருநாவுக்காரசர் நன்கு உள்வாங்கிக் கொண்டு தமது பாடலில் எளிமையாக உணர்த்துகின்றார் என்று கூறலாம்.

அருமையும் எளிமையும்:

இறைவன் எந்த அளவுக்கு அனைத்துமாக நிற்கிறானோ, அந்த அளவுக்கு எளிமையும் உடையவனாக இருக்கின்றான். அணுகாமல் விலகி நிற்கும் போது அருமையுடையவனாகவும், அணுகிய பின்னர் எளிமையுடையவனாகவும் இறைவன் இருக்கிறான். இதனை ஓர் அழகிய பாடலில் நாவுக்கரசர் காட்டுகின்றார்; அப்பாடல் வருமாறு.

"இன்று அரைக் கண்ணுடையார் எங்குமில்லை இமயமென்னும்
குன்றரைக் கண்ணன் குலமகட்பாவைக்குக் கூறிட்ட நாள்
அன்றரைக் கண்ணும் கொடுத்து உமையாளையும் பாகம் வைத்த
ஒன்றரைக் கண்ணன் கண்டீர் ஒற்றியூர் உறை உத்தமனே"

இப்பாடலில் மூன்று கண்களை உடைய சிவன் ஒன்றரைக் கண்களை உடையவனாக மாறிவிட்டான். உலகத்தில் அரைக்கண் உடையார் எவருமில்லை. ஆனால் சகல வலிமைகளும்

கொண்ட இறைவன் ஒன்றரைக் கண்களுடன், பார்ப்பதற்குப் பரிதாபமாகத் தோற்றமளிக்கிறான் என்று கிண்டல் செய்கிறார் நாவரசர். இது எவ்வாறு நிகழ்ந்தது? இறைவன் மலையரசன் மகளாகிய பார்வதிக்குத் தன் உடலில் பாதியைத் தந்து ஏற்றுக் கொண்ட போது தன் நெற்றிக் கண்ணிலிருந்தும் பாதிலைப் பிரித்துக் கொடுத்தான். அப்போதுதான் மூன்று கண்கள் ஒன்றரைக் கண்களாயின என்கிறார் அப்பர். இறைவனுடன் ஒன்றிய பிறகு, ஏற்பட்ட உரிமை காரணமாகத் திருநாவுக்கரசர் தமக்கு மிகவும் நெருங்கிய ஒருவரைக் கிண்டல் செய்வது போன்ற பாவனையில் இறைவனின் அருட்கருணையைப் புகழ்ந்து கூறுகின்றார். இறைவன் மிகமிக எளிமைப் பண்புடையவன் என்பதை இப்பாடலில் நாவுக்கரசர் நுண்மையாகக் கூறுகின்றார்.

உயிர்களை ஆட்கொண்டருளல்:

இறைவனின் எங்கும் நிறைந்திருக்கும் இயல்பினை உணர்ந்து, அவனை அடைய ஆன்மா பக்குவ நிலையை அடைகிற போது, இறைவன் தானே முன்வந்து அடியவர்களை ஏற்றுக் கொள்கிறான். இந்த இறையியல்பை ஒரு நாடகச் காட்சி போலச் சித்தரிக்கிறார்; அப்பாடல் வருமாறு:

"வெள்ளநீர்ச் சடையனார் தாம் வினவுவார் போல வந்தென்
உள்ளமே புகுந்து நின்றார்க்கு உறங்கி நான் புடைகள் போந்து
'கள்ளரோ புகுந்தீர்' என்னக் கலந்து தான் நோக்கி நக்கு
'வெள்ளரோம்' என்று நின்றார் விளங்கு இளம் பிறையனாரே"

தன் கருணையை எதிர்நோக்கி இருக்கும் உயிர் ஒரு முதிர்ச்சியை அடையத் தலைப்பட்டிருக்கிறது என்ற நிலை ஏற்பட்டவுடனேயே இறைவன் தானே முன்வந்து ஆட்கொள்கிறான். ஆன்மா எதிர்பாராத நிலையில், எதிர்பாராத நேரத்தில் எதிர்பாராத முறையில் வந்து இறைவன் ஆட்கொள்கிறான் என்ற கருத்தினை அப்பர் மேற்காட்டிய பாடலில் கூறுகின்றார். இறைவனை நோக்கி ஆன்மா ஒரடி எடுத்து வைக்க, இறைவன் பல அடிகள் ஒடிவந்து எதிர்கொள்கிறான் என்ற குறிப்புப் பொருள் இப்பாடலில் கூறப்பட்டுள்ளதை உய்த்துணரலாம். ஆன்மாவை ஆட்கொள்கின்ற இறைவன் தான் இறையென்பதையும் ஆட்கொள்ள வந்திருக்கின்ற செய்தியையும் கூறாமலேயே ஆட்கொள்கின்ற பண்புடையவன் என்பதும் மேற்காட்டப்பட்ட பாடலில் புலப்படுகின்றது.

எதிர்மறைகளை ஒருங்கிணைக்கும் பண்பு:

இறைவனுக்கு உலகில் அனைவரும் அனைத்தும் ஒன்றே. முரண்பாடுகள், வேறுபாடுகள் என்றும் எதுவுமில்லை. இறைவன் என்ற பேரொளி ஏனைய அனைத்தினையும் சமனிலைப் படுத்த வல்லது, ஒன்றுபடுத்த வல்லது என்ற கருத்து நாவுக்கரசர் பாடல்களில் பல இடங்களில் புலப்படுகின்றது. அத்தகைய ஒரு பாடலைக் காணலாம்.

"கிடந்த பாம்பு அருகு கண்டு அரிவை பேதுற
கிடந்த பாம்பு அவளையோர் மயிலென்று ஐயுறக்
கிடந்த நீர் சடைமிசைப் பிறையும் ஏங்கவே
கிடந்து தான் நகுதலைக் கெடில வாணரே"

இப்பாடலில் இறைவனின் கழுத்தில் கிடக்கின்ற பாம்பினைக் கண்டு உமாதேவி ஐயுறுவதையும், உமாதேவியின் மயில் போன்ற சாயலைக் கண்டு மயில் என்று மயங்கி, பாம்பு ஐயுறுவதையும் பாம்பினைக் கண்டு பிறை நிலவு ஏங்குவதையும் இவர்கள் அனைவரது ஐயங்களையும் கண்டு இறைவன் கழுத்தில் கிடக்கும் கபாலம் சிரிப்பதாகவும் திருநாவுக்கரசர் இப்பாடலில் காட்சியை அமைத்துப் பாடுகின்றார்.

மேற்காட்டிய பாடலில் பாம்பு, மயில், பிறை முதலிய முரண்பாட்டினையுடைய உயிர்கள் ஒரிடத்தில் இணைந்திருப்பதாகத் திருநாவுக்கரசர் கூறுவது மிகவும் ஆழமுடையதாகும். இறைவன் தானே முழுமை வடிவாகவும் சக்தியாகவும் இருப்பதால், இவ்வுலகத்தின் உயிர்களைத் தனது முழுமையில் கூறுகளாகக் கொண்டுள்ளான். அதனால் முழுமையில் அடங்கிய கூறுகள் செம்மையுடையனவாக இருக்கின்றன;அதாவது இறைவன் முரண்பாடுகள் மிகுந்த உயிர்களைக் கூட ஒருமைப்படுத்துபவன் என்பதை இப்பாடலில் நாவுக்கரசர் உணர்த்துகின்றார்.

ஒருமைப்படுத்தும் இறைப் பண்பினைத் திருநாவுக்கரசர் பிறிதொரு பாடலிலும் கூறுகின்றார்; அப்பாடல் வருமாறு:

"நாகத்தை நங்கை அஞ்ச
நங்கையை மஞ்ஞை ஒன்று
வேகத்தைத் தவிர நாகம்
வேழத்தின் உரிவை போர்த்து
பாகத்தின் நிமிர்தல் செய்யாத்
திங்களை மின்னென்றஞ்சி
ஆகத்திற் கிடந்த நாகம்
அடங்கும் ஆரூரனார்க்கே"

என்ற இப்பாடலிலும் எதிர்மறை இயல்புகளுடைய உயிர்களை ஒன்றுபடுத்தி அடங்கச் செய்யும் இறைவனின் இயல்பு மிகுந்த கலைநயத்துடன் கூறப்படுகின்றது.

முடிவுரை:

தேவார மூவர்களும் தம் பாடல்களில் இறை பற்றிய சிந்தனைகளைப் பலவாறாகக் கூறிச் சென்றுள்ளனர். இவற்றுள் திருநாவுக்கரசர் தேவாரத்தில் இறைவனின் இயல்புகள் கூறப்பட்டுள்ள பாங்கு இங்கு ஒரு சிறிது விளக்கப்பட்டது. இறைவன்

(i) அனைத்துயிர்களையும் இயக்குபவனாக உள்ளான்.

(ii) அருமைக்கு அருமையாயும் எளிமைக்கு எளிமையாயும் இறைவன் திகழ்கின்றான்.

(iii) எதிர்மறைப் பண்புகளையும் இயக்கங்களையும் ஒருங்கிணைக்கும் தன்மையுடைய ஒரு முழுமையாக இறைவன் திகழ்கிறான், என்ற செய்திகள் திருநாவுக்கரசரின் தேவாரப்பாடல்கள் கொண்டு விளக்கப்பட்டன. எனவே பல கலைகளாக, ஆகமங்களாக இருக்கும் இறைவனை மனத்தில் எண்ணுவோம்.

"நிலவுமரு வுருவின்றிக் குணங்குறிகள் இன்றி
நின்மலமாய் ஏகமாய் நித்தமாகி
அலகில் உயிர்க்கு உணர்வாகி, அசலமாகி
அகண்டிதமாய் ஆனந்த உருவாய் அன்றிச்
செலவரிதாய்ச் செல்கதியாய்ச் சிறிதாகிப் பெரிதாயாத்"
திகழும் சிவத்தைத் துதிப்பாம்.

நற்றமிழும் நாலாயிரத்திவ்யபிரபந்தமும்

டாக்டர். இரா. பாலசுப்பிரமணியன்
அழகப்பா பல்கலைக்கழகம்
காரைக்குடி

தமிழ் பக்தியின் மொழி என்று சிறப்பிக்கப்பெறுகிறது. பாட்டும் தொகையுமாகிய சங்கப் பாடல்களைவிடப் பக்திப் பாடல்களின் எண்ணிக்கைத் தமிழ்மொழியில் மிகுதியாக இருக்கிறது. பக்திப் பாடல்களில் சைவத்திற்கு திருமுறைகளும் வைணவத்திற்குத் திருமறைகளும் வைணவத்திற்கு நாலாயிரத்திவ்ய பிரபந்தமும் உயிர் நாடிகளாகின்றன.

மயர்வறமதிநலம் அருளப் பெற்றவர்கள் ஆழ்வார்கள். ஆழ்ந்தறியும் அறிவைச் சிறப்பாகப் பெற்றவர்கள் ஆதலால் ஆழ்வார்கள் என அழைக்கப்பெற்றனர். ஆழ்வார்களின் பக்திவழி எளிமையானது. பாசுரங்களில் அவர்கள் இசையையும் சேர்த்ததால் மக்களிடையே செல்வாக்குப் பெற்றார்கள்.

அருளிச் செயல்கள்:

ஆழ்வாரின் பாசுரங்களை அருளிச் செயல்கள் எனக் குறிப்பிடுவது வைணவ மரபு. மணவாளமாமுனிகள் உபதேசரத்தினமாலையில் ஆழ்வார்கள் வாழி! அருளிச் செயல்வாழி! என்று குறிப்பிடுகிறார். ஆசாரிய உறிருதயம் என்கிற நூல் அருளிச் செயலோடு திவ்யபிரபந்தம் என்கிற பெயரையும் சேர்த்தே கூறுகிறது. 'திவ்யம்' என்கிற சொல் தெய்வீகத்தன்மையோடு தொடர்புடையது. வைணவமரபில் இறைவன் எழுந்தருளியிருக்கும் இடம் திவ்யதேசம் என அழைக்கப்பெறும். ஆழ்வார்கள் திவ்யசூரிகள் என்று அழைக்கப்படுவதும் இங்குக் கருதத்தக்கதாகும்.

வேதக்கடலுள் ஆழத்தில் இருக்கிற விசேடங்களை மூழ்கி எடுத்து உலகிற்கு அறிவித்தவர்கள் ஆழ்வார்கள் ஆவார்கள். ஆழ்வார்கள் பதின்மர் என்றும் பன்னிருவர் என்றும் கூறப்படுகிற வழக்குண்டு. பதின்மர் என்கிற வழக்கில் ஆண்டாளைப் பெரியாழ்வார் வைபவத்திலும் மதுரகவிகளை நம்மாழ்வார் வைபவத்திலும் அடக்கிக் கூறுவதால் ஆழ்வார்கள் பதின்மர் என்கிற வழக்கு எழுந்தது.

ஆழ்வார் - ஆசார்யர்

வைணவமரபில் ஆழ்வார் - ஆசார்யர் இருவருமே சிறப்பிடம் பெற்றவர்கள். இவர்கள் இருக்குமிடையே உள்ள வேறுபாட்டினைக் கீழ்க்கண்டவாறு விளக்கிக் குறிப்பிடுவர்.

"ஸ்ரீமந் நாராயணன் ஒரு சுவாததந்திரியம் என்ற உப்புக்கலந்தது. நம்மாழ்வார் என்ற மேகம் கிரகித்து அதன் சம்பந்தத்தால் உப்பு அகன்று காருண்யமாகிய நீரை, நாத முனி என்ற மலையில் பெய்விக்க உய்யக் கொண்டார் மணக்கால் நம்பி என்கிற இரு அருவிகள் மூலம் அந்த நீர் ஆளவந்தார் என்ற நதியில் கலக்கிறது. அதிலிருந்து இராமானுஜர் என்கிற ஏரிக்கு வந்து அவரால் ஏற்படுத்தப்பட்ட 74 சிம்மாசனாதிபதிகள் ஆகிய மதகுகள் மூலம் சேதனப் பயிர்க்கு வைணவம் என்ற நீர் பாய்ச்சப்படுகிறது." இக்குறிப்பிலிருந்து நம்மாழ்வாரிடமிருந்து இராமானுஜர் என்கிற ஆசார்யர் வேறுபட்டிருக்கக் காணலாம்.

திருமாலினது மங்கள குணங்களாகிய அமுத வெள்ளத்தில் ஆழ்ந்து இருப்பவர்கள் ஆழ்வார்கள் ஆவார்கள்.

ஞானத்தமிழ்

தமிழை இயல், இசை, நாடகமெனப்பிரித்து முத்தமிழ் என்று கூறுகிற மரபு உண்டு. மேலும் தமிழுக்குப் பல அடைமொழிகளைச் சூட்டிச் இன்தமிழ், கன்னித்தமிழ், செந்தமிழ், தீந்தமிழ், தெய்வத்தமிழ், பைந்தமிழ் என்றெல்லாம் சிறப்பித்துக் கூறுகிறமரபும் உண்டு. ஆழ்வார்கள் முதலாழ்வார்களில் ஒருவரான பூதத்தாழ்வார் பாசுரத்தில்,

அன்பே தகளியாக ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை யிடு திரியா - நன்புருகி
ஞானச் சுடர்விளக் கேற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ் புரிந்த நான்

என்று குறிப்பிடுகிறார். பூதத்தாழ்வார் தமிழை ஞானத்தமிழ் எனச் சிறப்பிக்கிறார். மேலும் அவர்,

யானே தவம் செய்தேன் ஏழ்பிறப்பும் எப்பொழுதும்
யானே தவமுடையேன் எம்பெருமான் - யானே
இருந்தமிழ் நன் மாலை இணையடிக்கே சொன்னேன்
பெருந்தமிழன் நல்லேன் பெரிது

என்று பாடிப் பெருமித மடைகிறார். அவர் தன்னைப் பெருந்தமிழன் என்று கூறுவது அப்பெருமிதத்திற்கான காரணமாகும்.

எத்தனைத் தமிழ்?

ஆழ்வார்கள் தம்பாசுரப்பாடல்களின் இறுதியில் பாசுரப் பயன்பாட்டைக் கூறுவர். அவ்விடங்களில் தமிழையும் இணைத்துக் கூறுகிற போக்கை எல்லா ஆழ்வார்களிடமும் காணலாம்.

மைத்தடங் கண்ணி யசோதை தன்மகனுக்கு இவை
ஒத்தன சொல்லி யுரைத்த மாற்றம் ஒளிபுத்தூர்
வித்தகன் விட்டு சித்தன் விரித்த தமிழிவை
எத்தனையும் சொல்ல வல்லார்க் கிடரில்லையே

என்பது பெரியாழ்வார் திருமொழிப்பாசுரமாகும். இவ்வாறு அவர்தம் பாசுரங்களில் ஈத்த தமிழிவை (117), இன்தமிழ் மாலை (243), தூயத்தமிழ்ப் பத்தும் (306), செந்தமிழ்த் தென் புதுவை விட்டு சித்தன் சொல் (317), ஒண்தமிழ் (390), செய்தமிழ் மாலை (401), வியன்தமிழ் (442) என்றெல்லாம் குறிப்பிடுகிறார்.

ஆண்டாள் தம் திருப்பாவையில்,

.... அணிபுதுவைப்
பைங்கமலத் தண்தெரியல் பட்டர்பிரான் கோதை சொன்ன,
சங்கத் தமிழ்மாலை முப்பதும் தப்பாமே,
இங்கிப் பரிசுரைப்பா ரீரிரண்டு மால் உரைத் தோள்
செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால்,

எங்கும் திருவருள்பெற் றின்புறுவ ரெம்பாவாய் (503) என்று பாடுகிறார். தமிழைச்'சங்கத்தமிழ் மாலை' என்று சிறப்பிக்கிறார்.

ஆண்டாள் அருளிய திருப்பாவையே சங்கத்தமிழ் மாலையாகும். திரள் திரளாக அனுபவிக்க வேண்டிய தமிழ்மாலை என்று பொருள் செய்கிற மரபுண்டு. சங்கம் என்பதற்கு மக்கள் கூடியிருத்தல் என்ற பொருள் இருத்தலின் இவ்வாறு கூறப்பட்டதாக மூதறிஞர் வ. சுப. மாணிக்கம் கருதுவார்கள். மேலும்,"திருப்பாவையில் வரும் சங்கத்தமிழ் மாலை என்ற இனிய தொடருக்குப் பண்டைச் சங்கத்தமிழ் வனப்பு அமைந்த பாசுரத்தொகுதி எனப்பொருள் செய்வதே தகும்" என்றும் குறிப்பிடுகிறார். முப்பது பாசுரங்களில் திணையமைப்பும் கருப்பொருட் காட்சியும் முல்லைப் பின்புலமும் முல்லைக்கலியை நினைவூட்டுகின்றன.

முல்லைக்கலியோடும் சிலப்பதிகார ஆய்ச்சியர் குரவையோடும் ஒப்பீடு செய்தால் சங்கத்தமிழ்மை புலனாகும் என்று வ. சுப. மாணிக்கம் வலியுறுத்துவார், சங்க மரபு திருப்பாவையில் மேலும் பொலிவு பெற்றிருக்கிறது.

ஆண்டாள் தம்பாசுரங்களில் தமிழ்மாலை (513), கோதை வாய்த்தமிழ், (523) தூயதமிழ் மாலை, (566) என்றெல்லாம் குறிப்பிடுகிறார்.

குலசேகர ஆழ்வார் நடைவிளங்கு தமிழ்மாலை (657), இன்தமிழ் மாலை (667), நல்லிசைத் தமிழ் மாலை (718) என்றெல்லாம் சுட்டுகிறார். மேலும் தமிழை அவர் நற்றமிழ் (697) என்றும் சிறப்பித்துக் கூறுகிறார்.

திருமங்கையாழ்வார் தம்பாசுரங்களைத் தமிழ்மாலை (997), வண்டமிழ்ச் செஞ் சொல்மாலைகள் (1027), தண்டமிழ் செய்மாலை (1067) சங்கமலித்தமிழ் மாலை (1237), கோவைத்தமிழ் (1367), தமிழின்னிசை மாலை (1737), இன்தமிழ் (1847) என்று குறிப்பிடுகிறார். மேலும் அவர் 'செந்திறத்த தமிழோசை வடசொல்லாகிய (2055) என்று தாம்பாடிய திருநெடுந் தாண்டகத்தில் பாடுகிறார். இதன் பொருள் தமிழ் இசையாகவும் வடசொல்லாகவும் இறைவன் உள்ளான் என்பதாகும்.

முதலில் தமிழே குறிக்கப் பெறுகிறது. அடுத்ததாகத்தான் வடமொழி குறிக்கப் பெறுகிறது.

பாலேய் தமிழரிசைகாரர்
பத்தர் பரவும் ஆயிரத்தின்
பாலே, பட்ட இவைபத்தும்
வல்லார்க் கில்லை பரிவதே (2136)

என்று நம்மாழ்வார் பாடுகிறார். மேலும் அவர்தம் பாசுரங்களை இசைமாலை (2325), வழுவிலாத வொண்தமிழ்கள் (2490), ஆய்ந்த தமிழ் மாலை (2589), செந்தமிழ் (2688) நேர்பட்ட தமிழ்மாலை (2952) என்றெல்லாம் கூறிச்செல்கிறார். இக்கூற்றுக்களை யெல்லாம் உள்வாங்கி நம்மாழ்வாரிடம் தம்மை பறிகொடுத்தவர் மதுரகவி ஆழ்வார். அதனால்தான்,

தேவு மற்று அறியேன்; குருகூர் நம்பி
பாவின் இன்னிசைப் பாடித்திரிவேனே

என்று கூறுகிறார். நம்மாழ்வாரே தம்பாடல்களை இசைமாலை என்று கூறுவதும் அதை மதுரகவி ஆழ்வாரின் வரிகள் உறுதிப்படுத்துவதையும் காணலாம். சைவசமயத்தில் திருநாவுக்கரசரையே தெய்வமாகப் போற்றிய அப்பூதி அடிகளைப் போல, வைணவத்தில் மதுரகவி ஆழ்வார் நம்மாழ்வாரையே தெய்வமாக வணங்குகிறார்.

திருவாய் மொழி - வேதம்

வாய்மொழி என்கிற சொல் வேதம் என்கிற பொருளில் பரிபாடலில் பயின்று வந்திருக்கிறது. இறைவன் தன்வாய் மொழியால் நம்மாழ்வார் மூலமாகத் தன்னைத் தானே

பாடிக்கொண்டதுதான் திருவாய்மொழி. திருவாய் மொழிக்குச் சிறந்த மாறுபாடு இல்லாத சொல் என்று பொருள்படும்.

திருவாய்மொழியைத் 'திராவிட வேதசாகரம்' என்றும் வேதக்கடல் என்றும் சிறப்பிக்கப்பெறும். தமிழ் நூல்களில் ஐயம் ஏற்பட்டால் எவ்வகையில் விளங்கிக் கொள்வது? என்ற கருத்தில்,

பலகால் பழகினும் தெரியா உளவேல்
தொல்காப் பியம்திரு வள்ளுவர் கோவை
மூன்றினும் முழங்கும்; ஆண்டினும் இலையேல்
வடநூல் வழங்கும் என்ப

என்று சுவாமிநாத தேசிகரின் பாடல் குறிப்பிடும். இப்பாடல் கருத்திற்கு எதிரானது வேதாந்த தேசிகரின் கருத்து. "வடமொழி வேத வேதாந்தங்களின் தெளிவில்லாத பகுதிகளைத் திருவாய்மொழியின் உதவியால் தெரிந்து கொண்டதாகக் கூறுகிறார். இதனால் தமிழுக்குப் பெரும்பேர் கிடைக்கிறது.

வைணவ உலகம் நம்வாழ்வாரை மிகவும் போற்றுகிறது. 'குலபதி' எனச் சிறப்பிக்கிறது. ஸ்ரீ ராமானுஜர் திருவாய் மொழியில் ஆழ்ந்தவர். ஆசாரியர் ஸ்ரீ வேதாந்த தேசிகர் (கி. பி. 114) திருவாய்மொழியைத் தமிழ் உபநிடதம் என்பார். மேலும் திரமிடோபநிஷத் சாரம், திரமிடோபநிஷத் தாத் பிரய ரத்னாவளி என்கிற நூல்களை வடமொழியில் எழுதினார். திருவாய்மொழியின் சிறப்பு வடமொழியின் வாயிலாக எடுத்துரைக்கப் பெறுகிறது. திருவாய் மொழி தமிழ் மொழியில் இருப்பது தமிழுக்குச் சிறப்பெனவும் கூறுவர்.

செய்யதமிழ்மாலை

ஆழ்வார்கள் தமிழால் திருமாலைக் கண்டனர். பெரும்பாலும் அவர்கள் தம் பாசுரங்களைத் 'தமிழ் மாலை' எனப் பரவலாக அழைப்பதைக் காண முடிகிறது. பொதுவாக 'மாலை' என்கிற சொல்லின் ஆட்சி எல்லா ஆழ்வார்களிடமும் காணமுடிகிறது. பெரியாழ்வார் அன்பால் செய் தமிழ் மாலை என்று கூற ஆண்டாள் தூய தமிழ் மாலை என்று குறிப்பிடுகிறார். திருமங்கையாழ்வார் சொல்லிற்பொலிந்த தமிழ்மாலை என்றும் 'பாவளருற் தமிழ்மாலை' என்றும் குறிப்பிட நம்மாழ்வார், 'நேர்பட்ட தமிழ்மாலை' என்று கூறுவார். இவைகளையெல்லாம் கருத்தில் கொண்டு ஆழ்வார்கள் தொகுப்பாகிய நாலாயிரத்திவ்யபிரபந்தத்தையே 'செய்ய தமிழ் மாலைகள்' எனச் சிறப்பித்துக் கூறுகிறார் வேதாந்ததேசிகர்.

திருமாலை என்கிற தனித்ததொரு இலக்கியவகை நாலாயிரத்திவ்ய பிரபந்தத்தில் உள்ளது. தொண்டரடிப்பொடி ஆழ்வார் பாடியது. ஒருபொருளைக் குறித்துப் பல செய்யுள் பாடுவதே மாலையென்னும் பிரபந்தமாகும்.

மாலை என்கிற சொல்லாட்சி பிற்கால வைணவநூல்களில் தாக்கம் பெற்று வளர்ந்திருப்பதை அறிஞர்கள் சுட்டிச் செல்கின்றனர். எ.டு உபதேசரத்தினமாலை, திருவரங்கத்து மாலை, போல்வன, நாட்டுப்புறக் கதைப்பாடல்கள் சில 'மாலை' யுடன் தொடர்பு பெற்றுள்ளன. எ.டு அல்லியரவிணி மாலை, புலந்திரன் களவு மாலை.

பழகுதமிழ்

நாதமுனிகள் நாலாயிரத்திவ்ய பிரபந்தங்களை இயற்பா என்றும் இசைப்பா என்றும் பகுக்கிறார். 593 பாடல்கள் இயற்பாக்கள்; எஞ்சியவை இசைப்பாக்களெனக் குறிக்கிறார். இசைத்தமிழ் மிகுதி. சந்தமிகு தமிழ் மறை என்று கோமடம் எஸ். எஸ். ஐயங்கார் நாலாயிரத்திவ்யபிரபந்தத்தைப் பதிப்பித்துள்ளமை இங்குக் கருதத்தக்கதாகும். "பல்வேறு குலத்தினராகவும் நிலையினராகவும் இருந்தும் தம்முட் சமமாக மதிக்கப்பட்டுச் சமய வளர்ச்சியைக் கண்ட இப்பெரும்புலவர்களால் (ஆழ்வார்களால்) தமிழும் இசையும் நிலைபெற்றன." என்று தமிழண்ணல் குறிப்பிடுவார். திருமங்கையாழ்வார் தமிழ்மொழியை இசையை வெளிப்படுத்தும் ஊடகமாக 92 இடங்களில் குறிப்பிடுவதாக இந்திரா பார்த்தசாரதி குறிப்பிடுகிறார்.

இயல், இசை மட்டும் நாலாயிரத்திவ்யபிரபந்தத்தில் இல்லை நாடகப் பாங்கும் உண்டு என்றும் அவர் சுட்டிக்காட்டுகிறார். எடுத்துக் காட்டிற்காகத் திருவாய் மொழியில் உள்ள ஆன்ம நாடகத்தைக் குறிப்பிடலாம். கடவுளின் தரிசனம் பக்தனுக்குக் கிடைக்கிறது. அத்தரிசனத்திலேயே நிலைபேறுபெற பக்தன் விரும்புகிறான். பிரிவு நீடிக்கிறது. விருப்பமும் வலிமை பெறுகிறது. கடவுள் (பரமாத்மா), பக்தன் (ஆன்மா) என்றும் இருமாந்தர்கள் பங்கேற்கும் நாடகமாகிறது. நேருக்கு நேரான சந்திப்புக்கள் பிரிவுகள், சந்திக்க வேண்டுமென்ற துடிப்புக்கள், இறுதியில் ஆன்மவெளிப்பாடு என்றமைவதைக் காணலாம்.

"தமிழ் நாடக இலக்கியப் பாரம்பர்யத்தில் திருவாய் மொழி மிகச்சிறந்த ஒரு நாடகமாகக் கருதத்தக்கதாகும்" என்று அறிஞர் இந்திராபார்த்தசாரதி மதிப்பிடுகிறார்.

நாலாயிரத்திவ்யபிரபந்தப் பாசுரங்களை அபிநயம் பிடித்துப் பாடும் மரபு அரையர்சேவை என்கிற நிகழ்வில் உண்டு. இச்சேவை ஆழ்வார் திருநகரி போன்ற வைணவத்தலங்களில் தற்போதும் நிகழ்ந்து வருகிறது. அபிநயம் நாடகத்தின் பாற்சேர்ந்து, அரையர் சேவையில் பாசுரப்பாடலின் விளக்க நாடக நடிப்பாக அமைகிறது.

நாலாயிரத் திவ்யபிரபந்தத்தில் முத்தமிழ் இருக்கிறது. பூதத்தாழ்வார் குறிப்பிட்டபடி ஞானத்தமிழாகவும் இருக்கிறது. "தமிழ் நாட்டில் கி.பி ஐந்தாம் நூற்றாண்டுக்கும் ஒன்பதாம் நூற்றாண்டுக்கும் இடையில் நிகழ்ந்த மாபெரும் இந்து சமய மறுமலர்ச்சி இயக்கத்தின் போது தமிழ் மொழியின் ஒரு தன்மை வெளிப்பட்டது. பொதுமக்களிடம் சமய

நம்பிக்கையைவலியுறுத்தும் வலுவான சாதனமாக விளங்கியதோடு, சமய மறுமலர்ச்சியின் முக்கிய அம்சமான பக்தி என்னும் இறை - அன்பை வெளிப்படுத்தும் அழகியசாதனமாகவும் விளங்கியது பழகுதமிழ்" என்று அ. சீனிவாசராகவன் குறிப்பிடுவார்.

நற்றமிழின் வளர்ச்சிக்கு

தமிழுக்குப் பூதத்தாழ்வார் ஞானத்தையும் சேர்த்துப் புதுப்பரிணாமமாக ஞானத் தமிழ் என்கிறார். ஆண்டாளும் திருமங்கையாழ்வாரும் சங்கத்தமிழ் பற்றிக்குறிப்பிட குல சேகரர் 'நற்றமிழ்' எனப் புதுப்பரிணாமத்தை வரையறுக்கிறார். நற்றமிழின் வளர்ச்சிக்கு நாலாயிரத்திவ்யப் பிரபந்தத்தின் கொடை அளவிடக் கூடியதா? இல்லை. நற்றமிழின் வளர்ச்சிக்கு, நாலாயிரத்திவ்யபிரபந்தத்தில் புதுப்புது இலக்கிய வகைகள் உருவாக்கப்பட்டுள்ள நிலை கருதுதற்குரியதாகும். எ.டு திருப்பல்லாண்டு, திருப்பள்ளியெழுச்சி, திருப்பாவை, திருமடல் போல்வன. பிற்காலத்தில் பிள்ளைத்தமிழ், தாலாட்டு, தூது, உலா, பாதாதிகேசம், பூசல், புலம்பல், உந்திபறத்தல் போன்ற இலக்கிய வகைகள் தோன்றுவதற்கு நாலாயிரத் திவ்யபிரபந்தம் நாற்றங்காலாக இருந்திருக்கின்றன. புதிதான இலக்கியவகைகளைத் தோற்றுவித்த பெருமையும் நாலாயிரத் திவ்யபிரபந்தத்திற்கு உண்டு எனலாம்.

'பொங்கத்தம் பொங்கோ, குழமணித் தூரமே' போன்றவைகள் முற்சுட்டிய நிலைக்கு எடுத்துக்காட்டுக்களாகும். தோல்வியுற்ற அரக்கர் அபயம் வேண்டும் முறையில் அமைவது பொங்கத்தம் பொங்கோவாகும் தோல்வியுற்ற அரக்கர் அபயம் வேண்டி ஆடும் கூத்து குழமணித்தூரமாகும். இவ்விரண்டு இலக்கியவகைகளிலும் நாடகத் தன்மையும் இசைப்பண்பும் மிகுந்திருக்கிறது. நாட்டுப்புற வடிவங்களுக்குச் செவ்வியல் வடிவம் கொடுக்கும் முயற்சிக்கு நாலாயிரத்திவ்யபிரபந்தம் துணை நின்றிருக்கிறது எனக்கூறலாம்.

ஆழ்வார்களின் ஈரத்தமிழ்ச் சொற்களுக்குப் பொருள்காணும் வியாக்கியான விளக்ககாரர்கள் புதுப்புதுப் பொருள்களைக் கண்டு தமிழுக்குப் பெருமை சேர்த்தனர். சில எடுத்துக்காட்டுக்களைக் காணலாம்.

சீர்மலி செந்தமிழ் (161/4) - எழுத்து, சொல், பொருள், யாப்பு, அலங்காரம், சீர், தாளம், என்ற லக்ஷணங்களுக்கு லக்ஷியமான தமிழ்.

செந்தமிழ் - (161/4) ஆர்ஜவமான தமிழ். அதாவது நடை விளங்கு தமிழ் சப்தத்தினுடைய பிரஸந்நதையாலே உள்ளில் கிடக்கிற அர்த்தம் தானே பிரகாசிக்கும் படி இருக்கிறது.

செந்தமிழ்ப்பாடுவார் (1119/2) - கலப்பற்ற தமிழ்பாடும் முதலாழ்வார்.

தீதிலாவொன் தமிழ்கள் (3791/3) - சப்தார்த்தங்களில் குறைவற்று பஹீகுணமான த்ராமிடம்.

தென்னன் தமிழ் (2880/2) - அகஸ்தியர் தமிழ்

நடைவிளங்கு தமிழ் (657/4) - உலக நடையிலுள்ள தமிழ் உள்ளில் அர்த்தத்தில் குழிய வேண்டாதே, பதங்கள் சேர்ந்த சேர்த்திகள் பார்க்க வேண்டாதே நடை தானே ஆகர்ஷகமாயிருக்கிற தமிழ்.

வியாக்கியமன விளக்ககாரர்களி கூறும் புதுப்புது விளக்கங்கள் தமிழின் பெருமைக்கு அரண் சேர்ப்பன.

இவ்வாறு நற்றமிழ் வளர்ச்சிக்கு நாலாயிரத்திவ்ய பிரபந்தம் காரணியாகத்திகழ்ந்திருக்கிறது. முத்தமிழிலிருந்து ஞானத்தமிழாக விரிந்திருக்கிறது. சங்க மரபுகளைத் தன்னில் பொதித்துப் பொலிவு சேர்த்திருக்கிறது. பழைய தமிழ்க் கூறுகள் முழுமையான இலக்கிய வகைகளாக மலர்வதற்கு திவ்யபிரபந்தம் இடமளித்திருக்கிறது. பிற்காலத்தில் புது இலக்கியவகைகள் தோன்றுவதற்கான வித்தை வளர்த்திருக்கிறது. புது இலக்கியவகைகளையும் உருவாக்கியிருக்கிறது. சங்க இலக்கிய அகமரபிற்குப் புதுப்பரிணமாமம் கண்டிருக்கிறது. நாட்டுப்புறக் கூறுகளுக்குச் செவ்விபல் தகுதி கிடைக்க வழிவகுத்திருக்கிறது.

நாலாயிரத் திவ்யபிரபந்தத் தமிழ் திருக்கோயில்களில் வழக்கில் வளர்ந்துள்ளது. அம்முறையில் திருக்கோயில் தமிழாக வளம் பெற்றுள்ளது. அரையர் சேவையில் கூத்துத் தமிழாகவும் விளங்குகிறது. 'மாலை' போன்ற சொற்களின் ஆட்சியைப் பிற்கால வைணவ நூல்களில் தாக்கம் பெறச் செய்துள்ளது.

இவைகளை விரிவாக மதிப்பிடும்போது நற்றமிழின் வளர்ச்சிக்கு நாலாயிரத்திவ்யபிரபந்தத்தின் பங்களிப்பு மிகுந்திருப்பதைத் தெள்ளிதின் உணரலாம்.

பதின்மர் செந் தமிழைப் படிக்கிலாய், கேளாய்,
படித்தபேர் தாளையும் பணியாய்
எதிபதி சரணே சரணம் என் றொருகால்
இசைக்கிலாய், எமது வேங் கடத்தைத்
துதி செயாய், இருந்த இடத்திருந் தேனும்
தொழுகிலாய; வாழிஎன் மனனே!
மதிநுதல் அலர் மேல் மங்கை நா யகனார்
மலர்ப்பதம் கிடைப்பதுஎவ் விதமே!

- திருவேங்கடக்கலம்பகம்.

நகரத்தார் மரபுகளும், சிலப்பதிகாரமும்

(பேராசிரியர் இராம. இராமநாதன்.)

உலகத்தில் வாழும் பலவகைப்பட்ட மக்களுள்ளும் வணிகப் பெருமக்களே மக்களால் பெரிதும் மதிக்கப்பட்டுப் போற்றப்படுகின்றனர். காரணம், சமுதாயத்திற்குத் தேவைப்படும் இன்றியமையாத பொருள்களை அவர்கள் இருக்குமிடம் தேடித்தருகின்ற தொண்டினாலேயே வணிக இனம் உலகெங்கும் செல்வாக்குடன் திகழ்கின்றது. இன்றும் ஜப்பான், அமெரிக்கா, இங்கிலாந்து முதலிய நாடுகளைச் சார்ந்த வணிகப்பெருமக்கள் இந்தியாவில் பெரிதும் போற்றப்படுவதற்குக் காரணம் அவர்களின் வணிகச் சிறப்பேயாகும். கடல்கடந்து வாணிகம் செய்வதெற்கென்று `கொண்டு விக்கச் சென்ற' இனமாகக் கருதப்படுவது செட்டிநாட்டில் வாழும் நாட்டுக்கொட்டை நகரத்து மக்களே ஆவர். தொல்காப்பியம் குறிப்பிடும் மூன்றாண்டுகள் தலைவியைப் பிரிந்து இந்தத் தலைமக்கள் கற்றுவந்தது எல்லாம் பொருள் தேடும் வழிகளைத்தான் என்று துணிந்து கூறலாம். நகரத்தார்கள் இன்றும் பெருமைப்படுவதற்குக் கிடைத்திருக்கும் மிகப் பழைய தமிழ் இலக்கியம், சிலப்பதிகாரம். முன்னோர் எப்போதோ ஒரு முறை கப்பலில் செல்லும்போது, புயற்காற்றில் மரக்கலம் அலைகளால் தாக்கப்பட்டபோது, அவர்கட்கு மணிமேகலா தெய்வம் உதவியது என்ற செய்தியாலும் இம்மக்களின் கடல் வாணிக உண்மை புலப்படும். நகரத்தார்களிடம் உள்ள சில சிறந்த குணங்கள் நாணயம், உதவும் நோக்கு, வறுமையில் வாழாமை, இறைப்பற்று முதலியவை இன்றும் நிலவிவரும் செய்திகளாகும்.

சிலப்பதிகாரம் திருமணத்தில் தொடங்குகின்றது. இன்று உள்ளது போலவே பெண்ணைப்பெற்ற மாநாய்கன் மாப்பிள்ளை தேடுகின்ற செய்தியும், தன் தகுதிக்கேற்ற கப்பல் வணிகன் கோவலன் தந்தை மாசாத்துவானிடம் பெண்கொடுக்கப் பேசிமுடிக்கும் செய்தியைச் சிலப்பதிகாரம் இவ்வாறு கூறுகின்றது.

அவரை,
இருபெருங் குரவரும் ஒருபெரு நாளால்
மணவணி காண மகிழ்ந்தனர்.

திருமணம் என்றால் கப்பல் வணிகர்கள் நடத்தும் திருமணம் அல்லவா? அது எப்படி இருந்தது? கோவலன்-கண்ணகி திருமணத்தைச் சொந்தக்காரர்கட்கு மட்டும் சொல்லவில்லை, புகார் நகரம் முழுமைக்கும் சொல்லவேண்டும் என்று வீட்டுக்கு வீடு சென்று சொல்லுவது இயலாது என்பதால், யானையின்மேல் பெண்களை அமர்த்தி மாநகரமக்கள் அனைவருக்கும் அழைப்பினை விடுத்தனர் என்பது நகரத்தாரகளின் சிறந்த விருந்தோம்பல் பண்பைக் காட்டுகின்றது.

'யானை எருத்தத்து அணியிழையார் மேலிரீஇ
மாநகர்க்கு ஈந்தார் மணம்'

இன்று நம் வீடுகளில் நடைபெறும் திருமணச் சடங்கு முறைகளின் பழைமையைச் சிலப்பதிகாரத்தில் காணலாம் சிறிது காலத்திற்கு முன் இந்த வழக்கத்தினை ஊருக்குக் கலியாணஞ் சொல்லுதல் என்ற சடங்காக இருந்ததை நம்மில் பலர் அறிவர். இப்போது இச்சடங்கு வேண்டியவர்கட்கு அழைப்பிதழ் கொடுக்கும் பழக்கமாக மாறியுள்ளது. திருமண நாளன்று மணமகள் வீட்டில் அரசாணிக்கால் நடும் பழக்கம் இப்போதும் உள்ளது. திருமணத்தில் மணமகளுக்கு அணிவிக்கும் மங்கல அணியாகிய தாலியைப் பெரியோர் தொட்டு ஆசி வழங்கும் முறை இன்று இருப்பது போல் அன்றும் இருந்ததாகச் சிலம்பு கூறுகின்றது.

அவ்வழி,
முரசியம்பின முருடதிர்ந்தன முறையெழுந்தன பணிலம் வெண் குடை
அரசெழுந்ததொர் படியெழுந்தன அகலுள் மங்கல அணி எழுந்தது
மாலைதாழ் சென்னி வயிரமணித் தூணகத்து.

என்ற வரிகளின் வழி நகரத்தார் திருமணத்திற்கு அரசனுடைய ஒப்புதலும் உண்டு என்ற செய்தியும் புலனாகின்றது.

திருமணத்தில் பூ மணம் இடுதல் என்ற ஒரு சடங்கு இன்றும் உள்ளது. இச் சடங்கினைச் செய்வோர் பெரும்பாலும் மணமக்களுடைய நெருங்கிய உறவினரணாகவே இருப்பர். இதன்முலம் மணமக்கள் இவர்களெல்லாம் நமக்கு வேண்டப்பட்டவர்கள் என்று எளிதில் அறிந்துகொள்ள இயலும். இதனைச் சிலப்பதிகாரம் இவ்வாறு கூறுகிறது.

'காதலற் பிரியாமல் கவவுக்கை ஞெகிழாமல்
தீதறுக எனஏத்திச் சின்மலர் கொடுதூவி

கோவலனையும் கண்ணகியையும் பூமணமிட்டு வாழ்த்தினர் என்பதை அறியலாம்.

மிகவும் முக்கியமான ஒரு செய்தியைச் சிலப்பதிகார ஆசிரியர் நுணுக்கமாகக் குறிப்பாகக் காட்டிவிட்டுச் செல்வதை நாம் தெரிந்துகொள்வது நல்லது. திருமணத்தன்று தான் பெற்ற மகளுக்குப் பொன்னும், பொருளும் பிறந்த வீட்டார் சீதனமாகத் தருவர். திருமணமான ஓராண்டில் மணமக்கள் இருவரையும் வேறுவைத்தல் என்ற சடங்கின்வழி மணமக்கள் தனிக்குடும்பம் நடத்துவர் என்பதையும் சிலப்பதிகாரம் கூறுகின்றது.

'வேறுபடு திருவின் வீறுபெறக் காண

மனைவி தன்தாய் வீட்டிலிருந்து கொண்டுவந்த பொன்னும், பொருளும் அவளுக்கும், அவள் பெறும் குழந்தைகட்கு மட்டுமே உரிமையுடையதாக இன்றும் அந்தப் பழைய மரபு கடைப்பிடிக்கப்பட்டு வருவது பாராட்டுதற்குரியது.

மாதவியிடத்துப் பொருளெல்லாம் இழந்துவந்த கோவலனிடம் கண்ணகியே வலிய தன் காற்சிலம்பைத் தருவதாகக் கூறுகின்றாள். கோவலனுக்குப் பொருளீட்டும் எண்ணம் தோன்றியதற்குக் கூட, கண்ணகியின் இச்செயல் காரணமாகவும் அமையலாம். கோவலனைப் பொறுப்புள்ளவனாக மாற்ற எண்ணியும் கண்ணகி சிலம்பை வழங்க முன்வந்திருக்கலாம். ஊழ்வினையின் வலிமை காரணமாவும் நிகழ்ச்சிகள் நினைத்தவாறு நடக்காமலும் இருக்கலாம். இவையெல்லாம் என் ஊகங்களே தவிர, நூலில் ஒரு குறிப்பும் இல்லை. கண்ணகியும் யாரிடமும் சொல்லிக்கொள்ளாமல், முதல் முறையாக ஊரைவிட்டுப் புறப்பட்டுச் செல்வது விந்தைகளில் ஒன்றுதான். தன் கணவனைத் திருத்தி விடலாம் என்று எண்ணித்தான் அவனுடன் மாடமதுரையைக் காணச் சென்றாள் போலும்! விதி அவளுக்கு முந்திவிட்டது. தன்மனைவியிடம் அவள் காற்சிலம்பை விற்றுவருவதாகக் கூறியவன், யாரோ இருவர் அவனைச் சிலம்பைத் திருடிய கள்வன் என்று அவனிடமே கூறும்போது கோவலன் இச் சிலம்பு என்னுடைய மனைவியினுடையது, நான் இதனை விற்றுப் பொருள் ஈட்ட வந்தேன் என்று கூறியிருக்கலாமே, ஏன் வாய்பேசாமல், ஊமையாக இருந்தான்? அதற்குக் காரணம் அவன் நகரத்தார் மரபைச் சேர்ந்தவனாய் இருந்ததே காரணம். தன் மனைவியின் காற்சிலம்பை விற்றுத் தொழில் நடத்த வந்தேன் என்று கூறுவது அவன் மரபிற்கு இழுக்கு என்பதாலேயே கோவலன் உண்மையைக் கூறமுடியாமல் வாய்பேச முடியாத நிலை ஏற்பட்டது. இந்த இழிவான உண்மையைக் கூறி உயிர்வாழ்வதைவிட உயிரை இழப்பதே மேல் என்று கோவலன் வெட் டப்பட்டு இறந்தான் என்பதே இதன் உட்கிடக்கையாகும்.

நகரத்தார்களுக்கே உரிய இந்தக் காப்பியம் நம் இனத்தவர்களால் இனிமேலாவது கவனிக்கப்பட வேண்டும், நம் இனப் பெருமைகளை நாடறியச் செய்யவேண்டும். எத்துணையோ பெருஞ்செல்வர்கள் உள்ள நகரத்தார் சமுதாயம் இப்பெருங்காப்பியத்திற்கு ஆண்டுதோறும் செட்டிநாட்டில் விழா எடுத்து உலகுக்கு நம் பெருமைகளை உணர்த்தவேண்டும் என்ற என் பணிவன்பான வேண்டுகோளினை, அருள்மிகு அண்ணாமலையாரிடம் வைக்கின்றேன்.